RANJANI SABHA MYLAPORE

"குன்றுடையான்"

(அண்ணமார் கதை)

கொங்கு வள நாட்டு வரலாற்று

நாடகம்

கதை, வசனம், பாடல்

ஆசிரியர்

ப. கண்ணன்.

MADRAS STATE
RECD.
28 JUL 1967
3780
SANGITA NATAKA SANGAM.

RANJANI SABHA MYLAPORE

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

RASIKA RANJANI SABHA
29.1.68
MYLAPORE

# " கு ன் று டை யா ன் "

## நாடக உறுப்பினர்கள்

CITY POLICE OFFICE
22 JAN 1968
MADRAS-8.

1. குன்றுடையான் .................. குறுநில மன்னன்
2. பொன்னன் .................. யோகவீரன்
3. சங்கரன் .................. மானவீரன்

(குன்றுடையான் மக்கள்)

4. செல்லாத்தான் .............. பங்காளிப் பகைவன் (குன்றுடையான் தம்பி)
5. காளியப்பன் .............. வேட்டுவ மன்னன்
6. குள்ளன் .................. காளியப்பனின் கையாள்
7. இராச ராச கரிகாலன் ........ கொங்குச் சோழன்
8. வீரவாகு .................. மாவீரன்
9. செம்பன் .................. வேட்டுவ நண்பன்
10. வையம் பெருமாள் ........... பொன்னன், சங்கரனின் மைத்துனன், படைத்தலைவன்
11. சிவயோகியார் ............. அண்ணன்மாரை எடுத்து வளர்த்வர்
12. தாமரை நாச்சி ............ குன்றுடையான் மனைவி
13. அருக்காணி ............... குன்றுடையான் மகள்
14. குப்பாயி ................. அருக்காணியின் தோழி

மற்றும்

அதிகாரி, பூசாரி, புலவன், சடையன், ஆசிரியர்,
பண்ணையார், கணக்கர், குடியானவன், தூதன்,
தலையாரி, வீரர்கள் மற்றும் பலர்.

காலம்: கி.பி. 13 - ம் நூற்றாண்டு

நடைபெறும் இடங்கள்:- வாங்கல், தென்பாண்டி நாடு,
சிறுகாற்புலியூர், தலையூர், வீரமலை,
இராச ராசபுரம் (தாராபுரம்).

..................

## காட்சி - 1.

### நிழற்காட்சி

கொங்குச் சீமையின், கிராமம் ஒன்றில் இரவு நேரத்தில் பொது மக்கள் கூடியுள்ளார்கள். தீபம் எரிந்துக் கொண்டிருக்கிறது. பம்பை அடிப்போன் "அண்ணமார்கள் கதையை" பம்பை அடித்து பாடிச் சொல்கிறான். வீரமண்டியிட்டு யோகமுத்திரையிலுள்ள அண்ணமார்கள் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் ஆவலோடு கேட்கிறார்கள்.

பம்பைஅடிப்போன்: சீரோங்கும் தமிழகமே செழிப்பு நல்ல தாயகமே
பாரோங்கும் பெருமையுள்ள பைந்தமிழே! எம்தாயே
காரோங்கும் மலைநாடு கருதும் கொங்கு வளநாடு
பேரோங்கும் வீரர் கதை பாடவருள் தருவாயே

2. காவேரி வயல் பாயும் கரும்பு நெல்லு வாழைதரும்
நாவேறிப் புகழ்பரப்பும் நல்ல பொன்னி வளநாடு
நாடாளும் மணியமையா பேரான குன்னுடையார்
வாடாத மலைக்கரசி தாமரை நாச்சியல்லோ

3. கற்பு தெய்வம் கண்ணகிக்கு கட்டினரே கோயிலொன்று
காரியம் சூடமுக்கு கருதியல்லோ ஊர்ச்சபையில்
வற்புறுத்திக் கேட்டாரே வல்லூறாம் குன்னுடையார்
வாய்மை கெட்ட செல்லாத்தாள் வக்கரித்தாள் -
அப்போது

நிழற்காட்சி முடிகிறது.

***********

காட்சி - 2.

இடம்: ஊர்ச்சபை

காலம்: பிற்பகல்

(வாங்கல் ஊர்ச்சபை குன்றுடையார் தலைமையில் கூடியுள்ளது அதிகாரி, கணக்கர், செல்லாத்தாள் மற்றும் சிலர் இருக்கின்றனர்.)

குன்றுடையார்: சபையோர்களே! இன்று நாம் செய்ய வேண்டிய முடிவுகள் இரண்டு. வாங்கல் நகரில் கட்டியுள்ள கண்ணகி கோயில் குடமுழுக்கு ஒன்று. மன்னர் கேட்கும் மிகுதியான பகுதிப் பணம் மற்றொன்று. இவ்விரு காரியங்களுக்கும் குடிமக்களிடமே பொருள் திரட்ட வேண்டியிருப்பதால், இது அவர்களுக்குச் சற்றுத் தொல்லை கொடுப்பதாக இருக்கும். ஆகவே நாம் குடமுழுக்கு வைபவத்தையும் நடத்தி, சோழ மன்னருக்குப் பகுதிப் பணத்தையும் செலுத்த வேண்டியிருப்பதால் எதற்கு முதலில் வரித்தண்டல் செய்வதென்பதை நன்கு யோசித்து முடிவு சொல்லுங்கள்.

கணக்கர்: சபைத் தலைவர் என்ன சொல்றாரோ, அதுவே எங்களுக்குச் சம்மதம். கண்ணகி கோயில் கும்பாபிஷேகத்திற்குப் போன கூட்டத்திலேயே நாள் குறிப்பிட்டாச்சுங்க. அதுக்கப்புறம் வந்ததுதாங்க அரசகட்டளை. அதனாலே நாம வரிசைப் பிரகாரமே காரியங்களை நடத்திடலாமுங்க.

ஒருவர்: தீர்மானிச்சபடியே தெய்வகாரியம் மொதல்லே நடக்கட்டுமுங்க!

மற்றொருவர்: அதுதானுங்க சரி அப்படியே செய்வோம்!

குன்றுடையார்: உங்கள் அபிப்பிராயம் தான் எனக்கும் சரியென்றுபடுகிறது. கணக்கரே! வரித்தண்டல் செய்து குறிப்பிட்ட நாளில் பத்தினி கோயில் குடமுழுக்கை முடிப்போம். பிறகு அரசருக்கான பகுதி பணமும் தண்டுவோம். நாளை முதலே வரித்தண்டல் தொடங்கட்டும். பட்டியல் தயாராகட்டும். சரிதானே!

கணக்கர்: நல்லதுங்க.

செல்லாத்தாள் (எழுந்து) அண்ணா! இதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது.

குன்றுடையார்: (வியந்து) செல்லாத்தான் ! நீ என்னப்பா சொல்றே!

(எல்லோரும் எழுந்திருக்கின்றனர்)

செல்லாத்தான்: மன்னர் பகுதிப் பணம் கேட்டு கட்டளையனுப்பியிருப்பது நாட்டின் நன்மைக்காக. நமக்கு அதுதான் முக்கியம். முதலில் அதுக்குத் தான் வரி தண்டணும்.

குன்றுடையார்: இரண்டுமே முக்கியந்தான். முதலில் எடுத்தது முதலில் முடியட்டுமே தம்பி!

செல்லாத்தான்: இதற்கு நான் சம்மதிக்கவே மாட்டேன். மணியம் குன்றுடையாரும், மனைவி தாமரை நாச்சியும் பத்தினி கோயில் கட்டினுங்க, குடமுழுக்கு செய்தாங்கன்னு அது உங்களுக்குப் பெருமையாக இருக்கலாம். ஆனல் ஊர்ச் சபை அங்கத்தினன் என்ற முறையில் அரச கட்டளையை முதலில் நிறைவேற்ற வேண்டுமென்பதே எனது முடிவு.

குன்றுடையார்: அரச கட்டளையை ஊர்ச்சபை ஒரு நாளும் புறக்கணிக்காது தம்பி! நிறைவேற்றியே தீரும். கடவுள் பணியிலே பொறாமை காட்டிப் பொல்லாங்கு செய்யாதே செல்லாத்தான்!

செல்லாத்தான்: கோயில் கட்டிவிட்ட பெருமையில் கொக்கரிக்காதீங்க நீங்க!

குன்றுடையார்: செல்லாத்தான்! பத்தினி தெய்வத்தைக் கௌரவிக்கும் நமது கடமைக்காக செய்தோம். பெருமைக்காக அல்ல!

செல்லாத்தான்: அது இப்போது அவசியமல்ல!

குன்றுடையார்: செல்லாத்தான்! உண்ட சோற்றுக்கு ஊறு தேடுகிருய். இதை ஒருக்காலும் ஒப்புக் கொள்ள மாட்டேன். சபையோர்களே! நீங்கள் சொல்லுங்கள். பகுதிப் பணம் முதலிலா ? குடமுழுக்கு முதலிலா?

எல்லோரும்: குடமுழுக்குத் தாங்க முதல்ல!

குன்றுடையார்: அரசப் பிரதிநிதி அவர்களே! நீர் என்ன சொல்கிறீர்?

அரசப் பிரதிநிதி: நான் நடுநிலைமை வகிக்கிறேன்.

குன்றுடையார்: நல்லது. பெரும்பான்மையோர் கருத்தையொட்டி முதலில் பத்தினிக் கோயில் குடமுழுக்கை நடத்துவதென தீர்மானித்து அதற்கான வரித்தண்டலையே முதலில்

குன்றுடையார் : செய்யுமாறு உத்திரவிடுகிறேன்.

செல்லான்தான் : (சினந்து) இது ஊர்ச்சபையல்ல. ஊதாரிச்சபை! மதிகெட்டவர்களே! மணியம் குன்றுடையானுக்காக மன்னரோட கட்டளையைப் புறக்கணிச்சிட்டீங்க! இதன் பயனை அனுபவிக்கத்தான் போறீங்க. நான் பார்க்கத்தான் போறேன்.

(வேகமாகச் செல்கிறான். அதிகாரியும் மெல்ல நகர்கிறார்)

திரை

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

காட்சி - 3.

இடம்: மணியம் மாளிகை

( தாமரை நாச்சியும், மகள் அருக்காணியும் உரையாடுகின்றனர் )

அருக்காணி: அம்மா ! அம்மா !

தாமரை: என்னம்மா அருக்காணி !

அருக்காணி: அம்மா ! இன்னிக்கி நம்ம கண்ணகி கோயில்லெ படிக்கட்டுப் போடப்போறுங்களாம். வாம்மா, போயிப் பார்த்துட்டு வருவோம்.

தாமரை: கண்ணே ! எனக்கு வர அவகாசமில்லே, அப்பா வந்ததும். நீ அவரோடு போய் பார்த்துவா.

அருக்காணி: போம்மா எப்பவும் கோவிலுக்கின்னு வரவே மாட்டேங் கறியே....எம்மா...உனக்குக் கண்ணகி தேவியெப் புடிக்காதா?

தாமரை: அப்படியல்லமா. அதைக் கட்டுவித்த நாம்தானே அப்படி இருக்க எனக்கு எப்படி அம்மா பிடிக்காமல் போகும்.

அருக்காணி: பின்னே ஏன் வரமாட்டேங்கறே....சொல்லும்மா.. சொல்லும்மா... போ. நீ வரலேன்னு நானும் போக மாட்டேன்...ஊம்..ஊம். (அழுகிருள்)

(தாமரை நாச்சியின் கண்களில் கண்ணீர் வடிகிறது. அதைப் பார்த்த அருக்காணி அழுகையை நிறுத்தி)

ஏம்மா அழுறே.. இப்ப நான் என்னம்மா சொல்லிட் டேன். நீ அழாதேம்மா. நீ நல்ல அம்மால்ல.

தாமரை: அருக்காணி! நான் அழவில்லையம்மா...அழவில்லை. கண்ணே உனக்கு இப்போது பத்து வயது ஆகிறது. எதை யும் உணரும் பருவம் வந்துவிட்டது. இதுவரை உனக்குத் தெரியாத ரகசியம் ஒன்றை இன்று நான் உனக்குச் சொல்லப்போறேன்.

அருக்காணி: என்னம்மா அது ? சொல்லும்மா.

தாமரை: கண்ணே அருக்காணி ! நீ பிறப்பதற்கு முன்பு, உனக்கு இரண்டு அண்ணன்மார்கள் என் வயிற்றில் பிறந்தார்களடி. அதுவும் இரட்டைப் பிள்ளைகளாக.

அருக்காணி: என்னம்மா ! எனக்கு அண்ணன்மாரா ! அதுவும் இரண்டு பேரா ! (சந்தோஷத்தில் குதித்துக் கொண்டு)

அருக்காணி: அம்மா! அம்மா! இப்ப எங்கம்மா என் அண்ணன் மாரு? சொல்லும்மா. நான் இப்பவே அவங்களைப் பார்த்தாகனும் சொல்லும்மா... அம்மா அவங்க என்னைப்பாத்தா தங்கச்சின்னு கட்டிப் புடிச்சுக்குவாங்கல்ல

தாமரை: அருக்காணி! அருக்காணி! நான் பேறுகால மயக்கத்தில் இருக்கும்போதே அவர்களைக் கள்வர்கள் கவர்ந்து சென்று விட்டார்களே டீ! அவர்கள் காணாமற்போய் விட்டார்கள். (அழுகிறாள்)

அருக்காணி: (யோசித்து) அப்ப நான் என் அண்ணன்மாரைப் பார்க்கவே முடியாதா அம்மா?

தாமரை: அவர்களைத் தேடாத இடம் பாக்கி இல்லை. வேண்டாத கோயில் இல்லை. கிடைக்கவில்லையடி. நான் என்ன செய்வேன்?

அருக்காணி: (யோசிக்கவளாக) என் அண்ணமாரு எங்க இருக்காங்களோ! என்ன கஷ்டப்படறாங்களோ..அம்மா! யாரும்மா அவங்களுக்குச் சோறு போடுவாங்க? துணி குடுப்பாங்க? போம்மா உனக்குக் கல்லு மனசு. என் அண்ணன்மார் மேலே உனக்கு அக்கறையே இல்லை.

தாமரை: அருக்காணி! (மனம் குமுறி) நானு கல்மனக்காரி! உன் அண்ணன்மார் மீது எனக்கா அக்கறை இல்லை? அடிப் பாவி! அவர்களைப் பெறுவதற்கு நான் பட்ட துன்பம் உனக்கென்னடி தெரியும்? கல்யாணமாகி ஏழு வருடங்கள் எனக்குக் குழந்தையே பிறக்கவேயில்லை. என்னை வறடி வறடி என்று வையகத்தோர் தூற்றியதும், மலடி மலடி என்று மாநிலத்தோர் ஏசியதும், அதை மாற்ற நான் பட்ட பாடுகளும், கதையடி பெரியகதை. (தாமரை நாச்சியின் கடந்த கால துயர நிகழ்ச்சிகள் பம்பைப்பாட்டு மூலம் மகளிடம் கூறுவதுபோல் ஒலிக்கிறது)

<u>பம்பைப் பாட்டு</u>

"மலடி மலடி என்று மாநிலத்தோர் தூற்றினரே
வறடி வறடி என்று வையகமே பழித்ததுவே"

அருக்காணி: அது என்னம்மா? சொன்னாத்தானே தெரியும்!

தாமரை: கண்ணே! அருக்காணி! எனக்குள்ள மலடு என்னோடு நிற்கவில்லை. எனக்குரியதெல்லாம் மலடாச்சுதடி.

பம்பைப் பாட்டு

பட்டி நிறைந்திருக்கும் பால்மாடும் வெள்ளாடும்
பாதுகாப்பு நாயதுவும் பச்சை மலடாச்சுதடி
வீடில் வளர்ந்த பூனை முகட்டெலியும் பன்றியுமே
வேத னைதான் அத்தனையும் பிறாட்டு மலடாச்சுதடி.

அருங்குறை தீர்ந்திடவே அறகர்மம் செய்தோமடி
அதையேற்க மறுக்கிறரே மலடி என்ற காரணத்தால்
ஆட்டுக்கல் போட்டோமடி ஆரும் வந்து ஆட்டவில்லை
அடித்த சுமைதாங்கியிலே சுமத்துவாரோ இல்லையடி.

தாமரை: (வசனம்) ஆடுமாடு நீர்க் கொட்டி அருசம்புல் படைத்தோம். மலடியுடையது என்று மாடு தின்ன வரவில்லை. முத்துப் போல் கண்ணீரை மூகத்தோடு சொரவிட்டேன். பித்துப் பிடித்தவர் போல் ஆகிவிட்டார் உன் தந்தை

அருக்காணி: அம்மா ஐயோ...எவ்வளவு துன்பப்பட்டிருக்கிங்க நீங்க

தாமரை: இன்னும் கேளடி அருக்காணி நான் பட்டதுயரை

பம்பைப் பாட்டு

பெற்ற பிள்ளை இல்லாமையால் தத்துப்பிள்ளை வேணுமென்று
பேரான பங்காளிகள் ஊரை நாடிப்போனேமே
அரணுக் கொடி மஞ்சளும் அழகு மணிச் சின்றுடையும்
அரும்பு தண்டை சிறு சலங்கை சீதனமாய் வைத்தோமடி

கொண்டு சென்ற தேன்கதலி சீனிபலா மாங்கனியும்
கொடுத்து நான் பிள்ளைதனை கொஞ்சியே மடியில் வைத்தேன்
எடுக்கவில்லை சீர்களை கொடுக்கவில்லை ~~மைந்தர்களை~~
என் மடியில் இருந்தவனை அடித்திழுத்துப் போனரடி.

தாமரை:- கண்ணே! என் வயிறு எப்படி எரிந்திருக்கும்.

அருக்காணி: ஐயய்யயோ. ..அப்படியா செய்தா..அவ இரக்க மில்லாத அம்மாம்மா

தாமரை: கண்ணே ! கடைசியாக கற்புக்கரசி கண்ணகி தேவியைச் சரணடைந்தேன். திருச்செங்கோடுமலை சென்று தரை மெழுகித் தவங்கிடந்தேன். கருவுற்றேன், அப்போது புதிய தொரு ஆபத்து சூழ்ந்தது. வாரிசு பிறந்துவிட்டால் தனக்குப் பட்டம் பதவி கிடைக்காதே என்று கருவினன். உன் சிற்றப்பன். செல்வாத்தாள். பொறுமையும், போக்கிறித்தனமும் பொங்கி எழுந்தன. பிறக்கும்

தாமரை: குழந்தையைக் காப்பாற்ற யாருக்கும் தெரியாமல் மேழிப் பள்ளி சென்றேன். ஆண்களாக இரண்டைக் குழந்தைகள் பிறந்தன. எப்படியோ காணமற் போய் விட்டார்கள்.

அருக்காணி ஏம்மா...இது பொல்லாத சித்தப்பன் வேலையா இருக்கலாம் இல்லையா ?

தாமரை: நாங்களும் அப்படித்தான் நினைத்தோம். அவரையே நேரிலும் கேட்டோம் "எனக்கொன்றுமே தெரியாது" என்று சொல்லிவிட்டார். மகப்பேறு பார்த்த மருத்துவச் சியையும் கேட்டோம். "காளிக்குப் பலியிடும் வேட்டு வர்கள் வந்து தன்னைக் கட்டிப்போட்டு விட்டு எடுத்துச் சென்று விட்டார்கள்" என்றாள். அவர்கள் என்ன ஆனார்களோ தெரியவில்லை. அருக்காணி, கொடுந்த தெய்வமே பறித்து கொண்டால் எப்படியம்மா சகிப்பேன். எந்த மனதோடு கோவிலுக்கு வருவேன்.

அருக்காணி: அம்மா அப்பா கோவில்கட்டி குடமுழுக்குச் செய்யப் போறாரே சாமி நம்மைக் கைவிட்டுடுமா? பாரேன்! திடீர்னு ஒரு நாளைக்கு அண்ணன் மார் வந்து அருக்காணித் தங்கச்சீன்னு என்னைக் கூப்பிடப்போறாங்க

தாமரை: அடி என் செல்வமே! ...(கட்டிப்பிடித்து உச்சி மோந்து) நீ சொன்னால் அது தேவியே சொன்னது போல்தான். நான் உன்னுடன் கோவிலுக்கு வருகிறேனம்மா.

அருக்காணி: ஆகா எங்கம்மா நல்ல அம்மா...பொன் அம்மா..
(குன்றுடையார் வருவதைப் பார்த்து)
அம்மா அப்பா...வந்தாச்சு...அப்பா...வந்தாச்சு

குன்றுடையார்: கண்ணே அருக்காணி! (எடுத்து முத்தமிடுகிறான்)

தாமரை: (மனம் தெளிந்தவளாக) வாருங்கள் தன்னூர்! ஊர்ச் சபை இனிது முடிந்ததா?

குன்றுடையார்: முடிந்தது. ஏற்கெனவே தீர்மானித்தபடி கன்னிக் கோவில் குடமுழுக்கையே முதலில் செய்வதென்று முடிவா யிற்று. தம்பி செல்லாத்தான் மாத்திரம் அதை ஏற்க வில்லை. கோபித்துக் கொண்டு வெளியேறிவிட்டான்.

தாமரை: ஐயய்யோ ஊர்த்தலைமையையும் நமது சொத்துக்களையும் அபகரிக்க அமர்ந்து கிடக்கும் பங்காளிப் பகைவன் ஆயிற்றே. இதையே காரணமாக வைத்துக் மன்னரிடம்

தாமரை: கோள் மூட்டிவிட்டால்?

குன்றுடையார்: கொங்குச் சோழர் இராஜ ராஜ கரிகாலர் தங்க மானவர். மண் குதிரையை நம்பி ஆற்றிலிறங்க மாட்டார் என்று நம்புகிறேன்.

தாமரை: எனக்கென்னவோ பயமாக இருக்கிறது.

அருக்காணி: அப்பா சித்தப்பா ரொம்ப கெட்டவருப்பா அவரோட நீங்க பேசவே படாது.

குன்றுடையார்: அருக்காணி! நீ மிகவும் கெட்டிக்காரியம்மா. என்னிடம் உன் அம்மாவால் சொல்லமுடியாததைக் கூட நீ என்னிடம் சொல்லிவிடுகிறாய். சரி. இன்று கோவில், படிக்கட்டுப் போடுகிறார்கள். வாருங்கள் போய்ப் பார்த்து வருவோம்.

அருக்காணி: (தாமரையையும், குன்றுடையாரையும் விரலால் ஆசையுடன் சுட்டிக் காட்டி) அம்மா...அப்பா...

குன்றுடையார்: அருக்காணி! (என்று குழந்தையைத் தொட்டு முடிக்கிறார்)

(மூவரும் சிரித்த வண்ணம் செல்கின்றனர்)

திரை

******************************

வீதி

பறை அறிவிப்போன்

குடிமக்கள்

பறை: டும் ....டும்.....டும்....டும் இதனாலெ மகா சனங்களுக்கு தெரிவிக்கிறது என்னன்னா, நம்ம ஊரு மணியம் குன்றுடையாரவுங்களும், அவுங்க பத்தினி தாமரைநாச்சி அவுங்களும், புதுசா கட்டிருக்கிற கன்னிகோவில்லெ, இந்தச் சித்திர மாசம், பத்தாம் நாளு, வெள்ளிக் கிழமெ, விடிஞ்சு அஞ்சு நாளிகைக்கு மேலே அம்மனுக்குக் குடமுழுக்குத் திருவிழா நடக்கப்போகுது. பொதுமக்களும், தாய்மார்களும் பொண்டு பிள்ளைகளோடெ, சீர் பேத்துப் பிதுரோடெ, ஊர் ஒறவு மொறையாரோடெ, அம்மனக்கும்பிட்டு அருளெப் பெறும்படியா கேட்டுக் கொள்ளப் பட்ராங்க......டும்...டும்.....டும்.

(போகிறான்)

குடிமகன்.1. என்னங்க தம்பி ! நம்ம மணியக்காரப் பண்ணாடியும், பண்ணாச்சியும் தங்கமின்னு தங்கந்தான். ஒரு கோவிலெக் கட்டி கொட முழுக்குப் பன்றதன்னா, அது சாமான்யம் இல்லெதம்பி, அதெப் பாக்கவே குடுத்து வைக்கனும்.

குடிமகன்.2. அது சரீங்கண்ணா. ....ஊர்லெ என்னமோ கசமுசன்னு பேசிக் கறாங்களே!

குடிமகன்.1. என்னது?

குடிமகன்.2. மணியக்காரரோட தம்பி செல்லாத்தான், இராசாவோட ஆளெ வசப்படுத்தீட்டு, அண்ணனைப் பத்தி கொங்குச் சோள ராசாக்கிட்ட கோளுச் சொல்லப் போயிருக்கறாளும்.

குடிமகன்.1. தம்பி!.....நல்லவனுக்கு நாலு எதிரி இருக்கத்தாஞ் செய்வான். இது பங்காளிச் சண்டெ. ஊருமேலே வந்து விடிஞ்சிருக்கு.

குடிமகன்.2. வெபரஞ் சொல்லுங்கண்ணா!

குடிமகன்.1. தம்பி! மணியக்காரரோட பாட்டம் பூட்டங்காலத்திலிருந்தே குடும்பம், பெரிய குடும்பம். ஒழைப்பிலெலெ உயர்ந்த குடும்பம் பண்ணையம் பாக்கறதிலே, அவுங்களுக்கு ஈடு அவுங்கதான். இன்னைக்கும், மணியக்காரரு பதவியிலெ இருந்தாலும் ஏரைப் புடிச்சாருன்னா யாரும் நிக்க முடியாது. நம்ம ஊரைச்சுத்தி

குடிமகன் - 1. பத்து இருபது கல்லுக்கு ரத்துக்கு இருக்கிற காடு, தோட்டம் தோப்பு, கொரவு கரடு, குன்று எல்லாம் அவுங்களுக்குத் தான் சொந்தம். இதிலெ "குன்று" நிறையா இருக்கிற திலுலே குன்றுடையார் ங்கற பட்டப்பேறு நெலேச்சுப்போச்சு இவங்க முப்பாட்டனுக்குப் பாட்டெ, அப்ப ஆண்ட ராசாகிட்ட ஏதோ பதவியிலெ இருந்தாராம். அதுக்கு மெச்சி இதை யெல்லாம் எனுமாக் குடுத்ததாகப் பேசிக்கிறாங்க.

குடிமகன் - 2. அடடே...கதை நல்லா இருக்குதுங்களே சொல்லுங்க ஆமா, இந்த செல்லாத்தாள் மாத்திரம் ஏன்இப்படி...

குடிமகன் - 1. ஏம்பா! நல்ல பயிருக்கு நடுவிலெ நாயுருவி இல்லெ அதுமாதிரி. அண்ணனுக்கு இருக்கிற மதிப்பும் மரியாதையும் நமக்கில்லியே, நெனேச்சபடி யெல்லாம் நடக்க முடியலியேங் கற வயித்தெரிச்சல்லெ, அரசாங்க அதிகாரியெ வசப்படுத் திட்டு ராசாகிட்ட கோள் மூட்டப் போயிருக்கறான்..... என்ன நடக்குமோ ...அது அந்த ஆத்தாளுக்குத்தாந் தெரியும்.

குடிமக்ன் -2. என்ன! மணியக்காரருக்குத்தான் ஆண் வாரிசு இல்லேயே எல்லாம் இவனுக்குத்தானே வரப்போகுது ஏன் அதுக்குள்ளே இத்தனெ ஆத்தரப்பட்ரு? ஏன்?

குடிமகன் -1. ஏன் மணியக்காரருக்கு, ஆண் வாரிசு ஒண்ணுக்கு ரண்டாப் பொறந்து தப்பா...,.அது......

குடிமகன் -2. அது ஒரு கதையாண்ணு...சொல்லுங்க சொல்லுங்க கேட்டிட்டு ஊட்டுக்குப் போனுப் போச்சு

(என்று துண்டை விரித்து கதைகேட்க உட்காருகிறன்)

குடிமகன் - 1. (சலிப்புடன்) கதை கேட்டுக் கேட்டுத்தானெ இப்பக் கதையாவே நடந்திக்கிட்டிருக்கு. காரியத்தையுங் கொஞ்சம் பாக்கனுந் தம்பி. வா. வா. ...பேசிக்கிட்டே போவோம்.

திரை

...................................................

கண்ணகி கோவில்

கண்ணகி தேவிக்கு கும்பாபிஷேகம் முடிந்து, ஆராதனை செய்யப் படுகிறது. மணியும், சேகண்டியும் ஒலிக்கின்றன.

குன்றுடையான், தாமரை நாச்சி, அருக்காணி, மற்றும் பொது மக்கள், உறவினர்கள் பூஜையில் கலந்துகொள்கின்றனர்.

புலவர் பாடுகிறார்.

புலவர்: பாட்டு

கொங்குச் செல்வியே தாழினை போற்றி
குடமலையாட்டியே போற்றி, போற்றி
கற்புக்கரசியே தாழினை போற்றி
கண்ணகித் தங்காய் போற்றி, போற்றி

2. பூவும் புகையும் மேவிய விரையும்
யாவும் படைத்தே வழிபட்டு நின்றோம்.
தேவந் திகையின் தேவருந் தோழி
திருவருள் புரிவாய் வருவாய் வாழி

3. அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னர்
அருள் நெறி கண்டவர் பெருநில வேந்தன்
அனைவருமே தொழும் வினையறு நங்காய்
அன்பினுக்கரசி தென்னகத் தேவி.

-----0-----

(ஆராதனை முடிந்து பூசாரி சகலருக்கும் திருநீறு வழங்குகிறார். பக்தியுடன் அணிந்து கொள்கின்றனர்.)

குன்றுடையார்: எல்லோரும் தேவியின் அருட்பிரசாதம் பெற்றுக் கொண்டீர்களா?

(கட்டளைச் சுருளோடு அதிகாரியும் செல்லாத்தாளும் வேகமாக நுழைந்து)

அதிகாரி: முதலில் நீர் பெற்றுக் கொள்ளும் நமது மன்னரின் கட்டளையை இதன்படி இப்பொழுதே நீர் நடக்கவேண்டும்.

குன்றுடையார்: நல்லது. பிறகு கட்டளையைப் படிப்போம். முதலில் தேவியின் பிரசாதம் பெற்றுக் கொள்ளும்.

அதிகாரி: இந்தக் கட்டளையே உமக்கு பெரிய வரப்பிரசாதமாயிற்றே. அதைப் படித்துப் பாரும்.

குன்றுடையார்: (மனதிற்குள் பாதி படித்தபிறகு) ...ஆம்.....பகுதிப் பணத்திலும் மிகுதிப் பணம் கேட்டபோது எமது கட்டளையைப் புறக்கணித்தீர். அரசாங்கக் கடமைகளைச் செய்ய மறுத்தீர்.

குன்றுடையார் : ஆகவே ஊராட்சித் தலைமை இனி உமக்கில்லை. "வாங்கல்" மணியம் பதவியையும், வளமான இறையிலி நிலங்களையும் நீர் இழக்கின்றீர். இன்று முதல் வாங்கல் ஊராட்சித் தலைவர், உமது தம்பி செல்லாத்தானே. எல்லாப் பொருள்களையும் பொறுப்பையும் உடனடியாக அவரிடம் ஒப்படைத்திட வேண்டும். (தனக்குள்ளாக) எல்லாம் பொருள்களையும் பொறுப்பையும் உடனடியாக செல்லாத் தானிடம் ஒப்படைத்திட வேண்டுமா?

செல்லாத்தான் : ஆமாம் அண்ணு ஆமாம். உங்களுடைய வாங்கல் மணியம் தலைமைப் பதவி, நஞ்சை புஞ்சை எல்லாம் இனி எனக்குச் சொந்தம் (சிரித்தல்) இந்த செல்லாத்தானுக்கு சொந்தம். (சிரிப்பு)

தாமரை : (மனம் குமுறி) ஐயோ நாதா! இது உண்மைதானு?

குன்றுடையார் : ஆமாம் தாமரை நாச்சி, மன்னவரின் கட்டளையும் அப்படித் தான் சொல்கிறது.

தாமரை (அம்மனைப் பார்த்து) தேவீ! பலித்துவிட்டதே என் சந்தேகம். கோள் மூட்டுவதில் கெலித்துவிட்டானே பங்காளிப் பகைவன். பத்தினித் தெய்வமே! பங்கமகற்றும் கொங்கு செல்வியே! கள்ளமற்ற எங்களுக்கு இந்த கதியா? பொறுமை யற்ற எங்களுக்கு இந்தப் பொல்லாங்கா? உனக்குக் கோயில் கட்டி குடமுழுக்குச் செய்யும் வேளையிலா இந்தக் கொடுமை நேரவேண்டும். எப்படியம்மா சகிப்போம். இப்பெரும் சோதனையை எப்படி சகிப்போம்.

செல்லாத்தான் : (சிரித்து) அழுது புலம்பும் அண்ணியாரே! காணுமற்போன உங்கள் குழந்தைகள் போன வழியிலேயே உங்களுடைய பட்டம் பதவி, மானம், மரியாதை யெல்லாம் மடிஞ்சு மண்ணுப் போயிட்டுது அண்ணி, மண்ணுப் போயிட்டுது.

தாமரை ஆ! நான் பெற்ற குழந்தைகள், மடிந்து மண்ணுகப் போனுர்களா இல்லை. . அவர்கள் மடிந்திருக்க முடியாது. மடிந்திருக்கவே முடியாது.

செல்லாத்தான் : அதை நீங்க உணர்ந்திருக்கவே முடியாது அண்ணி. . ஆமாம். . இப்போது எனக்கென்னபயம்.(சிரித்து) அண்ணி! தவமாத்தவங் கெடந்து தலைமறைவாப் போயி பெற்றெடுத்தீங்களே. ரட்டைக்கொழுந்துங்க, அதை, மகப்பேறு பார்க்க நான்

செல்லாத்தான்: அனுப்பிச்ச மருத்துவச்சி அப்பவே கழுத்தைத் திருகி, காட்டிலே போட்டுட்டா. (சிரித்து) அதை எப்பவோ நாய் நரிங்க தின்னு ஏப்பம் விட்டிருக்கும். செத்துப் போன பிள்ளைகளும் சிதறிப் போன சொத்தரங்களும் கிடைக்கும்னு, இனிமே நீங்க கனவுகூடக் கான முடியாது.

தாமரை: (பதறியவளாக) அட குலத்துரோகி! கொலைபாதகா! சொத்து சுதந்திரங்களுக்கு ஆசைப்பட்டு, சூழ்ச்சியால் மடித்தாயா நான் பெற்ற செல்வங்களை பொறுமைத் தீயிலே பொசுக்கிவிட்டாயா என் பொன்னுன மக்களை

குன்றுடையார்: எவ்வளவு பெரிய பாதகத்தைச் செய்துவிட்டாயடா படுபாவி நாசகாலா, இதைவிட நஞ்சிட்டு எங்களைக் கொன்றிருக்கலாமே

செல்லாத்தான்: உங்களைக் கொன்று போட்டால், சொத்துக்கு வாரிசா உங்க பிள்ளைங்க வந்திடுவாங்க..அப்புறம் எனக்கென்ன கிடைக்கும்.

அருகாணி: சித்தப்பா! நீ ஒரு நல்லபாம்பு. எங்க குடியைக் கெடுத்திட்டு நீ மாத்திரம் நல்லா பொழைச்சிருவியா?

செல்லாத்தான்: (பெருஞ் சிரிப்பு) அண்ணமார்களுக்குப் பரிஞ்சிட்டி, அம்மணி அருக்காணி பேச்சரயோ, பெண்ணுப் பொறந்ததாலே பொழைச்சே போ...அதிகாரியாரே..

அதிகாரி: அய்யா ....

செல்லாத்தான்: நாம உடனே மாளிகைக்குப் போகணும், மணியம் பதவியை ஏத்துக்கணும். இவுங்க அனுபவிச்ச சொத்து சொகமெல்லாம் என்னோட கைக்கு இப்பவே வந்தாகணும் புறப்படுங்க.

தாமரை: (அம்மன் பக்கம் திரும்பி) பத்தினித் தெய்வமே! கண்ணகி தேவி! கண்ணகி தேவி! இது ஞாயமா?

(தாமரை நாச்சியின் அபயக் குரலைக் கேட்டதும் போன செல்லாத்தான் திரும்பி வந்து)

செல்லாத்தான்: ஆத்திரப்படுகின்ற சூத்திரங்கயிரே! அண்ணியாரே! இந்தக் கண்ணகி தேவியே மடிதட்டி வந்தாலும் நீங்க இழந்ததை மறுபடியும் பெறவே முடியாது. (வெறிச் சிரிப்போடு போகிறன்)

(கொதிப்பையும், குமுறலையும் அடக்கிய தாமரை நாச்சி ஏதோ தீர்மானித்தவளாக)

தாமரை: புலி வாழும் காட்டிலே புல்வாய் மேயக்கூடாது. கொடுங் கோலன் ஆட்சியிலே குடியிருக்கக்கூடாது. புறப்படுங்கள் நாதா! நா- நாம் எங்கேனும் செல்வோம். (அம்மன் பக்கம் திரும்பி)

தாமரை: கொங்குச் செல்வியே! பத்தினித் தெய்வமே! உன் சந்நிதி யில் தவங்கிடந்து பெற்ற எந்த என் மைந்தர்களை மடிந்து மண்ணாகிவிட்டார்களென்று கொக்கரிக்கிறாளே. அந்த என் மைந்தர்களைக் கொண்டே இழந்த எங்கள் வாழ்வனைத்தையும் நீ மீட்டுத் தரவேண்டும். உன் மேல்–ஆணையிட்டுக் கேட்கிறேன் தாயே. ஆணையிட்டுக் கேட்கிறேன்.

<u>பாட்டு</u> (தொகையரா)

(மனத்தில் எதிரொலி)

ஆணையிட்டே குறையுரைத்தாள் அமைதி கெட்டே தனைமறந்தாள்
சாணையிட்ட வாளைப்போல் தாமரையாள் கரைந்தனளே
வானைவிட்ட முழுமதிபோல் வளமனைத்தும் விட்டவராய்
வழி நடந்தாள் கண்ணகியால் தம்மையவர் ஒப்படைத்தே.

(போகின்றனர்.)

------0-------

## காட்சி - 6.

ஊருக்கு வெளிப்புறம்

(மூவரும் வருகிறார்கள்)

அருக்காணி: அம்மா! அப்பா!

குன்றுடையார்: என்னம்மா?

அருக்காணி: ரத்தங் கொதிக்குதப்பா. அண்ணமாரை வஞ்சகமாக கொன்னு போட்ட சித்தப்பனை, நாம சும்மா விட்டுட்டா போறது?

குன்று: எல்லா வகையிலும் நாம் இழந்துவிட்டோம். அருக்காணி, ஏற்றம் பெறுகின்ற காலம் வரும். அப்போது பார்த்துக் கொள்வோம்.

அருக்கா: பாத்துக்குவோம்னு சொல்லாதீங்கப்பா. செஞ்சிட்ட குத்தங்களுக்காக சித்தப்பனைத் தண்டிக்கனும் அவரு கதறிக் கதறிப் பொலம்பனும். அதை நான் கண்ணுலெ பார்க்கனும்! இல்லேன்னு எம்பேரு அருக்காணி இல்லே..

தாமரை: என் கண்ணே! (கட்டி அணைத்து) குற்றம் பொறுக்காத நீ கண்ணகி தேவியின் பரம்பரையம்மா. நமது எண்ணம் நிறைவேற சக்தித் தெய்வந்தான் அருள்புரிய வேண்டும.

குன்று: சரி ..வாருங்கள் ..நாம் தென் பாண்டிச் சீமைக்குச் செல்வோம் (போகிறார்கள்)

"ஆணையிட்டே கூறுரைத்தார்" என்ற பாட்டே சோகமாக ஒலித்துக் கொண்டிருக்கிறது.

------0------

## காட்சி - 7.

காட்டுப் பிரதேசம்

கால் நடையாக மூவரும் போய்க் கொண்டே இருக்கின்றனர்.

------------

காட்சி – 8

பண்ணையார் வீடு

(விபூதி, ருத்ராட்சம், பூணூல் அணிந்த பண்ணை ஐயர் வீற்றிருக்கின்றார். குன்றுடையான், தாமரை நாச்சி, அருக்காணி ஆகியோர் நின்றிருக்கின்றனர்.)

பண்ணை: கொங்குச் சீமையிலேருந்து! இந்த தென் பாண்டிச் சீமைக்கு வந்திருக்கேள். சிரமந்தான்...."ஏறழுவோம், வயலடிப் போம், நாத்து நடுவோம், களை எடுப்போம், கண்டு மொதல் செய்வோம்"னு சொல்றேள். நியாயந்தான். ஆனா ஒங்களோட தோற்றத்தெப் பார்க்கறச்சே அப்படி செய் வேன்னு நேக்குத் தோணல்லே....என்னு அங்கலட்சணங்களிலே உழைக்கிற அடையாளமே தோணல்லியே! ...மெருகின்னு மின்றது! போகட்டும் என்னோட கேள்விக்கு பதில் சொல்லுங்க பார்ப்போம்.

குன்றுடையான்: கேளுங்கள் சாமி:

பண்ணை: ஏர்க் கலப்பையிலே எத்தனை வகையுண்டு?

குன்று: "நாட்டுக் கலப்பை, கொழுக் கலப்பை, குண்டகை, கொர்ரு, பெத்தடக்கா" என்று ஐவகையுண்டு. இவற்றிலே முக்கியமானது நாட்டுக் கலப்பை. இது நஞ்சைக் கேற்றது புஞ்சைக்கேற்றது. கொழுக் கலப்பை.

பண்ணை: பேஷ்..விவசாயக் கருவிகளோட நாமங்கள் நன்னாத் தெரியுமோ

குன்று: மண்வெட்டி, கடப்பாறை, கோடாலி, குத்தாலி, வெட்டரி வாள், கருக்கரிவாள், ஏர், ஏற்றம், பரி, வடம், வண்டி, கொண்டி எல்லாம் தெரியும். இவற்றைக் கையிலே பிடித்து கடுமையாக உழைக்கவும் தெரியும்.

பண்ணை: பேஷ்! பேஷ்...எருவைப் பத்தி என்ன தெரியும்?

குன்று: மாட்டுச் சாணம், ஆட்டுச் [illegible], புழுக்கை, பசுந்தாள், எலும்பு, மீன் உரம், பிண்ணாக்கு, அவுரி, கடற்பாசி, வண்டல் மண், உப்புப் போன்ற பலவகை எருக்களுண்டு.

தாமரை: "எரு" செய்வகை, இவர்தான் செய்ய மாட்டாரே.

குன்று: "பசு கன்று போடாவிட்டால் பால் கறக்காது நிலம்– உரம் போடாவிடில் பலன் கொடுக்காது.

தாமரை: எந்த மண்ணுக்கு என்ன உரம் போடுவதென்ற முறையுண்டு அதுவும் எங்களுக்குத் தெரியும்.

பண்ணை: வரகு என்ன தானியம்?

குன்றுடையார்: கெட்டியான புஞ்செய் தானியம்.

தாமரை: வரகுதின்னும் பெருங்குடி வேளிர் நாங்கள்

பண்ணை: ஓ.! வேளாளரா! இப்பத்தாம் புரியுது. குன்றுடையானை (உற்று கவனித்தவாறே) உம்ம தோற்றத்தைப் பார்த்தே நீர் யாருன்னு நான் தீர்மானிச்சுட்டேன்..இருந்தாலும் ஒரு சந்தேகம் விதி உங்களோடெ விளையாடிட்டுது...காலும் வரும் இப்ப நீர் சொன்ன ஏரோ, கலப்பையோ கருவிகளோ எதுவும் எங்கிட்டக் கெடையாது. பெரியவா வச்சுட்டுப் போன பூமி இருக்கு ஏதேஷ்டமா. ஊழுது பாடுபடுங்கோ. வெளைச்சல்லெ மாத்திரம் பாதிவ்யெ, குத்தகையா நேக்குக் கொடுத்திருங்கோ. நீங்க வேளாளர், நன்னாப் பாடுபடுவேள் நன்னா வருவேள்...குத்தகைய மாத்திரம் கொறைச்சுப்புடாதேள்...ஏன்னா? நேக்கு ஏழு பெண்கள். இப்பவேறெ ஆத்துக்காரி எட்டுமாசம்...விவாகச் செலவெ நெனைச்சு வெறுமனே கதி கலங்கி நின்னுண்டிருக்கேன்.

குன்று: சுவாமி! நாங்கள் மனதார உழைக்கிறோம். உங்கள் மனம் குளிர பங்கும் கொடுக்கிறோம்.

பண்ணை: ரொம்ப சந்தோஷம்

அருக்காணி: சுவாமி! நான் ஒன்னு கேக்கட்டா?

பண்ணை: என்னடி பொண்ணே?

அருக்காணி: இப்ப நாங்க ஓழைக்கப் போறோம். நீங்க என்ன செய்யப் போறீங்க?

பண்ணை: அடி வாண்டுப் பயமகளே! என்ன குறும்படி நோக்கு.

(அடிக்க கை ஓங்குகிறார். அருக்காணி பெற்றோர் மறைவில் ஒளிய மூவரும் சேர்ந்து சிரிக்கின்றனர்.)

.......0.......

காட்சி - 9.

மணியம் மாளிகை

(மணியம் செல்லாத்தான் மதுபோதையில் இருக்கிறான். குள்ளனின் தங்கை, கவர்ச்சிப் பெண் சொக்கி, பாடி ஆடுகிறாள்.)

பாட்டு.

சொக்கி: பாட்டு வேணுமா ? ஆட்டம் வேணுமா?
பசி தீரப் போதை வேணுமா?
நீட்ட வேணுமா, நெளிய வேணுமா?
நிலையான இன்பம் வேணுமா?
இன்னும் வேணுமா ?
இதுவே போதுமா ?

காக்க வேணுமா கருத்து வேணுமா
கைகோர்த் தாடவே வேணுமா?
தாக்க வேணுமா தனிமை வேணுமா
தரமான சுவை வேணுமா?

இன்

செல்லாத்தான்: ஆஹா! கொஞ்சுமொழிக் கோகிலமே! எனக்கு இது போதாது. இன்னும் எல்லாம் வேணும் (தள்ளாடியவனாக அவளைப் பிடிக்கப் போகிறான்.) அப்போது கணக்கர் வர சொக்கி உள்ளே போகிறாள்)

கணக்கர்: ஐயா! ஐயா! தலையூர்த் தலைவன் காளியப்பனோட மந்திரி குள்ளன், ரொம்பக் கோபமா வந்திருக்காருங்க. உடனே உங்களைப் பாக்கணுமாம்.

செல்லா: (போதை சற்று தெளிய) என்ன? தலையூர் கள்ளனா.. ஆங்.......சொக்கியோட அண்ணன்..! (யோசித்து) ஆமா...அவன்..என்னோட நண்பன். வரட்டுமே

(குள்ளன் வருகிறான்)

குள்ளன்: நண்பன்னுதான் நானும் நெனைச்சிருந்தேன். இப்ப அதை மாத்திகிட்டேன். செல்லாத்தான்! நீ ஒரு துரோகி

செல்லா: நான் துரோகியா? நானா? இல்லவே இல்லே குள்ளா

குள்ளன்: நண்பனாகவந்தே. நாலு நாள் என் வீட்டிலே தங்கி இருந்தே குடிச்சுக் கொம்மாளமடிச்சே, கடைசியா எந்தங்கச்சி சொக்கிமேலே கண்ணைப்போட்டு, சொல்லாமக் கொள்ளாமக் கூட்டியாந்திட்டியே, இது துரோகமில்லாமே எது துரோகம்?

செல்லாத்தான் : அவசரப் படாதே குள்ளா! இது துரோகமல்ல.. காதல் சொக்கியோட ஆட்டமும் பாட்டும் என்னைச் சுவ்விப் போட்டுது. அவளும் எம்மேலே ஆசைவச்சுட்டா. நான் சொக்கியைக் கண்ணாலம் கட்டிக்கறங் குள்ளா.

குள்ளன். எங்கிட்ட இதை நீ மொறைப்படி கேக்க வேண்டாமா? நாங்க வேட்டுவ குலம், நீங்க வேளாளர் குலம். இந்த சம்பந்தத்தை ஊரு உலகம் ஒத்துக்குமாங்கறேன்?

செல்லாத்தான் : காதலுக்கு ஏதய்யா சாதியும் குலமும்? ஊரும் ஒலகமும் ஆளோட வல்லமையெ வச்சுத்தான் எதையும் பேசும். இப்ப நான் வாங்கல் ஊராட்சித் தலைவன் சொக்கியெக்கட்டிக்க எனக்கு யோக்யதை உண்டா இல்லையா? நீயே சொல்லேன்.

குள்ளன் : எல்லாத் தகுதியும் இருக்குதுங்கறேன். இருந்தாலும் எதுக்கும் ஒரு முறை வேணுமில்லே,

செல்லா : ஆமாமா! உன்னைக் கேக்காதது ஒரு குறைதான். இதோ கேட்டுப் போட்டேன். சரின்னு சொல்லு மச்சான். இந்த வாரத்திலியே கல்யாணத்தை முடிச்சுப் போடுவோம்.

குள்ளன். சரிங்கறேன். அப்படியே நடத்திப் போடுவோம். பரிசம்?

செல்லா : உன் கை நிறையக் கொடுக்கறேன்.

குள்ள : அது சரி, ரொம்ப சரி, ரொம்ப சரி,

செல்லா : யோவ் கணக்குப்பிள்ளை!

கணக்கர் : ஐயா!

செல்லா : எம் மச்சானுக்கும் இந்தக் கிளாசிலே போடு (மதுவை ஊற்றுகிறான். செல்லாத்தானும் வேண்டுமென்கிறான்)

கணக்கர் : வேண்டாமுங்க நீங்கதான் ஏற்கெனவே ஆச்சுதுங்களே. எதிலேயும் ஒரு கணக்கு வேணுமுங்க.

செல்லா : (கடுமையாக) ஏய் கணக்கா! எனக்கா புத்தி சொல்றே. அந்தக் கணக்கு வழக்கெல்லாம் உன்னோட வச்சுக்க இது வேறெ கணக்கு (உறக்க) போடா! தீந்து போயிட்டுதா! இன்னும் ரண்டு சூப்பி கொண்டுவா....ஓடு...ஓடு...(கணக்கப் பிள்ளை ஓட செல்லாத்தான் சிரிக்கிறான்)

(விடிவெள்ளி முளைத்ததும் குன்றுடையான் தோள்மீது ஏர்சுமந்து பாடிய வண்ணம் வருகிறான். உதய சூரியன் எழும் நேரம் கையில் விதைப் பெட்டியுடன் தாமரை நாச்சி வருகிறாள். இருவரும் உழைக்கிறார்கள். காதல், கனிவு, உழவு, இல்லறம். குறள் நெறி விளக்கங்கள். மாலை நேரம். அருக்காணியும் வந்து வயல் வெளியில் கூடமாட வேலை செய்கிறாள்.)

பாட்டு,

குன்றுடையான்: காரிருள் நீக்கிடவே சூரியன் தோன்றுகிறான்
கருத்துடன் ஏருழுது விதைத்திடும் காலமிது - விதைத்திடும் காலமிது
பாரினைச் செய்வதிலும் பேருண்டு புகழுண்டு
நாமிருவரு மிணைந்தே நல்வினையைச் செய்குவமே - நல்வினையைச் செய்குவமே.

தாமரை: மாரி பெய்து மண் ஊர்ந்து ஏரியது நிறைவதுபோல்
மாடுகட்டிப் பால் கறந்து வீடுகட்டி வாழ்குவமே - வீடுகட்டி வாழ்குவமே
காரியத்தில் கண்வைத்தே காடு வெட்டிக் கழனி செய்து
காராளர் குடிதழைக்க ஏராளம் விளைத்திடுவோம் - ஏராளம் விளைத்திடுவோம்.

(சந்தம் வேறு)

குன்றுடையான்: பார் முழுதும் ஏர்முனையில் வாழுதடி வண்ணமயில்
தாமரையே ஏனடியே தாமதம்? - வந்து
கூறடியே வேளாண்மை செய்விதம்.

தாமரை: பொன் விளையும் பூமியிது பொங்கிடுதே ஊற்றதுவும்
பூட்டிடுக ஏரதனை இக்கணம் - நன்கு
ஓட்டிடுக விதையை விதைக்கணும்.

(சந்தம் வேறு)

குன்று: சுழன்றும் ஏர்ப்பின்னது உலகென்ற உண்மையை சொன்னவர்
வள்ளுவர் மறவாதே! நங்காய்
அன்னது ஆயிரம் பொன் பெறும் மாதே

தாமரை: இழந்த நம் செல்வமெல்லாம் சிறந்து வாழ்ந்தாலும்
எடுப்பதும் கொடுப்பதும் உழவாமே - மச்சான்
துடிப்புடன் தொழிலினைப் புரிவோமே.

(இது சமயம் பண்ணையார் வந்து, அவர்களைப் பார்த்து சந்தோஷப்பட்டவராக....)

பண்ணையார்: அடடா! புருஷனும் பெண்ஜாதியும் என்ன பாங்கா உழைக்கறா.

காட்சி - 10. 

பண்ணையார்: நல்ல சமயத்திலெ வந்தா இவா, இந்தக் காமதேனுவும் கற்பகவிருக்ஷமும் வரல்லேன்னு, இப்ப என்குடும்பத்திலெ பால் பொங்காது. இப்படிக் காடெல்லாங் கழனியாகி, நெல்லுங் கரும்பும் வெளைஞ்சிருக்காது. கொங்கு நாட்டாங் கையோ, என்னுடை பணப்பையோன்னேன்.

(மகிழ்வோடு போகிறார்.)

**********0**********

மணியம் மாளிகை

(மணியம் செல்லாத்தாள் கையில் சாட்டையுடன் நிற்கி. எதிரில் ஒரு குடியானவன் நடுங்கிய வண்ணம் இருக்கிறுன்)

செல்லாதத்தாள்: (சினந்து) டேய் ! காட்டுப் பயலே. வரிதண்ட வந்த தண்டல்காரனை எதிரடிச்சுப் பேசினியாமே..பேசுவையா? ...பேசுவையா? (சாட்டையால் அடித்தல்)

குடியான: ஐயோ சாமி! நான் எதிரடிச்சுப் பேசலீங்களே. போன மாசமே வரியைக் குடுத்திட்டேன்னு, சொன்னேனுங்க.

செல்லா: எந்தண்டல் வரிகேக்க வந்திட்டா, நானே வந்த மாதிரி: மரியாதையாக் கொடுக்கணும். கொடுக்காம இருந்தாலும் கொடுக்கணும், கொடுத்திருந்தாலும் கொடுத்தாகணுமடா.

குடியா: அறுத்ததுக்குமேலே அறுக்கறது அநியாயங்க சாமி அநியாயங்க குன்றுடையார் காலத்திலே இப்படி யெல்லாம் நடக்கலீங்களே

செல்லா: (பொங்கியவளுக) அப்பொ அவெ நல்லவன், நான் கெட்டவனு அநியாயக்காரனு....(அடித்தல்) (கணக்கர் வருகை)

செல்லா: கணக்கரே!

கணக்கர்: அய்யா!

செல்லா தண்டல்காரனை எதுத்தானும் இந்தத் தடிப்பயல். இவனோட கணப்பப்பாரய்யா, தீத்துக் கட்டிடுவோம்.

கணக்: (புரட்டிப் பார்த்து) கணக்குத் தீந்து போச்சுங்க

செல்லா: உசிரோட இன்னும் இருக்கிறனேய்யா.

கணக்: ஆமாங்க நிலவரி, நீர்வரி, தலைவரி, தண்ட வரி, எல்லா வரியும் கொடுத்திட்டான். அதனுலே இருக்கிறானுங்க.

செல்லா: "திமிர் வரி" என்ற இன்னும் வாங்கலெ?

கணக்கர்: அப்படி ஒருவரி இதுவரைக்கும் நம்ம மணியத்திலேயே இல்லேங்க.

செல்லா: இனிமே அது உண்டு.

கணக்: உத்தரவுங்க. (தலைகுனி) கணக்குத் தீந்தே போகும்.

குடி: அய்யோ எசமான்! நாம் புள்ளே குட்டிக்காரனுங்க தாங்க மாட்டேன் சாமி (காலில் விழுந்து அழுகிறுன்.)

கணக்க: பாவம். கொஞ்சம் கொறைச்சுப் போடுங்க

செல்லாத். சரி..மூணு பொன்னு செலுத்திப் போடு..போ..(தயங்கி நிற்கிறுன்) சவுக்கை எடுக்க ஓடுகிறுன்) யோவ் கணக்கா! என்னய்யா எதுக்குமாறு பண்ண ஆரம்பிச்சுட்டே.

காட்சி - 11.

கணக்கர்: (அஞ்சி) இல்லீங்களே..எஜமான் சொன்னபடி எதையும் செஞ்சபடி இருக்கிறனுங்களே...

செல்லா: எங்அக இருக்கரெ ....பாருன்னு சொன்னு பாக்கி இவ்வளவுன்னு சொல்லனும் . புராவையுங் கொடுத்திருந்தாலும் புது வரி ஒன்னு சொல்லனும். இது மனியும் சம்பந்தப் பட்ட காாயமையா எப்படியும் பணம் சேர்த்தாகனும்.. இதுக்கெல்லாம் நீ ஒத்துழைக்கலெ..(ஙவுக்கைச் சொடுக்கி) உங்கணக்கையும் தீத்திடுவே.

கணக்: அய்யோ! எஜமான்! குறிப்பறிஞ்சு நடக்கறனுங்க. பழி பாவம் பாக்கலிங்க என்னை வேலையிலேருந்து மட்டும தள்ளிப் போடாதீங்க...

செல்ல: பலே...பலே.....(சிரித்தல்)

******0*******

(குடிசைக்கு வெளியே ஓர் ஆசனத்தில் உழவன் கோலத்தில் அமர்ந்திருக்க, தலையில் புல்கட்டுடன் வருகிறாள் தாமரை நாச்சி).

தாமரை: கண்ணாளா!

குன்றுடையான்: உம்!

தாமரை: மாளிகையிலே வாழ்ந்ததை எண்ணி மனம் கலங்குகிறீர்களா?

குன்றுடையான்: இல்லை.

தாமரை: குடிசையில் வாழ்வதை எண்ணிக் குழம்புகிறீர்களா?

குன்றுடை: இல்லை.

தாமரை: உழைப்பதிலே சோர்வா?

குன்டையான்: இல்லை.

தாமரை: பிறகேன் இந்தக் கவலை?

குன்றுடையான்: மண் குடிசையில் வாழ்வதும், உழைத்துப் பிழைப்பதும் மனதிற்கு சாந்தியளிக்கின்றன. ஆனால் (குமுறி) செல்லாத்தாளால் சாகடிக்கப்பட்ட நமது மைந்தர்களை எண்ணிவிட்டால், தாமரை நாச்சி என் இதயத்தில் செந்தழல் மூண்டெழுந்து என்னமெல்லாம் தீய்ந்து போகிறதே.

தாமரை: (கலங்கி) அந்தத் துயரம் எனக்கு மட்டும் இல்லையா. பெற்ற வயிறு பற்றி எரிகிறதே. பங்காளிப் பகைவனால் வஞ்சிக்கப் பட்டோம். கெட்டழிந்து போவோம் என்று எண்ணினான். உழைப்பின் மூலம் அவனது எண்ணத்தைப் பொய்யாக்கி முளைத்துள்ளோம். இப்போது நாம் என்ன செய்ய வேண்டும். தெரியுமா?

குன்றுடையார்: என்ன செய்ய வேண்டும்?

தாமரை: புதியதோர் உறுதி காணவேண்டும். போர்க்களத்திலும் சிறந்தது. ஏர்க்களம். பாடுபட்டுப் பயிர் விளைத்து மாடு மனை செல்வத்தோடு நாம் எழில் வாழ்வு பெறுவோம். வாங்கலில் இடமில்லையென்றாலும் சிறபாற்புலியூர் சென்று சீரும் சிறப்புமாக வாழுவோம். இது உறுதி. கண்ணாளா! கவலையை விட்டுக் கடமையைச் செய்யுங்கள் அது போதும்.

குன்றுடையார்: நல்லது இன்று அருக்காணிக்கு முத்தமிழ் கல்வி போதிக்க ஆசிரியர் வரப்போகிறார் அல்லவா?

தாமரை: ஆம். அவர் வரும் நேரமாகிவிட்டது. அருக்காணி! அருக்காணி!

அருக்காணி: இதோ வந்துவிட்டேனம்மா.

தாமரை: வாடி எங்கண்ணு அதோ வாத்தியார் வருகிறார்.

(வாத்தியார் வருகிறார்)

அருக்காணி: வணக்கம் அய்யா

ஆசிரியர்: நல்லா இரும்மா. அய்யா வணக்கம்.

குன்றுடையான்: வாருங்கள் வித்தகரே! வணக்கம். உட்காருங்கள்

(இருவரும் உட்காருகின்றனர்)

இவள் எங்கள் செல்வி அருக்காணி. இவளுக்குப் பயனுள்ள கல்வியும், முத்தமிழ்க் கலையும் கற்பிக்க வேண்டும்.

ஆசிரியர்: நல்லது குழந்தைக்கு வயதென்னங்க?

குன்றுடையார்: பத்து வயசு சுட்டித்தனம் மிகக் அதிகம்

ஆசிரியர்: அப்படித்தான் இருக்கணும். குழந்தை உன் பெயரென்னம்மா?

அருக்காணி: அருக்காணி! கெட்டவங்களுக்கு நான் கழக்காணி!

ஆசிரியர்: பலே! எது வரைக்கும் படிச்சிருக்கே?

அருக்காணி: இது வரைக்கும் படிச்சது பால பாடம். இனிமே படிக்கப் போறது பைந்தமிழ்ப் பாடம்.

ஆசிரியர்: நல்லது உன்னுடைய விருப்பமென்னம்மா?

அருக்காணி: பெண்ணுக்கு பெருமை தேடறது என்னோட விருப்பம். அவுங்களை இழிவு படுத்தற ஆண்களை வெறுக்கறது எம் பழக்கம்.

ஆசிரியர்: பலே! பலே! கலைகளைப் பற்றி ஒனக்கு ஏதாவது தெரியுமாம்மா?

அருக்காணி: ஓ. பாட்டும் கூத்தும் கற்கண்டு. அதிலே ஆசை மிகவுண்டு.

ஆசிரியர்: அதை நான் பூர்த்தி செய்கிறேன். வீரத்தைப் பற்றி உனக்கு என்னம்மா தெரியும்?

அருக்காணி: மானம், குலம், கல்வி, தானம், தவம், புகழ், எல்லாத்தையும் காக்கறது வீரம். அதுதானே மனித வர்க்கத்தோட சாரம்?

ஆசிரியர்: பலே! பெரிய பெரிய விஷயத்தைத் தெரிஞ்சு வச்சிருக்கியே. அருக்காணி! எதிர்காலத்திலே ஒரு சக்தியுள்ள வீராங்கனையாக நீ விளங்குவாய். இப்படி வாம்மா. நான் பாடுறபோல் பாடு பார்க்கலாம்.

(ஆசிரியர் பாட, அருக்காணியும் பாடி ஆடுகிறாள்)

பாட்டு

பாட்டு

கல்வியன்னை கலைமகளைப் போற்றுவோம்—வீர

காவியங்கள் படைத்துலகை மாற்றுவோம்

வெல்வதற்கு வேலெடுத்து வீசுவோம் – தமிழ்

வீரர் புகழ் அதனிலும் பேசுவோம்.

2. திருக்குறளின் தேனெடுத்துப் பருகுவோம்—மனத்

தெளிவுடனே கலையுலகம் வருகுவோம்

விருப்பமதில் ஒழுக்கந்தனைக் கைவிடோம்—கெடு

வீணருக்கு வல்லடிமை செய்திடோம்.

(பாட்டு ஒலித்துக் கொண்டிருக்க விளக்கணைப்பு, காலச்சுழல் பாட்டும், ஜதியும் மாறுதல், விளக்கெரிப்பு. மேடையில் பருவமங்கையாக அருக்காணி ஆடிக் கொண்டிருக்கிறாள்)

பாட்டு

பல்லவி

முத்தமிழ்க் கலைதன்னில் முழுமதி போன்றவள்

சித்தினி ஆடுகிறாள் – நடனம் முத்

அனுபல்லவி

பத்தரை மாற்றுப் பொன் பருவத்து மேனியள்

பைங்கிளி போன்றவள் ஐஞ்சுவை தானிவள் முத்

சரணம்

இன்பத்துப் பால் கண்ட இலக்கணவடிவோ?

இலக்கியச் சுவை ஈன்ற எழிலுருவோ?

தென்னகப் பண்போடு திருவிடம் வளர்ந்தவள்

தீரமும் வீரமும் கருவதில் சிறந்தவள் முத்

(பாட்டு முடிவில் குன்றுடையானும், தாமரையும், மாற்றுடையில் பரிசுப் பொருள்களோடு வருகின்றனர்.)

குன்று: வித்தகரே! கலையும் பயிற்சியும், அறிவும் பொருளுமாக பத்தாண்டுகள் கழிந்து விட்டன. எங்கள் செல்வி அருக்காணியை இணையற்ற கலைமங்கையாக்கிய தங்களுக்கு, நாங்கள் செய்யும் கைம்மாறு மிகச் சிறிது. இந்த எளிய காணிக்கையை ஏற்றருள வேண்டுகிறோம். (கொடுக்கின்றனர். பெற்றுக் கொள்கிறார்)

ஆசிரி: வாழ்க அருக்காணி, வளர்க தமிழ்க்கலை

(அருக்காணி தலை தாழ்ந்து வணங்குகிறாள்)

*****************

புண்ணியார் வீடு

(பண்ணை ஐயர் உட்கார்ந்து எட்டுச் சுவடி பார்த்துக் கொண்டிருக்கிறார். காய்கறிக் கூடையுடன் தாமரை நாச்சி வருகிறாள்)

பண்ணையார்: வாடியம்மா தாமரை நாச்சி! காய்கறி கொண்டு வந்திருக்கியா? ரொம்ப சந்தோஷம். குன்றுடையான் எங்கே?

தாமரை: விறகு வேண்டுமென்று சொன்னேன். வெட்டுவதற்கு நேரம் இல்லாமல் பட்டமரமொன்றை வேரோடு பிடுங்கி வருகிறார் என் கணவர்: (பெரிய மரமொன்று விழுந்தது போன்ற பயங்கர சப்தம்"ஐயோ அம்மா..! நான் செத்தேன் உசுரு போச்சே. ஐயையே என்ற பெண்ணின் அலறல் குரல்)

பண்ணை: (பதறி) ஐயையோ! அது என்ன சப்தம்? என்னோட ஆத்துக்காரி ஏன் அலர்ரு? என்ன நடத்தது? ஐயோ!

(உள்ளே ஓடுகிறார். மறுப்பக்கமிருந்து குன்றுடையார் வருகிறார்)

தாமரை: கண்ணா! பின் வாசலில் விறகு மரத்தைப் போட்டீர்களா?

குன்றுடையார்: ஆமாம்.

தாமரை: ஆமாம். அந்தச் சப்தம் கேட்டு ஐயர் வீட்டம்மா பயந்து அலறிவிட்டார்கள் போலிருக்கிறதே.

குன்றுடையார்: உள்ளே ஏதோ சப்தம் கேட்டது. என்னவென்று தெரியவில்லை. ஐயர் வீட்டம்மாவா அலறினார்கள்? மரம் விழுந்த அதிர்ச்சியைத் தாங்க முடியாமலா?

தாமரை: ஆமாம் பாவம் . அந்தம்மாவுக்குப் பிறந்தது பதினறு பிள்ளைகள். இருப்பது பத்து, இப்பொழுது வயிற்றில் ஆறுமாசம். என்ன பலமிருக்கும் உடம்பில்?

(ஆத்திரத்துடன் ஓடி வருகிறார் பண்ணை)

பண்ணை: (பதறி) படுபாவி! படுபாவி ! கெடுத்திட்டியேடா காரியத்தை. வெறகு மரத்தைக் கொணர்ந்து போட்ட அதிர்ச்சியிலே அவளோட வயத்துக் கருவை அழைச்சிட்டியேடா, கருவிலே இருக்கிற குழந்தை மகாயோக ஜாதகத்திலே ஜனிப்பான்னு கிர்ப்ப சாஸ்த்திரம் சொல்லித்து. விசேஷ ஜாதகம்னு சந்தோஷமா இருந்தேனே. மகா பாவி! மகா பாவி!

குன்றுடையார்: சுவாமி! தவறு யாரிடம் என்பதை உணர்ந்து பேசுங்கள். தேவைக்கு அதிகமாகப் பிள்ளை பிறந்து அம்மாளின் தேகம்

## காட்சி – 13



குன்றுடையார்: பலவீனமாய் விட்டது. சிறியதொரு அதிர்ச்சியையும் தாங்க முடியவில்லை அவர்களால். இதற்குக் காரணம் நீங்கள் தான்

பண்ணை: நீ பயங்கரமான பிசாசு. சாஸ்திரத்தைப் பொய்யாக்கி வைன். என்னோட ஆத்தாக்காரிக்கு ஒன்னோட செய்கையே பிடிக்கலே. நீ இனிமே என்னோட பண்ணையத்திலே இருக்கப் படாது.

தாமரை: பண்ணையாரே ! நல்லதுங்க எங்களுக்கும் சொந்த ஊர் நினைவு வந்து விட்டது. நாங்களும் தயாராகி விட்டோம். உங்களிடம் எப்படிச் சொல்வதென்று தயங்கினோம். நல்ல வேளை நீங்களே திருவாய் மலர்ந்து விட்டீர்கள். நாங்கள் நாளையே புறப்படுகிறோம். சுவாமி.

குன்றுடையார்: காடு திருத்திக் கழனியாக்கினோம். கிணறு வெட்டி நஞ்சையாக்கினோம். நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தப் பாடுபட்டோம் பெற்ற பலனில் பங்கு கொடுத்தோம். ஒரு நல்ல வார்த்தை உண்டா? காக்கை உட்காரப் பனம் பழம் விழுந்தது. பாவிப் பயலே போடா நிலத்தை விட்டு என்று சொல்லி விட்டீர்கள்! நல்லது. நன்றி அய்யா சென்று வருகிறோம். வணக்கம்!

(குன்றுடையாரும், தாமரை நாச்சியும் வணங்கிச் செல்கின்றனர்.)

/////////////0000000000

தலையூர் மாளிகை

(வேட்டுவ அரசன் காளியக்கனும், கையாள் குள்ளனும், செம்பனும் உள்ளனர். தூதன் ஒருவன் ஓலை கொடுக்க, காளியப்பன் வாங்கி மனத்திற்குள் படிக்கிறான்)

காளியப்பன்: (மனம் குமுறி) கொங்குவள நாட்டிலே கொங்கர்களுக்கு ஆதிக்கமில்லை. ஆட்சியில்லை. உரிமையையும் பெருமையும் கொடுக்க மறுத்துவிட்டார் மன்னர். குள்ளவேடா! இந்த நிலைமையை நினைத்தால் என் நெஞ்சம் கொதிக்கிறதையா!

குள்ளன்: அரசே! கொங்குப் பாண்டியரோட ராச்சியம் போயி, இப்பக் கொங்குச் சோழரோட ராச்சியமல்ல நடக்குது. இதுலே எப்படிங்க நமக்கு நியாயம் கிடைக்கும்?

செம்பன்: நாட்டுப் பழங்குடி! வேட்டுவா குலத்த தலைவன; வீராதி வீரன் இம்மாம் பழமையும், பெருமையும் இருந்தும், கோட்டையிலே கொடி கட்டியாள வழி பொறக்கலேன்னு எல்லாம் பாங் காட்டுக்கு அடிச்ச நெலவுதான்!

காளியப்பன்: கொங்குச் சோழர் இராசா ராச கரிகாலர் நல்லமனம் படைத்தவரென்று நம்பியிருந்தேன். தூதன் மூலம் எவ்வளவோ பணிந்து கேட்டேன். இப்போது உரிமை கொடுகக மறுத்து விட்டாரே, குள்ளவேடா! இந்தக் கொடுமையை எதிர்த்து நாம் கிளர்ச்சி செய்ய வேண்டும்! இல்லையேல் இராச ராசரது ஆட்சிக்குப் பரிபூரண அடிமையாக வேண்டும். என்ன செய்யலாம்?

செம்பன்: கிளர்ச்சியா! ஐயோ அது வேணுங்க நாம்ப முரடனுங்களை வேடனுங்கன்னு இப்பவே பேசிக்கிறுங்க!.

குள்ளன்: அப்படின்னு அடிமையாகறதா? அது முடியவே முடியாது. இன்னிக்கு இல்லேன்னாலும் என்னைக்காவது ஒரு நாள் அரசன் காளிங்ப்பனை சிங்காதனத்திலே உக்கார வைச்சுப் பாக்காம விடப் போவதில்லை! இது சத்தியம்.

காளியப்பன்: நல்லது! நடப்பது நடக்கட்டும். நாம் படைபலத்தைப் பெருக்குவோம். தலையூர் ஆட்சியை வலுப்படுத்தி, ஊர்ச் சபைகளை அமைப்போம்.

குள்ளன்: நல்ல யோசனைங்க

செம்பன்: ஊர்ச்சபைகளை அமைச்சுப் போடலாம். அது ஆளத்தகுதி

செம்பன்: உள்ளவங்க வேணுமே!

காளியப்பன்: (சிரித்து) ஏன்! நம்மில் ஆளத்தகுதி படைத்தோர் இல்லை யென்று சொல்கிறாய்?

செம்பன்: அரசே! வாங்கலில் மணியும் குன்றுடையாருக்குப் பதிலாக அவர் தம்பி செல்லாத்தாளை நியமித்தாரே, கொங்குச் சோழர், அதுபோல் அமைந்து விட்டால் என்ன ஆவது?

குள்ளன்: ஏன்சி செல்லாத்தானுக்கு என்னங்க கொறைச்சல்? தகுதி படைச்சவனுங்க!

செம்பன்: ஆமாம். இருந்தாலும் தங்கச்சி புருஷன் பாருங்க. அவனுக்குப் வைப்பாட்டி மட்டும் பத்துப் பேராம்!

காளியப்பன்: குள்ளவேடா! ஊராட்சித் தலைவன் உன் மைத்துனன் என்பதற் காக பேசாதே. குன்றுடையானை விரட்டிப் பத்தாண்டு காலமாயிற்றே! அங்கே விளங்குகிறதோ நீதி? குலுங்குகிறதோ இன்பம்?

(குடித்துத் வெறித்துத் தள்ளாடிய வண்ணம் வருகிறான் செல்லாத்தான்)

செல்லாத்தான்: யாரு...? யாரடாது என்னைப்பற்றி. .கசமுசாங்கிறது? பார்த்து....பார்த்துப் பேசுங்க ஆமா "ஊருக்கு நான் தலைவன் எனக்குத் தலைவன் மது" எந்தப்பயலடா என்னைத் தொடமுடியும்? குன்றுடையானாவது, கொக்காவது, எல்லாம் இந்தக் கட்டை விரலுக்குள் அடக்கம்! அடக்கம்.

(காளியப்பன் முன சென்று கோணங்கி செய்கிறான்)

காளியப்பன்: குள்ளப்பா! பாரப்பா ஊராட்சித் தலைவனின் தகுதியை

குள்ளன்: ஐயையோ! மச்சான்! இதென்ன அசிங்கியம்? இப்படி வா மச்சான்'. (இழுக்கிறான்)

செல்லாத்தான்: என்னுங்கறேன். நான் தலையூருக்கு வந்து பதினேழு..உம் இல்லே பதினேழு நாளாச்சே! நான் ஊருக்குப் போக வேண்டாமாங்கறே அங்கே எனக்காக எத்தனை குட்டிங்க காத்துக்கிட்டுருப்பாங்க....அடடா ..அடடா.

குள்ளன்: மச்சான்! இதைக் கேக்கவா இங்கே வந்தே? இவரு கொங்கு ராசா காளியப்பன்! அவரு முனைஞ்சி என்னோட மூக்கெ வெள்ளரிக்காயாக் கடிக்கிறியே!

செல்லாத்தா: ஐயையோ! கொங்குராசாவா? கள் திருஷ்டி பட்டுச்சா கத்தியொன்னும் எங்கிட்ட இல்லையே! அரசே! மன்னிச் சுடுங்க நான் இப்பதுதான் ஒரு..மூா...ருதியா....

காளியப்பன்: என்ன சொல்லாத்தான்! கருதி படைத்தோனின் தன்மை இது தானு?

(அப்போது வீரன் ஒருவன் வந்து)

வீரன்: அரசே ! வாங்கல் மணியத்தை செல்லாத்தானவர்களுடைய தலையாரி அவங்களை அவசரமாப் பாக்கனுமாம்.

காளியப்பன்: வரவிடு !

வீரன்: உத்தரவு !

(தலையாரி வீரவாகு வந்து)

தலையாரி: சாமியோவ்! கண்டுமுங்க ! நான் வாங்கல் தலையாரிங்க. எங்க தலைவருக்கு ஓலை கொண்டாந்திருக்கேன் சாமி!

சொல்லாத்தான்: ஓலையா ? ...எனக்கெவன்டா ஓலை அனுப்புறவன்..?

வீரவாகு: கணக்கப்பிள்ளை கொடுத்தி ஙருங்க (கொடுக்க)

செல்லாத்தான்: (வாங்கிப் படிக்கிறான்) நாம் போட்ட கண்ட வரிகளைக் கொடுக்க முடியாமல், குடிமக்கள் தவிக்கின்றனர். மிரட்டல் முயற்சிகள், குடிமக்களிடையே கோபத்தையும், எதிர்ப்பையும் உய்டாக்கிஇருக்கிறது. இந்த நிலையில் குன்றுடையார் எதிர்பாராத செல்வமும் சிறப்பும் பெற்று சிறுகாற்புலியூர் வந்து குடியேறி உள்ளார். குடி மக்கள் அவரிடம் சென்று முறையிடுகின்றனர். படை திரட்டும் வதந்திகள் உலாவுகின்றன. நிலைமை ஆபத்து. உடனே புறப்படுக.

இப்படிக்கு கணக்கர்:

(பதறி) ஆம்! குன்றுடையான் வந்துவிட்டானு? குடி மக்கள் எதிர்க்கிறாங்களா? படை திரட்டுறாங்களா ? ஐயோ! வேட்டுவ மன்னு! வேதனையான செய்தி! என்ன குழப்பம் வருமோ? எப்படி வருமோ? எனக்கு நீங்கதான் உதவி செய்யனும். நீங்க தான் காப்பாத்தனும். (மண்டியிட்டு வணங்குகிறான்)

காளியப்பன்: (சிரித்து) ஓலை கண்டதும் போதை தெளிந்து விட்டதே! எழுந்திரு தலைவரே! என்ன வேண்டும் உனக்கு?

குள்ளன்: அரசே! செல்லாத்தான் ஆட்சி நிலைப்பதற்கான எல்லா உதவிகளையும் நாம்பதான் செய்யனுமுங்க. செல்லாத்தானுக்கு நம்மை விட்டா யாரு இருக்காங்க. சொல்லுங்க பார்க்கலாம்.

காளியப்பன்: ஆகட்டும் குள்ளா! ஆபத்தொன்றும் வராது. அப்படி வந்தாலும் உன் மைத்துனர் நல்வாழ்வுக்கான எல்லா ஆதரவு

காட்சி - 14.

காளியப்பன்: கலையும் நாம் செய்வோம்.

செல்லாத்தான்: (மகிழ்ந்து) ஆகா! ஆயிரத்திலே ஒன்னு அந்தமான பேச்சு! இந்த வாக்குறுதி போதும். பொழச்சுக்குவேனுங்க. நான் போயிட்டு வர்றேன் அரசே!

காளியப்பன். நல்லது. அப்படியே குடிமக்களின் நலத்தையும் கொஞ்சம் கவனித்துக் கொள்:

செல்லாத்தான்: ஓ. இது கூடவா எனக்குத் தெரியாது? வர்றேனுங்க(
(போகிறான்)

செம்பன்: அரசே! செல்லாத்தானோட அரசியலே ஒரு தனி ரகம். அவனுக்கும் நமக்கும் வித்தியாசம் என்னன்னு, நாம்ப வீரமா வேட்டையாடறோம். அந்த வீரன் தந்திரமா வேட்டையாட றான் அவ்வளவு தான்.

(எல்லோரும் சிரிக்கின்றனர்.)

திரை

*************************

காட்சி - 14



மலைக்குகை

(சிவயோகியார் தியானத்திலிருக்கிறார். பொன்னன், சுவடி
ற படித்துக் கொண்டிருக்கிறான். சங்கரன் வாள் ஒன்றைகூர்
த்துக் கொண்டிருக்கிறான். பின்னணியில் தெய்வ கீதம் ஒலித்துக்
ண்டிருக்கிறது.

பாடல்.

சிவோஹம் !........சச்சிதானந்தம்
சிந்தையுள் அன்பே பரமானந்தம் - சிவோ
தவயோகம் அரிதாம் தனிமையே - இனிதாம்
தன்மோஹம் இறைமேல் கொள்வதே திறமாம் - சிவோ

.........

சிவயோகி: (விழித்து) சிவயோகம்...சச்சிதானந்தம்! அன்பு நிறை
பொன்னா! ஆற்றல் மிக்க சங்கரா!

பொன்னன். பெருந்தகையே

சிவயோகி: இருவரும் இப்படி வாருங்கள் (அருகில் வந்து பணிவாக நிற்கின்றனர்)

சங்கரன்: இறைவா!

சிவ: "பொறி வாயில் ஐந்தவித்தான் பொய் ஒழுக்க நெறி நின்றார்
நீடு வாழ்வீர்" இந்தக் குறளின் பொருள் யாது?

பொன்னன்: ஐம்பொறிகளின் வாயிலாகப் பிறக்கும்)இச்சைகளை அவித்தவன்
1 இறைவன். அந்த இறைவன் காட்டும்பொய்யற்ற ஒழுக்க
நெறியில் நின்றவர் நிலையான நல்வாழ்வைப் பெறுவர் என்பது ~~~~
பொருள் இதுவே குறள். நெறி.

சிவ: நன்று அத்தகைய நல்வாழ்வைப் பெறத்தக்க பாலயோகியர்
நீங்கள்! யோகத்தின் அங்கங்களைக் கற்றுத் தெளிந்து,
இராஜயோகச் சித்தர்களாகிவிட்டீர்கள்! இருந்தாலும் பெற்
றோருக்கு உற்ற பிள்ளைகளாக நீங்கள் இருக்க வேண்டும்.

பொன்னன்: (வியந்து) பெற்றோருக்கு உற்ற பிள்ளைகளாகவா?

சங்: எங்கள் பெற்றோர் யார் என்பதே இன்னமும் தெரியாதே
இறைவா!

சிவ: சிவயோகம்! சச்சிதானந்தம்! குழந்தைகளே! காத்திருந்த
காலம் வந்துவிட்டது. இப்பொழுது சொல்கிறேன். பொன்னி
நதி வளங்கொழிக்கும் நன்னகர் வாங்கல். அந்த வாங்கல்
மணியம் கள்ளமற்றக் குன்றுடையார் மக்கள் நீங்கள். அவர்

சிவயோகி: பத்தினி கற்புச் செல்வ தாமரை நாச்சியின் வயிற்றிலே இரட்டையர்களாகப் பிறந்தீர்கள். சிற்றப்பன் செல்லாத்தாள் பட்டம் பதவிக்காசைப்பட்டு, உங்களைக் கொல்லத்திட்ட மிட்டான். மகப்பேறு பார்க்க வந்த மருத்துவச்சிக்குக் கைக்கூலி கொடுத்து, உன் தாய் மயங்கி இருந்தபோது உங்களை எடுத்துவந்து, கழுத்தை நெரித்துக் காட்டிலே போடச் செய்தான். குற்றுயிரும், குலையுயிருமாக இருந்த உங்களை நான் கண்டேன். எடுத்து வந்து மூலிகை மருந்து களால் குணப்படுத்தி, இந்த குகையிலே வைத்துக் காப்பாற்றி னேன். ஆடடா...பதினெட்டு ஆண்டுகள் பதினெட்டு மாதங்க ளாகக் கழிந்து விட்டனவே!

சங்கரன்: இறைவா! அந்தச் சதிகாரச் சிற்றப்பன் இருக்கிறானா இன்னும்?

சிவ: இருக்கிறான்! கொடுங்கோன்மையால் நாளும் மக்களைச் சித்திரவதை செய்துக் கொண்டிருக்கிறான்.

பொன்னன்: பெருந்தகையே! சாகக் கிடந்த எங்களைப் காப்பாற்றிக் கல்வி புகட்டி, பலகலையும் கற்பித்து எங்களை ஆளாக்கிவிட்ட தங்களுக்கு என்ன கைம்மாறு செய்யவல்லோம்.

சிவ: "மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்" என்ற வள்ளுவரின் வாசகத்திற் கிணங்க, நடந்து கொள்ளுங்கள். அதுவே நீங்கள் எனக்குச் செய்யும் கைம்மாறு–

சங்: கட்டும் இறைவா! தற்போது எங்கள் பெற்றோர் எங்கே இருக்கிறார்கள்.?

சிவ: செல்லாத்தாளின் சூழ்ச்சியால் தென்பாண்டி நாடு சென்ற உங்கள் பெற்றோர்கள் உழவுத் தொழில் புரிந்து வளமும் வளப்புமாக சிறுகாற் புலியூர் வந்திருக்கிறார்கள். அது கண்ட செல்லாத்தாள் அவர்கட்கு தொல்லைக் கொடுக்கத் தொடங்கியுள்ளான். இதுவே தக்க சமயம் தாமதிக்காதீர் கள். புறப்படுங்கள்!

(பொன்னனும், சங்கரனும் சிரம் தாழ்த்தி வணங்குகின்றனர்.)

சிவ: [illegible] சிவோகம்! சிச்சிதானந்தம்! குழந்தைகளே உங்கள் பெருங்குடி பகைவர்களால் சூழப்பட்டிருப்பதால் பகை வெல்லும் வரை, பிரம்மசாரிய விரதத்தைக் கடைப் பிடிப்பீர்களாக! இறைவன் எல்லா நலங்களையும் அருள்வானாக

காட்சி - 15 

சிவயோகி: சிவயோகம்! சச்சிதானந்தம்:

திரை

******0******

(குன்றுடையார், தாமரை நாச்சி, அருக்காணி மூவரும் இருக்கின்றனர்)

குன்றுடையார்: தாமரை நாச்சி! உழைப்பால் உயர்ந்த நமது செல்வ நிலை கண்டு குமுறுகிறான் செல்லாத்தாள்! குடிமக்கள் நம்மிடம் முறையிடுவது கண்டு படை திரட்டுவேனோ என்று பயப்படுகிறான். அதனால் முன்னிலும் அடிபுறச்சீகத் தொடங்கி விட்டான்.

தாமரை: மீண்டும் தண்டவரி விதித்தானோ?

குன்றுடையார்: இரண்டு முறை கட்டிவிட்டோம். இப்பொழுது தண்டல்காரனிடம் தவறாகப் பேசியதாகக் குற்றம் சுமத்தி, திமிர் வரி போட்டிருக்கிறான் பத்து நூறு வராகன்.

தாமரை: என்ன அக்கிரமம்? இப்படி விதிக்கின்ற அக்கிரம வரிகளை எல்லாம் நாம் கொடுத்துக் கொண்டேயிருப்பதா?

குன்றுடையார்: கொடுக்கவில்லையென்றால் கிட்டி போடுவான். வெய்யிலில் வாட்டுவான். சபையிலேயே நிர்வாணமாக நிறுத்தி வைப்பான். என் நிலைமை என்ன ஆவது தாமரை நாச்சி?

தாமரை: ஐயோ! உங்களுக்கொரு பங்கமென்றால் எங்களால் உயிர் வாழ முடியாது கண்ணாளா!

அருக்காணி: தந்தையே!

குன்றுடையார்: என்னம்மா?

அருக்காணி: நான் கல்வி கற்றென்ன? கலையறிவு பெற்றென்ன? வல்லாண்மையோடு வாளெடுத்துப் போரிடும் போர்க் கலையை நான் பெறவில்லையே. அது மட்டும் பயின்றிருந்தால் இக்கொடியவனை வாள் முனையில் சந்தித்திருப்பேன். அண்ணன்மார்கள் இல்லாத குறை இப்போதுதான் அதிகமாகத் தெரிகிறது.

தாமரை: அருக்காணி! உள்ளத்தால் ஆண் பிள்ளை. உடலால் பெண் பிள்ளை நீ. வைர மனம் படைத்தவளே! வருவதெல்லாம் வரட்டும் அஞ்சாதே!

(தலையாரி வீரவாகு முறுக்கிய மீசையோடு நெஞ்சு நிமிர்த்தி வருகிறான். உடன் இருவர் வருகின்றனர்.)

வீரவாகு: பழைய மணியக்கார சாமியா! திமிர் வரி தண்ட வந்திருக்கிறேன். சாமி! கொண்டா பத்து நூறு வராகனை. மரியாதையா இப்பவே கொடுத்தாகணும் சாமி! ஆமா.

குன்றுடையார்: கொடுக்காவிடில் அரச்சபைக்குக் கொண்டு போவாயா?

குன்றுடையார்: நான் வரத்தயாராக இருக்கிறேன்.

வீரவாகு: அந்தப் பருப்பு இந்தத் தண்ணியிலே வேவாது சாமியோவ். வக்கு வகையில்லேன்னுக்கா அந்த தண்டனை. பம்பைத் தலைக்காரன் ரொம்ப பணக்காரன். ஒனெக்கென்ன கேடு. பொஞ்சாதி, புள்ளெமேலே நகை நட்டுக் கொஞ்சமா சொலிக்குது. கழட்டு சாமி!

தாமரை: வீரவாகுத் தலையாரி! நாவடக்கிப் பேசு! நீ வீராதி வீரனாக இருக்கலாம். அக்கிரமத்திற்குத் துணை போவது அடுக்காது. கொள்ளைக் கூட்டமா? அரசாங்கமா இது?

வீரவாகு: செல்லாத்தான் ராசா! நான் மந்திரி நாங்க வெச்சது வட்டம்.

அருக்காணி: [illegible] ஊரைக் கொளுத்தும் ராசாவுக்குப் பந்தம் புடிக்கிற மந்திரி, இந்தப் பந்தமும், படுக்காலித்தனமும் எத்தனை நாளைக்கு நிலைக்கும்?

வீரவாகு: என்னடி குட்டி! போட்டவரியைக் கொடுக்க யோக்கியதை இல்லே. நீட்டிறியெ நாக்கை? கழட்டிடி நகையை. மொதல்லே ஒங்கழுத்திலேதான் கையை வைக்கப் போறேன். உம்.....கழட்டு...!

(அருக்காணியின் அருகே நெருங்குகிறான்)

தாமரை: கொடியவனே! என்மகளைத் தொட்டால் எரிந்து போவாய்!

வீரவாகு: உம்... ...எரிவதைப் பார்க்கிறேன்.

குன்றுடையார்: அத்துமீறுதே...அயோக்கியா! நில்!

(குன்றுடையான் சினம் கொண்டு வீரவாகுவைப் பிடித்துத் தள்ளுகிறார். வீரவாகு விழுந்து எழுகிறான்.)

வீரவாகு: டாய் பயல்களா! இந்தப் பொம்பளைங்களைப் புடிச்சி, கழட்டுங்கடா நகையை! இந்தக் கிழவனை நான் பாத்துக் கறேன். (தடியாட்கள் பெண்கள் மேல் பாய, வீரவாகுவும் குன்றுடையாரும் மோதுகின்றனர். கூச்சல், குழப்பம், எதிர்பாராத பொன்னரும், சங்கரனும் வருகின்றனர்.)

பொன்னன்: போக்கிரிகளே! விடுங்கள் அவர்களை! விடுங்கள்!

சங்கரன்: பெண்களிடமா அக்கிரமம்? பேடிப் பயல்களே! ஓடப்போகிறீர்களா? சாகப் போகிறீர்களா?

(இருவரும் தடியால் சுழன்றடித்துத்தாக்குகின்றனர். அடிக்கின்றனர். அடியாட்கள் "ஐயோ! ஐயோ" என்றலறிக் கொண்டு ஓடுகின்றனர். சங்கரனும் வீரவாகுவும் மோதுகின்றனர். இறுதியில் வீரவாகு, "ஐயோ, அம்மா" என்று மூர்ச்சித்து விழுகிறான்)

குன்றுடையார்: (மகிழ்ந்து) பரோபகாரச் சிங்கங்களே! யாரப்பா நீங்கள்?

தாமரை: குழந்தைகளே! யார் பெற்ற செல்வங்களப்பா நீங்கள்?

சங்கரன்: தாயே! நீங்கள் பெற்றுப் பறிகொடுத்த மைந்தர்களம்மா நாங்கள்!

பொன்னன்: சிற்றப்பனால் சாகடிக்கமுடியாத உங்கள் மக்களப்பா நாங்கள்!

குன்றுடையார்: (வியந்து) ஆ! என் மக்களா?

தாமரை: நான் பறிகொடுத்த செல்வ மக்களா நீங்கள்? எப்படிப் பிழைத்தீர்கள்? எங்கே இருந்தீர்கள்? உங்களைக் காப்பாற்றிய புண்ணியர் யார்? எப்படி வந்தீர்கள் தக்க சமயத்தில்?

பொன்னன்: தாயே! சிற்றப்பனின் சதி எங்களைக் கழுத்தை நெறித்துக் காட்டிலே போட்டது. சிவயோகியாரின் கருணை எங்களை எங்களை எடுத்து வளர்த்து ஆளாக்கியது. அவரே அடையாளங் காட்டி அனுப்பினார். இங்கே.

சங்கரன்: இனிமேல் உங்களுக்கு எந்தக் கொடுமையும் ஏற்பட விட மாட்டோம்.

தாமரை: ஆகா என் செல்வங்களே! என் வயிற்றில் பால் வார்த்தீர்கள் (அணைத்து) என் குறை தீர்ந்தது பத்தினித் தெய்வம் என் ஆணையை நிறைவேற்றிவிட்டாள்! உங்கள் தங்கை அருக்காணியின் வாக்கு பலித்துவிட்டது. ....மக்களே! இதோ உங்கள் அருமைத் தங்கை..

பொன்னன்: அன்புத் தங்கையே!

சங்கரன்: அருக்காணியம்மா!

அருக்காணி: (மகிழ்ந்து) என் அண்ணமாரே! அருக்காணித்தங்கைக்கு இனி எந்தக் குறையுமில்லை. வீரவாகுச் சாம்பனையே வீழ்த்திய அண்ணன் மாரின் வீரத்திற்கு நிகர், இந்தத் தமிழகத்திலேயே யாரும் இல்லை.

(அச்சமயம் செல்லாத்தாளும் இருவீரர்களும் வருகின்றனர்.)

செல்லாத்தாள். (சினத்தோடு) யாரடா பொடிப்பயல்களா? என்னோட வீரர்களை அடித்து விரட்டியது?

குன்றுடையான்: ஆ! தம்பி செல்லாத்தான்.

பொன்னன். ஓ! நீர்தானா எங்களைப் பொடிப் பயல்களாகக் கருதுகின்ற சிற்றப்பன். நாங்கள் தான் உமது பொல்லாத கொலை வெறிக்குத் தப்பிப் பிழைத்த இரட்டைக் குழந்தைகள்... உமது அண்ணன் மக்கள்.

செல்லா: ஆ! .........(பயந்து) செத்துப் போனதுங்க எப்படிப் பொழச்சுது? இங்கெப்படி வந்தது!

சங்கரன்: கொலைகாரனே! உமது கொட்டமடக்கி, எங்கள் பெற்றோர்களுக்கும், பிறந்த பூமிக்கும் நீதி வழங்க வந்திருக்கிறோம். உமதுவாள் எங்கே? வல்லமையிருந்தால் எடும் வெளியே.

செல்லா: (ஆத்திரத்துடன்) பித்தலாட்டக்காரர்களே! உயிர் மேலே ஆசையிருந்தா ஓடிப்போங்க!

சங்க: ஓடுவதா! உம்மை ஓட்டுவதா பார்ப்போம்.

(வாட்போர் நடக்கிறது. வாளை இழந்த செல்லாத்தான் எழுந்து ஓடுகிறான். மற்றவர்களும் ஓடுகின்றனர். மயக்கம் தெளிந்து வீரவாகு எழுந்திருக்கிறான்)

வீரவாகு: சாமி!

சங்கரன்: சாகவில்லையா நீ .....(பாய்கிறான்)

பொன்: பொறு தம்பி ஆயுதமற்றவன் மேல் பாயாதே...
(வீரவாகுவிடம்) உனக்கென்னப்பா வேண்டும்?

வீரவாகு: (எழுந்து வணங்கி) இந்த வீரவாகுச் சாம்பனுக்கு உங்களோட மன்னிப்பு வேணுங்க சாமி. உங்க வீரத்துக்கும், கொணத்துக்கும் இனிமே நான் உங்க அடிமை, என்னோட பெரியாண்டவரும், சின்னாண்டவரும் நீங்கதான்.

பொன்: வீரவாகு! மனிதனுக்கு மனிதன் அடிமையில்லை. இனி மேல் நீ. நம்முடைய துணைவன்.

வீரவா: கோடி கும்பிடுங்க.

பொன்: தந்தையே! இழந்துவிட்ட மணியமும், ஊராட்சித் தலைமையும், உடனே நீங்கள் பெற்றாக வேண்டும்.

சங்கரன்: இது சம்பந்தமாக இன்றே நாங்கள் மன்னரைக் கண்டு ஞாயம் கேட்க வேண்டும்.

குன்று: கேளுங்கள். இப்படியே கொங்குச் சோழ மன்னரிடம் அடங்காத குதிரை ஒன்று இருக்கிறது. அதனை அடக்கி ஓட்டும்

குன்றுடையான்: வீரனுக்கு கேட்டது எதுவாயினும் கிடைக்கும். உங்கள் வீரத்திற்கு இது ஒரு வாய்ப்பாக அமையட்டும்.

சங்கரன்: அப்படியாயின், நிச்சயமா இழந்தத ஊைத்தையும் மீட்டு வருவோம்:

பொன்: எங்கள் வீரத்தை மன்னருக்கு மெய்ப்பிதது, புதிய அரசினையே நிர்மாணிப்போம்.

(அருக்காணி உள்ளிருந்து வந்து)

அருக்காணி: பெரியண்ணே! சின்னண்ணே! இலை போட்டாறிறு முதலில் இதை ஒரு கை பாருங்கள். பிறகு மன்னரைப் பார்ப்போம்.

(தாமரையும், மற்றவர்களும் சிரித்துக கொண்டே செல்கின்றனர்).

திரை

%%%%ஓஓஓ%%%%

அரண்மனை

(இராசா ராசன் அமர்ந்திருக்க வீரன் ஒருவன் பொன்னனை யும், சங்கரனையும் அழைத்து வருகின்றனர்)

இருவரும் : (வணங்கி) மன்னர் பெரும ! வணக்கம் !

இராசா வருக . யார் நீங்கள்?

சங்கரன் : உங்கள் அடங்காத குதிரையை அடக்க வந்திருக்கும் மடங்காத வீரர்கள்!

இராச : (சிரித்து) பாவம், நீங்கள் எந்த வூரோ?

பொன்னன் : எந்த ஊரும் எங்கள் சொந்த ஊரே!

இராச : யார் பெற்ற மக்கள்?

சங்கரன் : தந்தை சுன்னியம் மிக்க அன்மகன், தாய் நிறை கற்பு நிறை பெண்ணரசி! தங்களிடம் வீரம் காட்டி வெற்றி பெற வந்திருக் கிறோம்.

இராச : சிரித்து) அடுக்குச் சொல்லில் துடுக்கான பேச்சு. இது அறி யாமை மட்டும் .அல்ல சிறுபிள்ளைத்தனம்.

சங்கரன் : யாருக்கு அறியாமை? யார் சிறுபிள்ளை முதலில் சோதித்து விடுவோம் வாரும்!

பொன் (கையமர்த்தி) தம்பி! பொறு. வந்த வேலை மறந்து வம்பு வேலை வேண்டாம். நமது தகுதியை குதிரைமேல் காட்டுவோம் மாமன்ன! பிரகடனம் செய்திருக்கும் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு அடங்காத பரியினை அடக்க வந்தோம். நடக்க வேண்டியதை முறைப்படி நடத்தும் படிக் கேட்டுக் கொள்கிறேன்.

சங்கர : கொண்டுவரச் சொல்லுங்கள் அந்தக் கொம்பு முளைத்த குதிரையை!

பொன் : அரசே! வென்றடக்கிய பிறகு நாங்கள் யாரென்பதற்கு விளக்கம் சொல்கிறோம்.

இராச : சரி நடக்கட்டும் வாருங்கள். களம் செல்வோம்.

(எல்லோரும் போகின்றனர்.)

திரை.

%%%%%%%%%

விளையாட்டுக் களம்.

(இராசா ராச கரிகாலர், சங்கரன், வீரர்கள், குடிமக்கள், முதலியோர் குதிரையோட்டம் பார்த்து நிற்கின்றனர். தொலைவில் குளம் போசையும், கனைப்புக் குரலும் கேட்கின்றன)

சங்கரன்: பலே! பலே! அடங்கிச் சுமந்து பறக்குது பார் அடங்காப் பெருங்குதிரை! சுருண்டு விழப் போகுது பார். சொர்க்க லோகப் பரி....ஆகா!. ஆகா! அடங்கிப் பணிந்து விட்டதே அவைக்குதிரை! அடக்கி விட்டான் என் அண்ணு! (மீண்டும் குதிரையின் குளம்பொலியும் கனைப்பும் கேட்கிறது. அந்தத் திசையில் அவனுடன் எல்லோரும் பார்க்கக் குளம் பொலி நிற்க, பொன்னன் வருகிறான்)

இராச: (மகிழ்ந்து) வருக ! வருக! வெற்றி வீரனே வருக!
(கைகளைப் பற்றுகிறார்)

சங்கரன்: "அருந்திறல்வீரர் என் அண்ணு வாழ்க".

இராசா: ஆற்றல் மிகுந்த பொன்னு வாழ்க !' வெற்றியால் பெற்ற புகழ் ஓங்குக!

சக்ர: மன்னவரே இதுபோன்ற அடங்காக் குதிரை தங்களிடம் இருந்தால் கொண்டு வரச் சொல்லுங்கள் அதை நான் அடக்குகிறேன். அத்தோடு உம்மையும்....

பொன்: தம்பி சங்கரா! முதலில் உன் மனக்குதிரையை அடக்கு. மன்னர் செய்த தீங்கை நான் சொல்லுகிறேன்.

இராசா தீங்கா? நான் செய்தேனு?

பொன்: ஆம் தக்காங்கு நாடித்தலைச் சொல்லா வண்ணத்தான் ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து" என்பதை ஓர்ந்து பாராமல் எங்கள் தந்தை, வாங்கல் மணியம் குன்றுடையாரை தண்டித்து விட்டீர்களே, குணக்கேடர்களுக்கு வளைந்து கொடுப்பதா உமது செங்கோல்?

இராசா: ஓ. குன்றுடையார் மக்களா நீங்கள்! ஆகா! வீரர்களே! அது தீர விசாரியாமல் செய்துவிட்ட தீர்ப்புதான். பொறுத்துக் கொள்ளுங்கள். மாவீரா! அதற்கான கழுவாய் தேடுவோம். உன் வெற்றிக்கு விரும்பும் பரிசைக் கேள். கொடுக்கிறேன்.

பொன்: மகிழ்ச்சி! என் வெற்றிக்குப் பரிசாக என் தந்தைக்குச் சிறு காத்புலியூரில் கோட்டை கட்டி கோலோச்சும் ஆட்சியுரிமைதர வேண்டும்......

இராசா: நன்று! அவ்வாறே தந்தோம் வீரர்கள்! நீங்கள் என் அரண்மனையில் தங்கியிருந்து விருந்துண்டு செல்லுங்கள்

பொன்: மகிழ்ச்சி! அரசே! ஆனல்......

இராச: ஆனல் என்ன?

சங்கதடன: நாங்கள் மதுவும் புலாலும் கொள்ளாதவர்கள். அரண்மனை விருந்தென்றால்.......

இராசா: அவை இல்லாமலே விருப்பம் போல் ஒரு நல்லமுது செய்வோம். வாருங்கள்!

பொன்: மிக்க நன்றி

(எல்லோரும் செல்கின்றனர்)

திரை :-

சிறுகாற்புலியூர் மாளிகை

குன்றுடையார் அரசுகைப் பதவி ஏற்கும் விழா. குன்றுடையார் ஆசனத்தில் வீற்றிருக்க, அருகே தாமரை, அருக்காணி, பொன்னன், சங்கரன், வையம்பெருமாள், மற்றும் பலர் இருக்கின்றனர் கோவில் பூசாரி தலைப்பாகையைக் கையிலேந்தி நிற்கிறார். புலவர் வாழ்த்துச் சொல்கிறார்.)

புலவர்: அன்பு நெறி தானோங்கும் அறிவோடு திருவோங்கும்
ஆறாடு கோநாடு அழகு பொன்னி வளநாடு
கோழைமை யில்லாத குடிமக்கள் தன்மைப்பால்
வாழைதுள்ளி வயல்பாயும் வளஞ்சூழ்ந்த கவிநாடு.
சிறுகாற் புலியூராம் சீர் கொங்கு வளநாடு.
சிறப்புதனை மிகப்பெற்று மகிப்புயர வாழ்த்துவோம்
காராளர் குலத்தோனும் வீரபொன்னன் சங்கரனும்
விளைத்த புகழ்தான் பெருகி தழைத்துலகில் வாழியவே
எங்குமின் ஏர்வாழும் ஏழையரின் குடிவாழும்
பொங்கிடுமே இன்பமெல்லாம் புவிவாழ்க ! தமிழ் வாழ்க!

(மேளம் முழங்கிட முடி சூட்டுகிறார். பூசாரி எல்லோரும் வாழ்த்துகின்றனர்.)

ஒருவர்: சிறுகாற்புலியூர் மன்னர் குன்றுடையார்!

எல்லோரும்: வாழ்க ! வாழ்க!

ஒருவர்: மாவீரர் பொன்னனும், சங்கரனும்!

எல்லோ: வாழ்க! வாழ்க

வையம் பெருமாள்: (எழுந்து) சபையோர்களே! அரசரின் மைத்துனர் பெருமாளும், தங்கை, மலைக் கொழுந்தியுமான என் பெற்றோர்கள் சார்பிலே, இந்தப் பட்டுச் சேலை, சோமன், சோடுகளை பட்டஞ் சூட்டு விழாப் பரிசாக மாமாவுக்கும், அத்தைக்கும், கனிவோடும், மனமகிழ்வோடும் படைக்கிறேன்.

(தட்டில் வைத்துக் கொடுக்க இருவரும் பெற்றுக் கொள்கின்றனர். பின் இரண்டு வாட்களை எடுத்து).

வையம்: இந்த வீரவாட்களை என் மைத்துன வீரர்களான பொன்னனுக்கும், சங்கரனுக்கும் வெற்றிப் பரிசாக அளிக்கிறேன்.

(கொடுக்க இருவரும் பெற்றுக் கொண்டு)

பொன்: மைத்துனர் வையம் பெருமாளுக்கு எங்கள் நன்றி.

குன்று: (எழுந்து) பெருமக்களே! நல்லோரே! பொன்னி வளஞ்செய்யும் கொங்குவள நாட்டுச் சிறுகாற்புலியூர், இன்று ஒரு சிற்றரசாக

குன்றுடையான்: மலருகிறது. உழைப்பின் மூலம் வளர்ந்த நாள், ஊராரும் பொறுப்பேற்கக் காரணமானவர்கள் என் மைந்தர்களே. அவர்களை ஈன்றெடுத்த அன்னை, என் மனைவி தாமரை நாச்சியின் பெருமையை நீங்கள் அறிவீர்கள். இப்பொழுது என் தங்கை மகள் வையம்பெருமாளும் வந்திருக்கிறாள். தலையாரி
வாகி
வீர ராகுத்தி சாம்பனும் நம்முடன் கலந்துவிட்டான். உங்கள் எல்லோரது துணையும், அன்பும், பெற்ற நான், அறம் வளர ஆட்சி புரிவேன். இனி நாட்டிலே நல்லன தோன்றும். அல்லன மறையும், கன்னித் தெய்வம் அருள்புரிவாளாக!

வையம்: வாழ்க மன்னர் குன்றுடையார்!

எல்லோரும்: வாழ்க! வாழ்க.

வையம்: வாழ்க கொங்கு வளநாடு!

எல்லோ: வாழ்க !. வாழ்க !

திரை

தலையூர் மாளிகை

(காளியப்பன் வீற்றிருக்கக் குள்ளனும் செம்பனும் நிற்கின்றனர்.)

காளியப்பன்: என்ன ஆச்சரியம்! கொங்குமன்னர் ராசராசர் கரிகாலனின் அடங்காத குதிரையைப் பொன்னின் என்ற பொடிப்பயல் அடக்கி விட்டானும் "இன்னும் இருக்கிறதா அடங்காத குதிரை" என்று கேட்டானும் அவன் தம்பி சங்கரன் யார் இவர்கள்?

(அவ்வமயம் தலைவிரிகோலமாக ஓடி வருகிறான் செல்லாத்தாள்)

செல்லா: வேட்டுவ மன்னா! வேட்டுவமன்னா! என்னைக் காப்பாத்துங்க

குள்ளன்: என்ன மச்சான் இப்படி?

காளிய: என்ன செல்லாத்தாள். ஏனிந்தப் பதற்றம்? என்ன நடந்தது?

செல்லா: என்னுடை மணியத்தையும் ஊராட்சித் தலைமையும் பிடுங்கிட்டு வீதியிலே தொரத்திட்டாங்களே! அய்யோ! நீங்கதான் என்னை காப்பாத்தனும்.

காளிய: யார் பிடுங்கியிறு?

செல்லா: என் அண்ணன் மகனுங்க பொன்னனும், சங்கரனும்

காளிய: உன் அண்ணன் மகி குன்றுடையானுக்குத்தான் ஆண்வாரிசே கிடையாதே!

செல்லா: ஆண் வாரிசே அத்துப் போகணுங்கறதுக்காகத்தான் யாருக்கும் தெரியாமெ பொறந்தவுடனேயே இரண்டு குழந்தைகளையும், கழுத்தை நெறிச்சுக் காட்டிலே போடவெச்சேன். எப்படி பொழுச்சானுங்களோ தெரியலியே. எவனோ ஒரு சாமியாருபய எடுத்து வளர்த்து எமனுங்களா அனுப்பிச்சிருக்கா. பயலுக கொங்கு ராசாவோட போக்கிரிக் குதிரையை அடக்கி, அப்பனுக்குப் பட்டங்கட்டி, சிறகாற்புலியூரைச் சிற்றரசாப் பண்ணிக்கிட்டாங்க. வாங்கலை நேரடி நிர்வாகத்துக்கு எடுத்துக்கிட்டு. என்னை வெளியேத்திப்போட்டாங்க இப்ப நான் என்ன செய்வேன்? (அழுகிறாள்)

காளியப்ப: அவ்வளவு பெரிய வீரர்களா அந்தப் பொன்னனும் சங்கரனும்.

செல்லா: கொங்குநாட்டிலே எங்களைக் கெலிக்கிற மீசையுள்ள ஆம்புளையன் டா, ரோசமுள்ள சிங்க முண்டான்னு கேக்கிறாங்க அரசே! என்ன மமதை பாருங்க!

குள்ளன்: வேட்டுவக் காளியப்பன் பெயர் கேட்டால் இந்த நாட்டிலே அழுத பிள்ளை வாய்மூடும். அது தெரியாமெ மீசையுண்டா

குள்ளன்: மீசையுண்டா ரோசமுண்டா என்று கேட்டார்களாமே பொடிப்பயல்கள்

செல்லாத்: அரசே இவனுங்களை வளரவிட்டா நாளைக்கே அப்பத்தைக் கொண்டான்னு உங்களையே கேப்பானுங்க. வெள்ளம் வரதுக்கு முன்னடி அணையைக் கட்டியாகனும். வல்லவனுக்கு வல்லவனு வந்திட்டானுங்களே.

காளியர்: வரட்டும் பார்க்கலாம். கொங்கு நாட்டிலே இவர்களை ஜெயிக்க யாருமில்லையா? அயோக்கியப் பயல்கள் எங்கிருந்து வந்தார்கள். இந்தக் கொம்பன்கள்?

குள்ளன்: முறிச்சிட்டாப் போச்சுங்க!

காளி: செம்பனே! நீ என்ன சொல்கிறாய்.

செம்ப: செல்லாத்தாளுக்கு ஆபத்து வரும்னு முன்னாலேயே நெனைச்சது தானுங்க! இது ஆச்சரியமில்லை. ஆனா இந்தப் பையன்கள் பலமும், வீரமும் ஆச்சரியம் மட்டுமல்லங்க, ஆபத்தானதுங்கூட.

காளிய: அதற்காக. ?

செம்: மொதல்லே அவுங்கெ பலத்தை பரிசோதிச்சாகனுங்க

குள்ளன்: எப்படி?

காளிய: வலியப் போய் வம்புக் கிழுக்கச் சொல்கிறயாசி

செம்பன். வேண்டாமுங்க வீரப் போட்டிக்கு விளையாடக் கூப்பிடுவோம். மோதிப் பார்த்தால் வலிமை தெரிஞ்சு போகுது.

காளிய: (சிரித்து) பலே நல்ல யோசனை! குள்ளா வேட்டுவ மேன்மை வீரம், கொங்கு நாட்டிலே மங்கிவிடக் கூடாது, கொடி கட்டிப் பறக்க வேண்டும். நம் முன் மடிகட்டி நிற்க வேண்டும் மாற்றார்கள்.

குள்ளன்: கட்டளை அரசே! இப்பவே பொறப்படறேன். சிறகாற்புலி ஊருக்கு,

காளி: இன்னுமா நிற்கிறாய்.

குள்ள: இதோ........ஓடுகிறேன்.

திரை

%-%-%-%-%

## சிறுகாற்புலியூர் மாளிகை.

(குன்றுடையார், பொன்னன், சங்கரன், வையம்பெருமாள் வீரவாகு ஆகியோர் இருக்க குள்ளன் பேசிக்கொண்டிருக்கிறன்)

குள்ளன்: அடங்காத குதிரையை அடக்கிப் போட்டதாலே மடங்காத வீரர்கள்னு, மனப்பால் குடிக்கிறுங்க ஐம்மோட பிள்ளைங்க அது எவ்வளவு பெரிய தவறுங்கறதை நீங்க தெரிஞ்சிக்க வேணும்.

குன்றுடையார்: வந்த காரியத்தைச் சொல்:

குள்ள: நாங்கதான் சூரர்னு வீரக்கொடி கட்டினு மத்தவன் என்ன கோழையா? அந்த வீரத்தனத்தை சோதிச்சுப் பார்த்திட லாங்கறுரு கொங்கு ரசா. காளியப்பன்!

குன்று: குள்ளா! இது தேவையில்லாத மோதல்..அப்படி பார்க்க விரும்பினுல் தாராளமாகப் பார்த்துக் கொள்ளட்டுமே

குள்ள: அப்படிச் சொல்மையா ராசாசவே', உம்மோட புள்ளேக, பலசாலிகளா இருந்தா, வீரர்களா இருந்தா, நான் அறை கூவி அழைக்கிறேன். எங்களோட வீரப் போட்டிக்கு வருவாங்களா?

குன்று: (சிரித்து) நன்று. நன்று. தினவெடுக்கும் தோள்களுக்குத் தீனி.தேக்கிய வலிமைக்குத் திருவிழா! எதற்கும் தயார் என் மைந்தர்கள்!

வீரவா: சாமி! வேடக்குள்ளன் காளியப்பனுேட கையாள் மட்டுமல்ல! இப்ப செல்லாத்தோனுட மச்சினனுங்க. மறக்காதீங்க சதி செய்யறதிலே மகா சூரனுங்க.

குள்ள: (வியந்து) ஓ! வீரவாகுச் சாம்பனு? பலே இப்ப நீ இந்தக் கையிலே இருக்கியா?

வீரவா: ஆமாம் குள்ளா. நஞ்சு ஒரு பக்கம்னு அதை முறிக்கிற மருந்து மறப்க்கம் இருக்கனுமில்ல. இருக்கிறேன்.

குன்று: இது செல்லாத்தாளும், காளியப்பனும் சேர்ந்து செய்யும் ஏற்பாடுதான். பொன்னு, சங்கரா என்ன சொல்கிறீர்கள்.?

பொன்ன சொல்வதற்கென்ன தந்தையே புறப்படவேண்டியதுதான்.

சங்க: விளையாட்டு வகைகள் என்ன?

குள்ள: கிட்டிப்புள், கைப்பந்து, பாரியாட்டம், சேவற் சண்டை, கடாச்சண்டை, சிலம்பம், மல்யுத்தம், சடுகுடுப்பான் எல்லா முண்டு.

காட்சி - 21. 

குன்றுடையான்: எப்பொழுதும் சித்தமாயிருக்கிறார்கள் என் மக்கள் நான் குறித்து கொண்டு வா.

குள்ளன்: வர்றேனுங்க

(செல்லல்)

திரை

[illegible]

குன்றுடையார் அறை

குன்றுடையார் பொன்னன், சங்கரன், தாமரைநாச்சி

தாமரை: பொன்னு! நீங்கள் வந்த பிறகு தங்கை அருக்காணியின் பிடிவாதம் அதிகமாய் விட்டது. பிடித்ததைச் சாதிக்க வேண்டும் என்கிறுளே!

பொன்: அருக்காணி யோக நெறியில் பற்றுவைத்து விட்டாள் அம்மா, நல்லதை நிறைவேற்றுவதில் பிடிவாதம் தேவைதானே!

தாமரை: அது சரி கன்னியிடத்திலிருந்து கன்னியுறும் காப்பது அவளுக்கு நல்லதாக இருக்கலாம் ஆனல் மணம் புரிந்து இல்லறம் நடத்துவதே எங்களுக்கு நல்லதென்று படுகிறதப்பா.

குன்று: பொன்னு! நீயும் சங்கரனுமாவது எங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

சங்க: தங்கள் விருப்பம் என்ன தந்தையே!

குன்று: உங்கள் அத்தை மலைக் கொழுந்தியின் மகனை வையம் பெருமாளை அருக்காணி மணக்கவும், வையம்பெருமாளின் தங்கையான பூவாயி, ராமாயி, இருவர்களை நீங்கள் மணக்கவும் வேண்டுமென்பதே எங்கள் விருப்பம். ஆனல் அருக்காணி திருமணத்தை ஒதுக்கிக் கன்னியறம் பூண்டு விட்டாள். நீங்களாவது எங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டுமென் கிறேன்.

பொன்: ஐயோ! அப்படிச் சொல்லாதீர்கள் தந்தையே! அன்னையும் பிதாவும் முன்னறி தெயவம் என்பதை நாங்கள் அறிவோம்.

தாமரை: அந்த தெய்வங்களின் விருப்பத்திற்காக வேனும் அத்தை மக்களை மணம் புரிந்து கொள்ளுங்களப்பா!

சங்கர: மணம் புரிந்து கொள்ளுங்கள் என்று நீங்கள் சொல்வதை நாங்கள் மறுக்கவில்லை அம்மா, ஆனல் தந்தையையும், தங்களையும் காண்பதற்கு முன்னமேயே எங்களது யோக நெறி ஆசான், சிவயோகியார் முன்பாக நாங்கள் ஒரு விரதத்தை அனுஷ்டிப்பதாக வாக்களித்தோம்.

குன்று: என்ன விரதம்ப்பா அது?

பொன்னன்: பகையை வெல்லும் வரை, நாங்கள் தூய்மையான பிரம்மச் சரியத்தைக் கடைப் பிடிப்பது என்ற விரதம்ப்பா!

தாமரை: மக்களே! மணம் புரிந்து கொள்வது விரதபங்கம் என்ளுல் மனைவியோடு

தாமரை: வாழமுடியாது. மக்களைப் பெறமுடியாது. குடி தழைக்க முடியாது. அப்படியானல் எங்களோடு கருகிப்போவதா குலக்கொடி? அருகிப் போவதா பெருங்குடிப் பெருமை? இதுவா பெற்றோருக்கு நீங்கள் செய்யும் நன்றிக் கடன்?

பொன்னன்: (வருந்தி) தாயே! பதறுகிறீர்கள்! திருமணத்தைப் புறக்கணித்து கடமையைச் செய்வதில் தவறமாட்டோம். தங்கள் விருப்பம் போல் பூவாயியையும், ராமாயியையும் நாங்கள் மணந்துக் கொள்கிறோம். பங்காளியும் காளியப்பனும் சேர்ந்து பகைத்து நிற்கிறார்கள். தற்போது. அவர்களது பகைமையை வெல்லும் வரை பெண்ணுவி படவே சம்மதிக்க மாட்டோம்;

சங்கரன்: சிவயோகியார் அவர்களிடமே இதனை ஒப்பித்தீான் எங்களை அனுப்பி வைத்தார்கள் தந்தையே.

குன்று: தாமரை நாச்சி, மணம் புரிந்து கொள்கிறோம். பகைமை வென்ற பிறகு மனைவியோடு கூடி வாழ்கிறோம் என்கிறார்கள் மைந்தர்கள் பின் ஏன் கவலை?

தாமரை: [illegible] பொன்னு! விரதம், பகைமை வெல்லும் வரை தானே? பிறகு இனிது, இல்லறம் நடத்துவீர்கள் அல்லவா?

பொன்: ஆம் தாயே! எங்களை மணப்பவர்கள், பகை வெல்லும் காலம் வரை, பிரிவுத்துன்பத்தைப் பொறுத்திடச் சித்தமாயிருக்க வேண்டும்.

தாமரை: நல்லது மகனே! மாமாவிடமும், அத்தையிடமும் கலந்துபேசி அதற்கான செய்கிறோம். தெய்வச் சித்தம் எதுவோ அது படி நடக்கட்டும்.

திரை

-=-=-=-=-=-=-

கன்னிமாடம்

(அருக்காணியும் குப்பாயும் கன்னி அறம் பற்றிப் பாடி ஆடுகின்றனர். கிளியைக் கொஞ்சுகின்றனர். புறாக்கள் பறக்கின்றன. மயில் மான் முதலியன இருக்கின்றன.)

பாட்டு

பைங்கிளியே நல்ல பைங்கிளியே
பாடிப் பறந்திடு பைங்கிளியே — பைங்

1. பேரின்பம் காண்பது திறமடியே - ஞானப்
பெருவழி செல்வது அறமடியே
போரிடும் ஐம்புலப் பாவியரை- வென்று
பொல்லாங்கு நீக்கிடு பைங்கிளியே — பைங்

2. கன்னியறம் பூண்ட பெண்ணடியோ - சுவைக்
காதலைக் காணுத கண்ணடியோ
கற்புக் கலை கொண்டு பைங்கிளியே-கெட்ட
காமம் எரிப்பதில் வென்றிடுவோம் — பைங்

புலன்களை வென்றவர் புவியாள்வார் - என்ற
பொதுநல நீதியைக் கைப்பிடித்தோம்
நலன்களைச் சுவைகளைத் துறந்தோமடி - பகை
நலித்தறம் காத்திடு பைங்கிளியே — பைங்

அருக்காணி: (கையில் கிளியுடன்) குப்பாயி! இப்பொழுது என் பச்சைக் கிளி எப்படியெல்லாம் கொஞ்சிப் பேசுகிறது தெரியுமா?

குப்பாயி: இதென்னடி வியப்பு! கற்கண்டு இனிக்கிறதென்றுலாமே ஒரு கன்னிப் பெண்! கிளி கொஞ்சிப் பேசாமல் என்ன காக்கை போல் கரையுமா? கோட்டான் போல் கூவுமா?

அருக்காணி: கூவாது குப்பாயி! இப்படி பகடி பேசினுல் உன்னை அது மூக்காலே கொத்தும்! (சிரிக்கிறார்கள்)

(குன்றுடையானும் தாமரை நாச்சியும் வருகின்றனர்)

குன்று: அருக்காணி! குப்பாயி!

அருக்காணி: வாருங்கள் அப்பா

குன்று: உறையூர்க் குப்பாயி உனக்கேற்ற தோழியாவிட்டாளே

அரு: ஆமாப்பா! அவளும் கன்னி விரதம் பூண்டுவிட்டாள் இனி எப்போதும் என்னுடனேயே இருக்கப் போகிறுள்.

குன்று: ஆடடே! அவள் தந்தை பச்யண்ணமுதலி அழைக்க வந்தால் என்னம்மா சொல்வது?

குப்பா: அவருக்கு நான் சொல்லிக் கொள்கிறேன். அய்யா.

தாமரை: கன்னியறம் மேன்மையானதுதான், ஆனால், குப்பாயி நீயும் தந்தைக்கு ஒரே, பெண். மணம் புரிந்து மக்களைப் பெற்று குலம் தழைக்கச் செய்யம்மா. உன் தோழிக்கும் சொல்லு.

குன்று: (வேடிக்கையாக) பொன்னனும், சங்கரனுமே திருமணத்திற்கு- ஒப்புக்கொண்ட பிறகு, இவர்களும் ஒரு நாளைக்கு-
ஒப்புக் கொள்ளத்தான் போகிறார்கள் விட்டுவிடுவோமா இவர்களை.

அரு: (வியந்து) உண்மையாகவா அப்பா! என்னால் நம்ப முடியவில்லையே! அண்ணன்மார் திருமணத்திற்கு எப்படி அப்பா ஒப்பினார்கள். பகை வெல்லும் வரை ப்ரம்ச்சரியவிரதம் ஏற்றுள்ளார்களே. இப்பொழுதுகூட தலையூர் வீரப் போட்டிக்கு செல்லவேண்டுமல்லவா?

(இதுசமயம் பொன்னனும், சங்கரனும் வந்து கொண்டே)

பொன்: புறப்பட்டுவிட்டோம் அருக்காணி.

அரு: பெரியண்ணா! சின்னண்ணா! வாருங்கள் வியப்பான செய்தி யொன்று கூறினார்கள் தந்தையார். . திருமணத்திற்கு ஒப்புக் கொண்டீர்களாமே பெண்ணுவிபட்டால் பெரும்பலம் குறைந்திடுமே எப்படியண்ணா ஒப்பினீர்கள்?

சங்க: பெற்றோர்கள் திருப்திக்காகத் திருமணம், எங்கள் வெற்றிக்காக பிரம்மச்சரியம் அருக்காணி.

பொன்: அப்படி ஒரு நிபந்தனைக்கு ஒத்துக் கொண்டார்கள் தாயும் தந்தையும்.

அரு: நன்று. வன்மைக்கழகு வைராக்யம். அது என்றும் மாறக் கூடாது. இல்லையாண்ணா?

பொன்: அதை மறப்போமா அருக்காணி!

குன்று: (பொன்னனையும், சங்கரனையும் பார்த்து) என்ன! வீரப் போட்டிக்குப் புறப்பட்டுவிட்டீர்களா?

சங்: ஆம் தந்தையே! தங்கையிடம் விடை பெற வந்தோம்

தாமரை: (சிரித்து) தங்கையிடம் சொல்லாமல் எங்கும் செல்ல மாட்டார்களே.

அரு: அண்ணா! தலையூர்க் கொங்கர்கள் வீரப் போட்டியிலே, சேவற் சண்டைகூட இருப்பதாக வீரவாகுச்சாம்பன் சொன்னான்.

அருக்காணி: அவன் கொண்டு வந்த கொலைக் சேவல் கோழிக்குஞ்சொன்றை, கட்டுச் சேவலாக நான் ஏற்கெனவே வளர்த்து வைத்துள்ளேன். அதன் காலில் கட்ட நம் கொல்லனிடம் சொல்லி, பதமான கத்தி ஒன்றுகூட தயார் செய்துவிட்டேன். அது தலையூரான் சேவலைக் குத்திக் குடலைப் பிடுங்க வேண்டும். நீங்களும் ஜெயித்து வெற்றிக் கொடி நாட்ட வேண்டும்.

பொன்னன்: அம்மணி. வீரப்போட்டியில் கட்டாயம் வென்றுதான் வரப் போகிறோம். உனக்கென்ன கொண்டுவரவேண்டும்?

அருக்: எனக்கு வேண்டியது முதலில், அண்ணன் மாரின் வெற்றி, அடுத்து என் பஞ்சவர்ணக்கிளிக்கு, ஒரு சோடிக்கிளி

சங்க: நீ கோரும் இரண்டையும், நான் தவறாமல் கொண்டு வருகிறேன். போதுமா?

~~தாமரை:~~ (சிரித்துக் கொண்டே குப்பாயியைப் பார்த்து மெல்ல) ஆமாம் ~~குப்பாயி!~~ அருக்காணி! .......கன்னிமாடத்தில் இருப்பவளுக்கு கிளிக்கு சோடி சேர்க்கும் நினைப்பு எப்படி வந்தது?

(எல்லோரும் சிரிக்கிறார்கள்)

756753576535 7676767654378

## நிழற்காட்சி

(நிழற்காட்சியில் சில சண்டைகள் நடக்கிறது. எல்லா வற்றிலும் பொன்னன் அணி ஜெயிக்கிறது)

## காட்சி 24.ஏ.

காட்சி துவங்கியதும் பொன்னன் அணி ஆர்பரிக்கிறது குள்ளன் பொறுமை இழந்தவனாக.

குள்ளன்: ரொம்ப பீத்திக்காதீங்க. எல்லா வெளையாட்டிலேயும் கெலிச்சுப் போட்டீங்க ஆனா இந்தச் சடுகுடுப்பான் ஆட்டத்திலே கொங்கு நாட்டிலேயே எங்களை யாரும் இன்னிக்கும் கெலிச்சது கிடையாது. பார்ப்போம் ஒரு கை. ஆடுங்க.

(பொன்னன் சங்கரன் கோஷ்டியும், குள்ளன் [illegible] செம்பன் கோஷ்டியும் எதிரெதிர் நிற்க, சடுகுடுப்பான் ஆடத் தொடங்குகின்றனர்.....)

சங்கர: காவேரிக் கரையிலே புரளுது நீரு
கரும்போடு விளையுது கிச்சடி காரு
கோவேறு கழுதையை கொண்டுவந்தாரு
கொஞ்சுது மிஞ்சுது ஒதைக்குது பாரு
பலீன் சடுகுடு சடுகுடு சடுகுடு சடுகுடு சடுகுடு சடுகுடு........
குத்திக் கவடு சனாளை கவடு சடுகுடு சடுகுடு சடுகுடு.....

(பாய்ந்து வந்து சங்கரன் ஒருவனை அடித்துப்போகிறான். சங்கு - எதிர்க்கட்டிசியிலிருந்து குள்ளன் இறங்குகிறான்)

குள்ளன்: ஆனைமலைப் பள்ளத்தே நடக்குது வேட்டை
ஆணென்று பெண்ணென்று பாடுது பாட்டை
அறுபதடி வேங்கை கலக்குது காட்டை
அடிக்குது பிடிக்குது அடிக்குது சாட்டை
வலீன் சடுகுடு சடுகுடு சடுகுடு சடுகுடு சடுகுடு-வெட்டுக் கவடு, வீரக்கவடு சடுகுடு சடுகுடு சடுகுடு சடுகுடு

(பாய்ந்து வருகிறான் குள்ளன் . அவனை பொன்னன் கோஷ்டியினர் அமுக்கிவிடுகின்றனர். ஆட்கள் மாறி மாறி ஆட, முடிவில் பொன்னன் அணி வெற்றி பெருகிறது.)

சங்க: (மகிழ்ச்சியால்) வெற்றி! வெற்றி! எல்லாப் போட்டிகளிலும் வெற்றி:

வையம்: வாழ்க பொன்னன் சங்கரன்

வீர: வாழ்க பொன்னின் இளவரசர்கள்.

(குள்ளன் அணியினர் வெட்கித் தலைகுனிந்து நழுவுகின்றனர்.)

வையம்: ஒழிக பகைவர்கள்:

வீரவாகு: ஓடுங்க ஊருக்கு. ஓடுங்க ஓடுங்க "தொல்வி தோப்பரெ தோத்துப் போன கப்பறெ" ஓடுங்கடா ஊதாரிப் பசங்களா

(எதிர் அணி ஓடுகின்றனர் இவர்கள் சிரிக்கின்றனர்.)

சங்: அண்ணே! நீங்களும் வீரவாகுவும் நேராக சிறுகாற்புலியூர் செல்லுங்கள். நானும் மைத்துனன் வையம் பெருமாளும் வீரமலைக் காடு செல்கிறோம். அன்புத் தங்கையாள் கேட்ட பஞ்சவர்ணக்கிளியோடு நான் வருகிறேன்.

பொன்: நல்லது தம்பி

( போகின்றனர். )

தலையூர் மாளிகை

(அடியுண்ட வேங்கை போல் உலவுகிறான் காளியப்பன். செல்லாத் தான் தலைகுனிந்து நிற்கிறான். குள்ளனும் செம்பனும் நடுங்கி நிற்கின்றனர்)

காளியப்பன்: (சினந்து) ஈட்டிப்பந்து, கடாச்சண்டை, சிலம்பம், சேவற் கட்டு, சடுகுடுப்பான், எந்த வீரப் போட்டியிலும் நீங்கள் ஜெயிக்கவில்லை. வீரமும் மானமும நம்மிடம் விடைபெற்றுக் கொண்டவா?

செம்பன்: அரசே குன்றுடையான் பிள்ளைகளுக்கு எப்படி இம்மாம்பலம் வந்திருக்கும் ? அந்த வீரத்திலே ஏதோ மாயம் இருக்குங்க அதை நாம்ப ஆராய்ச்சி பார்க்கனும்.

காளிய: செம்பா நமக்குத் தேவை ஆற்றலே ஒழிய ஆராய்ச்சி அல்ல சோழர்குடி வீரத்திற்குப் பாண்டியர்குடி வீரம் தாழ்ந்ததல்ல, தரங்கெட்டதல்ல. கோழியடிக்கக் குறுந்தடி வேண்டுமா? என்று கொஞ்சம் மதி மயங்கி இருந்துவிட்டேன்.

செல்லா வேட்டுவமன்னு! எப்படியும் நாம்ம தோத்துப் போயிட்டோம். இந்த வேதனையைப் போக்கியே ஆகனும். இவுங்க ஏதோ அந்தச் சாமியார் மூலமா மாய மந்திரம் வச்சிருக்காங்க இந்தச் சக்தியோட மர்மத்தைக் கண்டு பிடிச்சு அதுகளை மொத்திலே நசுக்கனும்.

குள்ளன்: மாயமோ, மந்திரமோ ஏதாக இருக்கட்டுமே. குங்குமக் காளியோட கோயில்லே, பூவாக்கு வச்சுக் கேட்டாப் புரிஞ்சுப் போவுது. அப்புறம் நமக்கு மட்டும் தெரியாதா அந்த மாயமும் மந்திரமும்?

வே. வீரன். (ஓடிவந்து) அரசே! அரசே நம்ப வீரமலைக் காட்லே இருந்த அரபதடி வேங்கையைக் கொன்னு போட்டு, பஞ்சவர்ணக் கிளியையும் பிடிச்சுக்கிட்டுப் போயிட்டாங்க. அந்தக் குன்று டையார் மகெ சங்கரனும் அவெ மச்சினன் வையம்பெருமானும்.

காளியப்: (அலறி) என்ன! வேங்கையும், அருமைக் கிளியும் பறிப்போயிற்று? அவமானத்தின் மேல் அவமானம் ..என்ன ஆணவம் அவர்கட்கு

வே.வீரன். ஆமாங்க அரசே

(போடா வெளியே என்று சினந்து வீரனை அடிக்கிறான்)

காரியப் போட்டியில் வென்ற திமிரால் பொல்லாங்கு செய்திருக்கிறார்கள் பொடிப் பயல்கள்!

செல்லா: செருக்காளிங்க. பஞ்சவர்ணக் கிளியை அருமைத் தங்கை அருக்காணிக்காகப் பிடிச்சிருப்பாங்க.

குள்ளன்: அருமைத் தங்காளுக்குப் பஞ்சவர்ணக் கிளி. அவைத்துக்கு வேங்கைப் புலியா? நம்மோட வல்லாமை என்ன ஆகறது?

காளி: குள்ளா! இது பெரும் சோதனை. போட்டியிலே தோல்வியடைந்தோம். பொன்னைப் பறிகொடுத்தோம். கொங்குப் பாண்டியர் குடிக்குப் படுதோல்வியா? விடக்கூடாது. எது நேர்ந்தாலும் விடக்கூடாது. அடுபங்குத் தனத்தை ஒடுக்க வேண்டும். பழிக்குப் பழி! உடனே புறப்படுங்கள் பிடித்துச் சென்ற பஞ்சவர்ணக் கிளியை மட்டுமல்ல, அதை வைத்துக் கொஞ்சும் அருக்காணியையும் சேர்த்துச் சிறையெடுத்து வாருங்கள்.

குள்ள: கண்மணி அரவேறி வெற்றியோடு திரும்புவேன்!

(பணிந்து போகிறான்)

திரை

% % % % % % % %

காட்சி — 26. 60

திருகாப்புலியூர் மாளிகை

(பொன்னனும், சங்கரனும் மணக்கோலத்தில் இருக்கின்றனர் அவர்கள் மணவறைக்குப் புறப்படும் சமயத்தில் அருக்காணி ஓடி வந்து)

அருக்காணி: பெரியண்ணா! சின்னண்ணா!

பொன்னன்: என்னம்மா இவ்வளவு அவசரமாக ஓடிவருகிறாய்?

அருக்காணி: அண்ணா!, நீங்கள் இருவரும் அண்ணிமார்களின் விரலோடு விரல் சேர்த்து, மணவறையைச் சுற்றி வருவீர்களே அப்போது இந்தப் பொன் விரல்களை அணிந்துக் கொள்ளுங்கள்.

சங்கர: பொன் விரல்களா! எதற்கு?

அருக்: (தாழ்ந்த குரலில்) என்னண்ணா மறந்துவிட்டீர்களே வைராக்கியத்தை பெண்ணுவிற்பட்டால் பெரும்பலம் குறைந்திடுமே! இந்தாருங்கள்

பொன்: (மகிழ்ந்து) ஆஉறா அருமைத் தங்கையே! தக்க சமயதில் நினைவூட்டினாய்! தடுத்திட்டாய்! விரதபங்கத்தை கொடம்மா கொடு..

(பொன் விரல்களை வாங்கி தானும் அணிந்து, சங்கரனுக்கும் அணிவித்து விட்டு இருவரும் மணமேடைக்குப் புறப்படுகின்றனர். ..........வாத்திய ஒலி முழுங்குகிறது.)

திரை

குன்றுடையான் அறை.

(குன்றுடையாரும் தாமரையும்தனித்து உரையாடிக் கொண்டிருக்கின்றனர். இரவு நேரம்)

குன்றுடையான்: தாமரை நாச்சி, நாம் நினைத்தடிபடியே நம் மைந்தர்கள் பொன்னனும், சங்கரனுக்கும் திருமணத்தை முடித்துவிட்டோம். இதோ போல் செல்வி அருக்காணிக்கும் திருமணம் நடந்து விட்டால் நமது கடமை முடிந்துவிடும்.

தாமரை: அவளை அந்தப் பத்தினி தெய்வம் தான் சம்மதிக்கச் செய்ய வேண்டும். கண்ணாளா! மைந்தர்களின் மணம் முடிந்தது மகிழ்ச்சியே. ஆனால் அவர்கள் பகைவனை வெல்லுவது எப்போது. மனைவியோடு கூடி வாழ்வது எப்போது? ஐயோ பள்ளியறையில் இருக்க வேண்டிய மருமக்கள் தனியறையிலே வாடுவதென்றால்..

குன்று: தாமரை நாச்சி! கொங்குவள நாட்டில் நிகழ்ந்த மூவேந்தர் படை எடுப்பும், ஆட்சி முறையும் செய்துவிட்ட தீங்குகள் கொஞ்சமல்லவே!

தாமரை: என்ன? சம்பந்தா சம்பந்தமில்லாமற் பேசுகிறீர்கள். அவைகளா குறுக்கே வந்து நம்மக்களை வாழமுடியாமற் தடுக்கின்றன?

குன்று: ஆம், நாட்டிலே மலிந்துகிடக்கும் உயர்ந்தவர், தாழ்ந்தவர் வலங்கை, இடங்கை, என்ற சாதிப் பாகுபாடுகளோடு, சேரர்குடி, பாண்டியர் குடி, சோழர் குடி, பல்லவர்குடி என்ற வேறுபாடுகளும் சேர்ந்து விட்டன. அதனாலேயே கொங்குச் சோழர் ராச ராச கரிகாலர் பாண்டியர் குடிக் காளியப்பனுக்கு அரசுரிமை தர மறுக்கிறார்.

குன்று: காளியப்பன் சோழர் குடியை வெறுக்கிறான். பகைக்கிறான். இந்தச் சாதிபேதமும் பகையும் இருந்து கொண்டேதான் இருக்கும். பகையை வெல்லும் வரை நம் மக்கள் மனைவியரோடு கூடி வாழவும் போவதில்லை.

தாமரை: (யோசித்து) உம்...ஆம் நாதா அதுவும் மெய்தான் ஆனால் அப்படிப்பட்ட அமைதியை யாரால் ஏற்படுத்த முடியும்?

குன்று: முனைந்துவிட்டால் நம்மாலும் முடியும் தாமரை நாச்சி! நமதுமக்களின் வாழ்வுக்காக வேதும், வேற்றுமையை நீக்கி, சமரசம் காணும் முயற்சியை மேற்கொள்வோம். கரிகாற

குன்றுடையான்: சோழனையும், காளியப்பனையும் கண்டு பேசி சமாதான யாத்திரை யொன்று, தொடங்குவோம்.

தாமரை: நோக்கம் புனிதமானது நமது. மக்களுக்கு மட்டுமல்ல, கொங்கு நாட்டுக்கே அமைதியான வாழ்வு இருவது! ஆம் நாதா! அந்த முயற்சியை நாமே செய்வோம்.

குன்று: நல்லது தாமரை நாச்சி அடுத்த கிழமையே தொடங்குவோம் நமது சமாதான யாத்திரையை! படுத்து நிம்மதியாகத் தூங்கு நான் அரண்மனைத் தோட்டத்திலே சற்று உலவி வருகிறேன்.

(குன்றுடையார் வெளியே செல்ல தாமரை நாச்சி கட்டிலில் சென்று படுக்கிறாள். சற்று நேரத்தில் கன்னிமாடப் பகுதியிலிருந்து கூச்சல் ஏற்படுகிறது "ஐயோ, அம்மா திருடர்! விடாதே'. பிடி, கட்டு என்ற குரல்கள் கேட்கின்றன. திடுக்கிட்டு எழுந்து)

தாமரை: (பதறி) கன்னி மாடத்திலிருந்தல்லவா கூக்குரல் கேட்கிறது? அய்யோ! அருக்காணி! என்ன தீங்கு நேர்ந்ததோ..

(ஓடுகிறாள்)

திரை

.................

காட்டுப் பாதை

நள்ளிரவு. குள்ளனும் வேட்டுவ வீரர்களும் கட்டிலோடு கட்டிய அருக்காணியையும் கிளிக் கூண்டையும் எடுத்துக் கொண்டு விரைகின்றனர். தாமரை நாச்சியார் பின் தொடர்ந்து ஓடுகிறாள். வழி மறிக்கிறாள்)

தாமரை: (பதறி) ஆ! என் மகளை யாரடா தூக்கிச் செல்வது? எங்கே போகிறீர்கள்? நில்லுங்கள், கள்ளர்களே! கயவர்களே! கட்டிலைக் கீழே வையுங்கள், கொடுங்கள் கிளிக் கூண்டை. விடமாட்டேன் ஒரு அடி கூட நகர விட மாட்டேன்

(குறுக்கிட்டுத் தடுக்கிறாள்)

குள்ளன் ஏய் மரியாதையா வெலகிப் போயிடு கூச்சல் போட்டுத் தடுத்தே கொன்னு போட்டுடுவோம்! போ போயிடு! ஊம்.

தாமரை: கொள்ளையனே! சொடியவனே! கட்டிலை வையடா கீழே. என் உயிர் உள்ளவரை நீங்கள் போக விடமாட்டேன். இதோ வருகிறார்கள். என் மைந்தர்கள்! வந்துவிட்டார்கள்.

குள்ள: பெண் பிசாசே! தீர்ந்தது ஒங்கணக்கு!

(கத்தியால் தாமரையைக் குத்துகிறான். "ஆ அம்மா! பத்தினித் தெய்வமே! என் மகளைக் காப்பாற்று" அலறிச் சாய்கிறாள். உயிர் பிரிகிறது. குள்ளன் முனிவியோர் கட்டில், கூண்டு இவற்றோடு ஓடுகின்றனர். அவ்வமயம் குன்றுடையார், பொன்னன், சங்கரன், வையம்பெருமாள் ஆகியோர் வேகமாக வருகின்றனர்)

சங்கரன்: எங்கே: எங்கே? கள்ளர்கள்?

வையம்: ஓடிவிட்டார்கள் கயவர்கள்!

(இறந்து கிடக்கும் தாமரை நாச்சியைப் பார்த்துப்பதறி, எடுத்து மடிமேல் சாய்த்துப் பார்க்கிறார் குன்றுடையார்)

குன்று: ஐயோ! தாமரை நாச்சி! என்னுயிரே! வல்லமையுள்ள பெண்புலியே! உன் வாழ்வு இவ்வாறு முடியவேண்டுமா? ஐயோ!

பொன்: அம்மா! அம்மா! கொள்ளையரைத் தடுக்க வந்து உயிரை இழந்தாயோ? பிரிந்தாயே நீ பெற்ற செல்வங்களை?

சங்கர: அம்மா! அம்மா!

பும்மைப் பாட்டு

(அவர்களது மனநிலையை எதிரொலிக்கிறது)

1. அம்மா அம்மா என்றுமே அலறியல்லோ அழுதார்கள்
ஆறாத துயரக் கண்ணீர் அண்ணன் மார் வடித்தார்கள்
தன் மானத் தயால்லலோ தாமரை நாச்சியம்மா
தன் மகளைக் காக்க வந்த பெண்ணரசி மடிந்தாளே.

2. வாழ்விழந்தாள் தாமரையாள் வசமிழந்தார் குன்றுடையார்
தாழ்வது நேர்ந்த தென்று தலைகுனிந்தார் வீரமைந்தர்
அன்புடைய நல்லதங்கை அருக்காணி பைங்கிளியாள்
ஆருயிர் தந்தை மனம் தேறுவரோ துயரமதில்?

3. நெஞ்சிலே நெருப்பெரிய நெருவிழிகள் நீர் சொரிய
நேர்மையுள்ள பொன்னுடன் தேம்பி நின்றார் சங்கரனும்
வெஞ்சமரன் வீரவாகு ஓடி வந்தே சேதி சொன்னான்
வேதனை மறந்து பொன்னர் வீறு கொண்டு எழுந்தாரே.

(பாட்டு ஒலித்துக் கொண்டே இருக்கிறது வீரவாகு ஓடிவருகிறான்).

வீரவாகு: ஆண்டவனே! ஆண்டவரே! அம்மாவைக் கொன்னுட்டு, அருக்காணியையும், பஞ்சவர்ணக்கிளியையும் கொண்டு போறது காளியண் படைட ஆளுங்க தானுங்க

பொன்: தம்பீ!

சங்க: அண்ணா!

பொன்: (வீறு கொண்டவனாக) போ......பகைவர்களை வெட்டி ரத்தத்திலே புரட்டு..தங்கையையும், கிளியையும் மீட்டுவா.

சங்: கட்டளை அண்ணா (வேகமாகப் போகின்றனர்)

இடைவேளை
*************

சிறுகாற்பூவியூர் மாளிகை

(பிரிவுத் துன்பம் தாளாத குன்றுடையார் தன்னை மாய்த்துக் கொள்ள முயல்கிறார். அதைத் தடுத்த பொன்னன்)

பொன்னன்: வேண்டாம் தந்தையே! வேண்டாம் இறக்கும் முயற்சியில் தங்களுக்கு இத்தனை பிடிவாதம் கூடாது. தாயை இழந்த நாங்கள், தங்களையும் இழக்க வேண்டுமா (அழுகிறான்)

(இச்சமயம் சிவயோகியார் வருகிறார்)

சிவயோகி: (உள்ளிருந்தவாறே) சிவோஹம்! சச்சிதானந்தம்.

பொன்: ஆஹா....இறைவா! பெருந்தகையே! வாருங்கள்... பாருங்கள் இந்தக் காட்சியை. இவற்றைத் தடுக்கும் சக்தி எனக்கில்லையே.. ..

சிவயோ: குன்றுடையாரே! இங்கு நடந்தததனைத்தையும் யாமறிவோம். இனிமேல் நீர் கண்டுகொள்ள வேண்டியதெல்லாம் ~~பலிக்கும்~~ பலிக்கும் காலம் வந்துவிட்டது.

குன்று: அவளது இழப்பை, என்னால் தாங்க முடியவில்லையே சுவாமி,

சிவயோ: என்றேனும் ஒரு நாள், ஒருவரை யொருவர் பிரிந்துதான் ஆகவேண்டும். அதுதான் இயற்கையின் நியதி. குன்றுடையாரே மனதை அடக்கித் தவநெறியிலே அதை ச் செலுத்துங்கள்.

குன்று: அந்த நிலையை நான் பெற முடியுமா சுவாமி.

சிவ: ஏன் முடியாது. பெறத் தகுதியுள்ளவர் நீர், பெற்றுத் தருவேன் நானென் என்னோடு வாரும்.

குன்: நல்லது சுவாமி. இத்தக் கணம் முதலே நான் துறவி, தங்கள் மெய்யடிமை.

சிவயோ: நன்று, முற்றிய வினையை மாற்றவல்லது பற்றறுத்தலே.நீர் நிச்சயம் வெற்றி பெறுவீர், பொன்னு

பொன்: இறைவா!

சிவ: இனி, ஆட்சிப் பொறுப்பை நீ ஏற்றுக் கொள், நாங்கள் நற்றவம் புரியக் காடு செல்கிறோம். குன்றுடையான் இனிச் சாக மாட்டார். என்றும் சாகாத வாழ்வு பெறுவார். சிவோகம்...சச்சிதானந்தம்)

(செல்கிறார்கள். பொன்னன் வணங்கி நிற்றல்)

..........0.........

தலையூர் மாளிகை

அதிகாலை. அருக்காணியைக் கட்டிய கட்டில் வைக்கப் பட்டுள்ளது. சிளிக் கூட்டும் அருகில் உள்ளது. காளி யப்பன் வீற்றிருக்க செல்லாத்தான், குள்ளன், செம்பன், வேட்டுவ வீரர்கள் நிற்கிறார்கள்)

குள்ளன்: டாய்! அருக்காணியோட மயக்கம் தெளிஞ்சுட்டுத. சடுதியாக் கட்டுக்களை அவுத்துப் போடு, மூச்சு நின்னுடப்போவுது, ஸ்ரீசி - அலங்காரிக்கு!

வே.வீரன்: தோ! அவுக்கிறேனுங்க!

(பட்டிலில் பிணைந்திருக்கும் கயிற்றையும், முகத்திரையையும் அவிழ்த்து எடுக்கிறான். போர்வையை விலக்கி விட்டுக் குப்பாயி எழுந்திருக்கிறாள்)

குள்ள: ஆங் (வியந்து) தோழிப் பெண் குப்பாயி!

குப்பாயி: (அஞ்சி) ஆ! அய்யோ! நான் எங்கே இருக்கிறேன்? என்ன சோதனை இது. மாபாவிகளே! எதற்காக என்னைத் தூக்கி வந்தீர்கள்? நான் என்ன செய்தேன் உங்களுக்கு? ஊஹூம் உங்கள் வாய் ஏன் அடைத்துவிட்டது? ஊமைகளா? உயிருள்ள பிணங்களா நீங்கள்?

(அருக்காணிக்குப் பதிலாகக் குப்பாயியைப் பார்த்து எல்லோரும் மௌனம் சாதிக்கின்றனர்.)

செல்லா: அருக்காணிக்குப் பதிலா குப்பாயியைச் சிறையெடுத்து வந்திருக் கிற அடிமடையனுங்களுக்குப் பேச வக்குண்டா? வகையுண்டா? புலி வேட்டைக்குப் போயி எலி வேட்டை ஆடி இருக்கிறானுக ஏமாந்த சோணகிரிங்க!

காளி: குள்ளவேடா! என்ன இது? குடிவெறியில் நிகழ்ந்தா? குழப்பத்தில் விளைந்ததா?

குள்ள: (அஞ்சி) அரசே! எப்படியோ தவறு நடந்து போச்சுங்க

காளி: நீங்கள் செய்கின்ற தவறுகளால் என் மானம் போகிறது! மதிப்பு போகிறது! செல்லாத்தாளின் சொல்லம்புகள் என் விலா எலும்பை ஒடிக்கின்றனவே!

குள்ள: கட்டிலென்னமோ அருக்காணியோடதுதானுங்க. அதிலே இந்தக் குப்பாயி படுத்திருக்கிறா! எடுத்து வந்திட்டோமுங்க

காளி: எப்படி நடந்தது இந்த இடமாற்றம்?

குள்ள: தன்னோடு படுக்கையிலே தோழியைப் படுக்க வச்சுட்டு எந்தக் தடியனோடாவது கொஞ்சப் போயிருப்பா ராசாமாவ!

செம்: அருக்காணியோட அழகு சும்மா இருக்கவிடுமா?

குப்பா: (சினந்து) நாவை அடக்கிப் பேசுங்க! கன்னியறம் காக்கற புண்ணியவதி அருக்காணி, இரவு முழுதும் தியானத்தில் இருப்பாள் தனியறையில்.

குள்ள: தியானம்! தப்புத் தண்டா செய்யறதுக்கு அப்படி ஒரு மயானத்திரை!

குப்பா: [illegible] மாயத்திரை போடுகின்ற சூதர்கள் எதிலும் இருக்கிறார் கள். எங்கும் இருக்கிறார்கள். அருக்காணி மாதர்குல மாணிக்கம். பத்தரை மாற்றுத் தங்கம். பழி பாவம் செய்வோர்க்குப் பாயும் சிங்கம்! அவள் யோகம் புரிவது மோட்சத்திற்கல்ல. ஆன்ம பலத்தைப் பெருக்கி, தீயோர்களை அழிக்கப் போகிறாள், தேவி, அருக்காணி! உண்மை என்றும் வெல்லும், பொய்மை சாகும்! இது சத்தியம்!

குள்ள: சத்தியம் ! (சிரித்து) போடி இது பொம்பளை சத்தியந்தானே.

குப்பா: சத்தியம் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒன்றடா பாவி! பொல்லாங்கு பேசாதே!

காளி: போதும் நிறுத்தடி புண்ணியவதி! எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றாதே. குள்ளா! விவாதம் புரியும் வேளையா இது? நமக்கு நேர்ந்துவிட்ட இழிவைத் துடைக்க வேண்டும். ஒடுக்கவேண்டும். பகைவரை! இதற்கு வழி பார் முதலில்!

குள்ள: அரசே நடந்து போனதை மறந்திடுங்க. நம்மோட தவறுக்கு பரிகாரமா குல தெய்வம் குங்குமக்காளிக்கு இந்தக் கன்னிப்பெண்ணை பலியிட்டு பூசை போடுவோம். அப்புறம் பாருங்க நம் மோட வெற்றிக்குத் தானு வழி பொறக்குது.

காளி: (யோசித்து) ஆம்! காளியின் கருணை வேண்டும்! பலி பூசையே எல்லாவற்றிற்கும்பரிகாரம்.

செம்: தேவியோட மனங்குளிர்ந்தா வெற்றிக்கு வழி பொறக்கும்.

செல்லா: இது அக்கிரமம்! அநியாயம்! அழகான பெண்ணை ஆணோடு சேர்த்து வாழவைக்கிறதா? அறுத்துக் கூறுபோடறதா? நீங்க செய்யற கன்னிப் பெண் கொலையைக் காளியே பொறுக்க மாட்டா.

காளி: நச்சுப்பாம்பு நகைக்கிறது! நமக்கு வந்த தொல்லைகளுக்கும் தோல்விகளுக்கும், இந்தக் குடிகேடனே காரணம் குள்ள வேடா! இவனுறவு இன்னமும் வேண்டுமா நமக்கு?

குள்ள: காலுக்கு ஒதவாத செருப்பை, கழட்டி எறிங்க!

காளய: நமக்குப் புத்தி சொல்லவந்த நட்டுவாக்களியின் கொடுக்கை நறுக்கவேண்டும். வீரர்களே! செல்லாத்தாளை முப்பட்டை யாகச் சிறைத்து, கரும்புள்ளி, செம்புள்ளி, குத்தி கழுதை மேல் வைத்து ஊர்வலம் நடத்தி, ஊருக்கு வெளியே விரட்டுங்கள். இன்றிரவு இவளைக் கட்டிலோடு கட்டித்தூக்கி வாருங்கள். காளி கோவிலுக்கு, நாங்கள் சென்று பூஜைக்கான ஏற்பாடுகளை செய்கிறோம்.

(காளியப்பன், குள்ளன், செம்பன் ஆகியோர் செல்கின்றனர் செல்லாத்தாளை வீரர்கள் பகடி செய்தபடி அடித்திழுத்து செல்கின்றனர். குப்பாயி மட்டும், தனித்திருக்கிறாள். மாற்றுடையில் சங்கரன் வருகிறான். தேடுகிறான் குப்பாயி)

சங்கர: (வியந்து) குப்பாயி நீயா? அருக்காணியென்று உன்னையா தூக்கி வந்தார்கள்? நீயா காளிக்கு பலியாகப் போகிறாய்.

குப்பா: ஆமாம் அண்ணா! அருக்காணிக்கு வந்த ஆபத்தை நான் ஏற்க நேர்ந்தது என் பாக்கியம்!

சங்க: நன்றாக ஏமாந்தார்கள் மூர்க்கர்கள்! இன்னமும் ஏமாற வேண்டும். குப்பாயி! வையம் பெருமாளும், வீரவாகுவும், வெளியே நிற்கிறார்கள்., புறப்படு நாம் போவோம்.

குப்பா: அண்ணா! கன்னிப் பெண் ஒரு நாள் வெளியே தங்கினாலும், களங்கம் எதுபார்கள். பகைவரால் சிறையெடுக்கப்பட்ட நான் திரும்பி வரவேண்டுமா? இனியும் வாழவேண்டுமா?

சங்க: குப்பாயி இது தேவையற்ற கலக்கம். நீ களங்கமற்றவள் யோசிக்காதே புறப்படு! நேரமாகிறது.

குப்பா: நான் கட்டுக் குலையாத கன்னிதான். என்றாலும் என்னைத் தீண்டித் தூய்மையைக் கெடுத்துவிட்டார்களே. தூற்றுமே உலகம்! என்னால் அறமக்கள் அருக்காணிக்குக் குறையல்லவோ நேரும்? தயவு செய்து என்னை விட்டு விடுங்கள்! நாய் உணவுப் பாத்திரத்தை நடு வீட்டில் வையார்கள். ஊர் திரும்பிச் செல்லுங்கள். அருக்காணிக்கு ஆறுதல் சொல்லுங்கள்:

சங்கரன்: திருட்டுத்தனமாய்த் தூக்கி வந்த முரட்டுப் பேய்களிடமா என்னை விட்டுச் செல் என்கிறாய்? கூடாதம்மா.

குப்பா: இங்கு யாருடனும் வாழமாட்டேன். வசமிழந்து போகமாட்டேன் நீங்கள் சென்றதும் இவ்வுயிர் பிரமன் அடி சேர்ந்துவிடும். என்னால் யாருக்கும் இழுக்கு நேரவிடமாட்டேன் செல்லுங்கள் அண்ணா! என் இறுதி வணக்கத்தை அறக்காவிக்குச் சொல்லுங்கள்!

கங்க: குழப்பத்தால் ஏதேதோ பேசுகிறாள். குப்பாயி! மாசு மறுவற்றவள் நீ. கொடியவர் செய்த குற்றம், உன்னுயிர் குடிப்பதை ஒரு நாளும் ஒப்ப மாட்டேன். எப்படி மறந்தாலும் விட மாட்டேன். உம் புறப்படு! புறப்படு!

(அவள் கைப்பற்ற முனைகிறான் சங்கரன் அவள் பின்னடையவே திடுக்கிட்டு நிற்கிறான்)

குப்பா: மன்னியுங்கள்! தங்களின் விரதத்திற்கு பங்கம் ஏற்படச் சம்மதியேன். என்னால் அந்தக் கேடு நிகழ வேண்டாம். இதோ வருகிறேன். புறப்படுங்கள்!

(இருவரும் வேகமாக வெளியேறுகின்றனர். உடன் கிளிக் கூண்டையும் எடுத்துச் செல்கின்றனர்.)

திரை

* * * * * * * *

## காளி கோவில்

(சந்நிதி முன் காளியப்பன், குள்ளன் செம்பன் மற்றும் பலர் நிற்கின்றனர். பூசைக்கான ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது. வீரனொருவன் பெரிய கத்தியுடன் நின்று கொண்டிருக்க, உடுக்கை அடித்து ஒருவன் பாடிக் கொண்டிருக்கிறான்)

காளிய: குள்ள வேடா! பலி இன்னும் வரவில்லையே. எவ்வளவு நேரம் காத்திருப்பது? அசம்பாவிதம் ஏதேனும் நடந்திருக்குமா?

குள்ள: தெய்வ காரியத்திலா அசம்பாவிதம்? எதுவும் நடந்திருக்காது அரசே! இதோ கொண்டாந்திருவாங்க. கொஞ்சம் பொறுங்க (வேட்டுவ வீரனொருவன் ஓடி வருகிறான்)

வே.வீ: அரசே! பலிப்பெண் தப்பிச்சுப் போயிட்டாளுங்க! சங்கரனே நம்மோட அரமனையிலே புகுந்து கொண்டு போயிட்டானுங்க வாசல்ல பத்து வீரங்க எதிர்த்து இருக்காங்க அத்தனை பேரையும் வெட்டிப் போட்டுட்டுப் போயிட்டானுங்க அரசே

செம்ப: பலிப்பெண் தப்பிச்சிட்டாளா? பஞ்சவர்ணக் கிளி?

வே.வீ. அது கூண்டிலேதான் பத்திரமா இருந்ததுங்க. ஆனக் கன்னை அவுங்க கொண்டு போயிட்டாங்க!

காளி: நிறுத்துங்கள் பூசையை (எல்லாம் நிற்கின்றன. கோபமாக). பெருங்கேடு நேர்ந்துவிட்டது! குள்ளவேடா! கொற்கையம்மன் உயிர்பலி தப்புவதா? அரண்மனையிலிருந்து பலியை அன்னியன் மீட்டுச் செல்வதா? தேவியின் கோபம் தீர்த்து விடுமே என் குடியை! ஐயோ! பலியும் போய்விட்டது என் பாக்கியமும் போய்விட்டதடா பாவி!

குள்ள: (வருந்தி) அரசே இப்படியொரு அசம்பாவிதம் ஏற்படும்னு நான் எதிர்பார்க்கவே இல்லீங்க! கோயிலுக்கு நாம்ப வந்திட்டோம். செல்லாத்தாளைத் தண்டிக்க சிலபேரு போயிட்டாங்க. காவல் கொறஞ்ச நேரம் பார்த்து அரண்மனையிலே நொழஞ்சிருக்கான் திருட்டுப் பயல். என்னோட வாழ்க்கையிலே இதுபோல ஒரு ஏமாளித்தனம் தவறு மேலே தவறு எப்பவுமே ஏற்பட்டதில்லே.

காளி: நாம் ஏமாறலாம் தெய்வத்தையா ஏமாற்றுவது? தெய்வத்திடமா தவறு செய்வது? உன்னை நம்பியே பலி பூசைக்கு ஏற்பாடு செய்தேன்.

காளி: என்னையும் என் குடும்பத்தையும் சோகத்தீயில் தள்ளி விட்டாயே! பாவி! காளியின் இரத்த விழிகள் சுட்டெரிக்கின்

காளி: நனவே! கோபச் சிரிப்பு கொல்கிறதே என்னை என்னடா பரிகாரம்? என்னடா பரிகாரம்?

குள்ள: (அஞ்சி) அரசே! ஏற்பட்ட தவறுகளுக்கெல்லாம் நானே தான் காரணம் என்றே உங்களுக்கு வந்திட்ட இந்த அபகீர்த் தியையும் களங்கத்தையும் போக்க நானே என்னை காளிக்குப் பலி, கொடுத்திடறேன். இதோ நான் தயார் என்னை பலி கொடுத்து பூசையை முடியுங்க!

(காளிதேவியின் முன் வந்து வணங்கி நிற்கிறான்)

செம்ப: அரசே! செங்க இபாட்ட தவறுங்களை ஒத்துக்கிட்டு, பலியாகத் துணிஞ்ச குள்ளனை மன்னியுங்க! நமக்கு ஏற்பட்ட இந்தப் பழிக்குப் பழியாக குன்றுடையான் மக்களை நானே பழி வாங்கறேன். என்னோட தொழில் திறமையைக் காட்டி, இன்னும் பத்தே நாளைக்குள்ளே, வெள்ளாங்குளத்து ஏரியிலே பொன்னனைக் கொலை பண்ணி பிணத்தைக் கழுகுக்கு எறையாக்க றேன். சமயம் பார்த்துச் சிறுகாற்புலியூர் மேலே படை யெடுத்துப் பாயுங்க வெற்றி நம்மோடது. வேதனையை விடுங்க!

காளி: செம்பா! நீயே செயலாற்றத் தொடங்கிவிட்டாயா?

செம்: ஆமாங்க! இதிலே வெற்றிபெறலேன்னு எம்பேரு செம்பனல்ல இது சத்தியம்!

காளி: நன்று. அவ்வாறே நடக்கட்டும். பழிக்குப் பழி!

திரை

* * * * * * *

காட்டுவழி

(சங்கரன், குப்பாயி, வையம்பெருமாள் மூவரும் வருகின்றனர். குப்பாயி நடக்க முடியாமல் மிகவும் சோர்ந்திருக்கிறள்.)

சங்கரன். வையம் பெருமாள்! குப்பாயி மிகவும் சோர்ந்து விட்டாள் பாவம். நடக்கவே முடியவில்லையே.

வையம்: குதிரை மேற் ஏறவும் மறுக்கிறள். கன்னியறம் தடுக்கிறது. வேகமாக நடக்கவும் முடியவில்லை. அவளையொட்டி நாமும் மெல்லவாக நடப்பதால், காலதாமதம் ஆகிறது.

குப்பாயி: என்னை மன்னித்துவிடுங்களண்ணு...கொஞ்ச நேரமாவது நான் ஓய்வு கொண்டால்தான் என்னுல் இனி நடக்க முடியும்.

சங்க: கவலைப் படாதே குப்பாயி..நீ இந்த மரத்தடியில் ஓய்வு எடுத்துக் கொள்.. நாங்கள் சென்று உனக்குப் பழங்களும், தண்ணீரும் கொண்டு வருகிறேம்.

குப்பா: ஆகட்டும்: அண்ணு....

(மூவரும் போகின்றனர். தனிமையில் இருந்த குப்பாயி, தன்னை அன்னியர்கள் கட்டித்தூக்கிச் சென்றதால், கன்னித் தன்மைக்குக் களங்கம் ஏற்பட்டுவிட்டதே என்ற வேதனையில் ஏதோ தீர்மானித்தவளாக)

குப்பாயின் மனத்தின் எதிரொலி

குப்பாயி என்ன செய்யப் போகிறுய்? அன்னியன் ஆதிக்கத்தில் சிறைப்பட்டிருந்த நீ, அவர்களால் தீண்டப்பட்ட நீ, மறுபடியும் கன்னியறம் காக்க எந்தமுகத்தோடு அருக்காணியைக் காணப் போகிறுய்? ........கன்னி அறத்திலே தவறு நேர்ந்து விட்டால் கொடுமையான சோதனை உண்டே!...குடேற்றிய முக்காலியில் மூன்றே முக்கால் நாழிகை குந்த வேண்டுமே! ....நீ இதற்கெல்லாம் அஞ்சியவள்ளல்ல!..எனினும்...அப்படி பெயர் கெட்டு, மானங் கெட்டு, நீ வாழ வேண்டுமா?... வாழவேண்டுமா? (ஏதோ தீர்மானித்தவளாக பக்கத்தி லுள்ள கொடிகளைப் பிடுங்குகிறுள்).

பாட்டு

தொகையறா

ஒரு ரோமம் போனுலும் - கவரிமான் உயிர் வாழ்வது உயர்வான லட்சியமே பழுதானுல் பயன்படாது.

காட்சி — 32 

பாட்டு

மானம் பெரிதென்றவள் — மனித
வாழ்வு சிறிதென்றவள்
ஊனம் நிகழவில்லை — எனினும்
உயிரையே துறந்தாள்.

திரை

## திருகாற்பூவியூர் மாளிகை

(அரசன் பொன்னன் உட்கார்ந்து, ஏட்டில் ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறான். சங்கரன் வையம்பெருமாள், வீரவாகு மூவரும் தலைகுனிந்த வண்ணம் வருகின்றனர்.)

பொன்: சங்கரா! என்ன இது! நடையில் தளர்வும், முகத்தில் சோகமும் ஏன்? குப்பாயியை மீட்டுவரவில்லையா?

அருக்கா: (ஓடிவந்து) எங்கே அண்ணா குப்பாயி?

பொன்: என்னப்பா மௌனம்? குப்பாயியைப் பகைவரிடமிருந்து மீட்க முடியவில்லையா?

சங்க: பகைவரிடமிருந்து மீட்டுவிட்டேன் அண்ணா! ஆனால் எமனிடமிருந்து மீட்க முடியவில்லையே.

அருக்கா: (பதறியவளாக) ஆ......குப்பாயியை எமன் கொண்டு போய் விட்டானா என் ஆருயிர்த்தோழி இறந்துவிட்டாளா சின்ன அண்ணா?

சங்க: ஆமாம் தங்கையே! அன்னியன் வசப்பட்டதால் தன்னித் தன்மை களங்கம் பட்டதென்று கதறினாள். மானத்திற்கு அஞ்சி மரக்கிளையில் நாண்டு கொண்டு மடிந்துவிட்டாளம்மா.

அருக்கா: என் ஆருயிர்த் தோழியே! தவமான வாழ்வில் அவமானம் நேர்ந்ததைப் பொறுக்காத புண்ணியவதியே நீ வாழ்வை முடித்துக் கொண்டாயா? கன்னிகைத் தெய்வமே! கற்புக் கரசியே! அந்தக் கன்னியின் ஆத்மாவுக்கு சாந்தியைக் கொடு. (அருக்காணி போகிறாள். உடன் வீரவாகுவும் கிளிக் கூண்டுடன் செல்கிறான்).

வையம்: பொன்னர் மன்னா. உங்கள் இருவரையும் மணம் பிரிந்துகொண்ட என் தங்கைமார்கள், வாழாமல் சாகிறார்கள். குப்பாயி மெய்யாகவே செத்துவிட்டாள். அதைவிட இது மேலானதல்லவா?

பொன்: அது நாங்கள் செய்து கொண்ட பிரதிக்ஞையின் விளைவு வையம் பெருமாள்...இந்த மனத்தாங்கல் வரக்கூடாதென்று தான் தொடக்கத்திலேயே எங்கள் நிலையை நாங்கள் விளக்கினோமே

சங்க: அண்ணா! மைத்துனர்க்கு மனநிலை சரியில்லை. அவருடன் நானும் குளித்தலை சென்று, ஓரிரண்டு நாள் தங்கி அவரை சாமாதானப் படுத்தி வருகிறேனண்ணா.

பொன்: நல்லது. போய் வாருங்கள் (வணங்கி போகின்றனர்)

(இது சமயம் செம்பான் ஒரு பொன் வள்ளத்தோடு வருகிறான்).

செம்பாட, வணக்கம் அரசே!

பொன்: வாரும், நீர் யார்? என்ன வேண்டும்?

செம்பா: நான் ஒரு வழிப் போக்கனுங்க. வெள்ளாங்குளத்திலே ஒரு பிரபுவுக்காக இந்தப் பொன் வள்ளத்தெ செஞ்சு கொண்டு போறேனுங்க. மாலெ மசங்கிப்டுது. தயவு செஞ்சு, இதை கருவூல அறையிலெ வெச்சுக் காப்பாத்திக் கொடுக்கணுமிங்க

பொன்: நல்லது. கொடுத்துச்செல்லும்.

செம்பா: ரொம்ப நன்றிங்க.....வெல மதிப்புள்ளதுங்க இந்தப் பொன் வள்ளம் (அதைக் கட்டியுள்ள துணியைப் பிரித்து எடுத்துக் காட்டுகிறான்.) கொஞ்சம் கவனமா....

பொன்: பாதுகாக்க இவண்டும்..இவ்வளவு தானே. நீர் போம். நான் பார்த்துக் கொள்கிறேன்.

செம்பா: நான் ஏழைங்க உங்களெ தெய்வமா நம்பிக் கொடுக்கிறேனுங்க (வள்ளத்தை வைத்துப் போகிறான்)

--------0----------

"வீதி

(கையில் பூக்குடலையுடன் பூசாரி வருகிறான். தவளையை மிதித்துவிட்டகால் துள்ளிகுதிக்கிறான். வந்து கொண்டிருந்த செம்பஞ்சாரி அதுகண்டு சிரிக்கிறான்.)

பூசாரி: தவக்காளெ, தவக்காளெ! (குதிக்கிறான்)

செம்ப: தவக்காளை தானே, கொம்புகாளையில்லியே. கடிக்காத சீவன். இதுக்கு பயந்து, இப்படி சட்டியிலே போட்ட மீனுட்டந் துள்றியே. பதுகோழையா நீ.

பூசாரி: யாரய்யா நீ. என்னைப் பார்த்துக் கோழைங்கறே. எந்த ஊரு.?

செம்பா: ஆ.......எ..தலை.

பூசாரி: (யோசித்து) தலையா....ஓ....தலையூர்..மேக்குச் சீமை தலையூர்க்காரனு நீ.

செம்ப: நீ. எந்தக் கோயில் பூசாரியய்யா?

பூசாரி: வாங்கல்ல, குன்றுடையார் கட்டியிருக்கிறாரே அந்தக் கண்ணகி கோயில் பூசாரி.

செம்ப: ஓ. அதென்ன கோயில், எம்மோட தலையூர்க் காளிக்கு எம்மாம் பெரிய கோயில், எம்மாம் பெரிய மானியநெலம் தெரியுமா?

பூசாரி: எங்க கோயில் நெலத்து வெள்ளாண்மையைப் பாத்தா நீ மயக்கம் போட்டு விழுந்திருவே.

செம்பா: அப்படி என்னப்பா வெள்ளாமை?

பூசாரி: வயலெல்லாம் சமுத்திரமாட்டம் தண்ணி, நெல்லு கதிர்விட்டா நாலு மொழமிருக்கும். வாழைக்காய் ஒவ்வொண்ணும் கோயில் தூணாட்டம், கரும்போட வளத்தி பனைமரம் போல, தேங்காயும், மாங்காயும் ஏத்தச்சாலு பெரிசு. எலுமிச்சம் பழம் பூசனிக்காய் மாதிரி. கேட்டாக் கேளு. விட்டாவிடு. அருகம்புல்லு வளந்திருக்கும் ஆளொசரம் இன்னும்....

செம்பா: என்னய்யா. பூசாரி! (சிரித்துக் கொண்டே) உனக்கு எதுனுச்சும் மப்பா? தண்ணித்தவக்களை கொம்புக் காளையாத் தெரியுது அருகம்புல்லு ஆளொசரந் தெரியுது...யோ! எங்கப்பா சொல்வாரு ஆசாரி அரைப் புளுகன், பூசாரி முழுப் புளுகன்னு, அது சரியாத்தா இருக்கு.

பூசாரி: யோ ! ஔராதே. எங்க மன்னேட பெருமையும், மன்னேடெ நீதியும்உனக்குத் தெயாது.

செம்: ஏந்தெரியாது? உங்களுக்குத்தான் ஒன்னுமே கிடையாதே. கண்டல் பன்ற தலையாரியயே படைக்குத் தளபதியாவும், வெச்சுக்குவீங்க, கோயில் பூசாரியாக்கூட வெச்சுக்கு வீங்களே.

பசாரி: அதிலென்னப்பா தப்பு? எல்லோரும் ஆண்டவனேட பிள்ளைங்க சாதியிரண்டொழிய வேறில்லே. சாற்றுங்கால்.... (வீரவாகுவைப் பார்த்து) அதோ வீரவாகுச் சாம்பனே வராறே. அவரையே கேட்டிருவோம்.

செம்ப: (பதறியவளுக) அய்யய்யோ! வெற்றி மதயானே வீரவாகு சாம்பனு! வேணும்பா அந்த மலேயோட மோதினு மண்டை ஒடையும் நான் வாரேன்: (ஓடுகிறுள்)

பசாரி: இடபேடி! பேரைச் சொன்ன ஒடனேயே இப்படி ஓடறயே. நீ என்னைப் பாத்துக் கோளைங்கறே...

(தவளே ஒலி வருகிறது)

ஆ ! தவக்களே , தவக்களே. (ஓடுகிறுன்).

**********0**********

சிறுகாற் புலியூர் மாளிகை

செம்ப : அரசே! வணக்கம்

பொன் : வாரும் இரண்டு மூன்று நாட்களாகக் காணுமே. எங்கே போயிருந்தீர்?

செம் : பக்கத்து ஊரிலே மச்சினன் இருக்காருங்க பார்க்கப் போனேனுங்க

பொன் : வெள்ளாங்குளம் புறப்பட்டாயிற்று?

செம்ப : ஆமாங்க அரசே! அந்தப் பொன்வள்ளம்.....

பொன் : அருக்காணி! நமது கருவூல அறையைத் திறந்து பொன் வள்ளத்தை எடுத்து வந்து கொடு.

அருக்கா : இதோ எடுத்து வருகிறேன். (சென்று துணியால் கட்டிய ஒரு வள்ளத்தோடு வருகிறாள். அதை வாங்கிச் செம்பனிடம் கொடுக்கிறார் பொன்னன். அதைப் பிரித்துப் பார்த்த செம்பன்).

செம்ப : அரசே! என்னங்க இது அநியாயம்! பொன்னுலே செய்த வள்ளம் கொடுத்தேன். மரத்தாலெ செஞ்ச வள்ளத்தெக் கொடுக்க றீங்களே! இது உங்களுக்கு ஞாயமா? அய்யய்யோ....

பொன் : (வாங்கிப் பார்த்து வியந்து) ஆ.....ஆமாம் என்ன ஆச்சரியமிது. அருக்காணி! செம்பன் கொடுத்த பொன் வள்ளம் தானே இது. எப்படி மரவள்ளமாக மாறிற்று?

அரு : ஆமாண்ணு! புரியவில்லையே. இதுபோல் வள்ளம் நம்மிடம் ஏது. இது எப்படி நேர்ந்தது? காற்று நுழையாத கருவூல அறையில் எந்தக் கள்ளன் நுழைந்துவிட்டான்?

செம்ப : கள்ளனு! அடைக்கலமா வெச்ச பொருளை அபகரிக்க றதுக்கும், தங்கச் சாமான் வாங்கிட்டு மரச் சாமனைக் கொடுக்கிறதுக்கும் கள்ளன் வேறே வரணுமா?

பொன் : செம்பா! துடுக்குத்தனமாகப் பேசாதே! துண்டித்து விடுவேன் நாக்கை. நீ கொடுத்த வள்ளந்தான் இது. ஏமாற்றவும் களவாடவும் எங்களுக்கென்ன தேவை?

செம்பன் : ஐயோ சாமி! நீங்க பெரிய எடம். நான் ஏழைங்க. நீங்க என்னோட நாக்கையும் துண்டிக்கலாம் தலையையும் துண்டிக்கலாம். ஆனா இந்தக் கள்ளத்தனம் வெளியே தெரிஞ்சா உங்க மதிப்பு என்ன ஆகும்? நெனச்சுப் பாத்

செம்ப : தீங்களா? ஊர் சிரிச்சு, நாடு சிரிச்சுப் போகுமே. வேண்டாமுங்க, நாங்குடுத்த பொன் வள்ளத்தைக் குடுத்திருங்க

பொன் : 1 செம்பான் :.......நான் சொல்வது உண்மை இது நீ கொடுத்த வள்ளந்தான். பொன், எப்படி மரமாயிற்று என்பதுதான் தெரியவில்லை. போகட்டும் எடைக்கு எடை பொன் கொடுத்துவிடுகிறேன். பெற்றுக்கொள்.

செம்ப : சாமி சாமி! எனக்கு அது வேண்டாமுங்க. நாங்கொடுத்த பொன் வெள்ளத்தே திருப்பிக் குடுத்தாப்போதுமுங்க. இல்லேன்னு....சபையைக் கூட்டி "நான் உங்ககிட்டப் பொன் வள்ளங்குடுக்கலே"ன்னு நீங்க சத்தியம் பண்ணிப் போடுங்க.

பொன் : செம்பான் : ..என் னை சோக லைக்குள்ளாக்காதே. நான் சத்தியம் வேண்டுமானால் செய்கிறேன். உன் திருப் திக்காகத் தனியே வந்து, கண்ணகி கோயிலில் கையடித்துக் கொடுக்கிறேன்.

செம்பா : (யோசித்து) ஆமாங்க நீங்க ராசா நாலு பேர் முன்னாலே, மா லை சந்தனம் போட்டு சத்தியம் பண்றது கேவலந்தான். சரீங்க. நீங்க இப்பவே தனியா என்னோடை வெள்ளாங் குளத்துக்குவாங்க. ஏரியிலே குளிச்சு முழுகி, மா லை சந்தனம் போட்டு, கரையிலிருக்கிற புள் ளையாரு கோயில்லெ உழுந்து கும்பிட்டு சத்தியம் பண்ணிக் குடுங்க. அப்பத்தான் ஒத்துக்குவேன்.

பொன் : நல்லது. அவ்வாறே செய்கிறேன்.

அருக்காணி : அண்ணா! இதில் ஏதோ கபடம் இருக்கிறது. நீங்கள் வெள்ளாங்குளம் போகக் கூடாது. இவன் சதிகாரன் இவ னை நம்பித் தனியே போகவேண்டாம் பெரியண்ணா.

பொன் : அருக்காணி! நாம் பகைவர்க்கும் நீதி வழங்க வேண்டும். எனது வல்லமையை நீ நம்புவது உண்மையானால் என் னைத் தடுக்காதே.

அருக்காணி : (கண்கலங்கி) நல்லது. தடுக்கமாட்டேன் அண்ணா.

பொன் : செம்பான் ! புறப்படு

(இருவரும் போகின்றனர். அருக்காணி ஏதோ யோசித்தவளாக உள்ளே செல்கிறாள்).

.........0.........

காட்சி - 36

தனி இடம்

(குளிக்த லை)

(சங்கரனும், வையம் பெருமாரும் "வெட்டுப் புலி ஆடச் சித்தமாக ஜன்னனர்.)

வைய: மைத்துனரே! பெண்ணை மணந்தவன் இல்லறம் நடத்த வேண்டும். மணந்து கொண்டு பெண்ணோடு வாழாததும் குற்றம். மணக்காமல் பெண்ணோடு வாழ்வதும் குற்றம். இதுவே உலகப் பொதுநெறி. இது மெய்யென்றால் இந்த வெட்டுப் புலி ஆட்டத்தில் நானே கெலிக்கிறேன். பொய்யென்றால் தோற்கிறேன்.

சங்க: சரி! போட்டிக்குரிய நிபந்தனையைச் சொல்!

வையம்: வென்றவர். உரிமையோடு உலாவலாம். தோற்றவர் ஒரு நாழிகை சங்கிலியால் கட்டுண்டு, இரும்புக் கப்பறையைத் தலையில், கழுத்துவரை கவிழ்த்துக் கொள்ளவேண்டும். சம்மதமா?

சங்க: (சிரித்தவனாக) ஆஹா! மைத்துனரே! மண்வெட்டியை மலை மேல் செலுத்துகிறாயா? தொடங்கு ஆட்டத்தை!

(இருவரும் புலியாகவும், ஆடாகவும் கட்டத்திலே காட்டத்திலே காய்வைத்து ஆடுகின்றனர்)

வையம்: (காயை நகர்த்தி) இதோ கட்டிவிட்டேன்.

சங்க: (தூக்கி வைத்து) இதோ வெட்டிவிட்டேன்!

வையம்: ....ஐயா! இதோ கட்டு! இனி ஒரு அடி நகரமுடியாது புலியாரே!

சங்க: (பதறி) அடடா! கட்டிவிட்டாயே புலியை! வையம் பெருமாள் நீ வென்றுவிட்டாய்!

வையம்: இல்லை என் கருத்து வென்றது. என் கொள்கை வென்றது. இதோ வருகிறேன். (உள்ளே சென்று சங்கிலி, கப்பறையோடு வருகிறான்). என் தங்கைமார்களின் ஐம்புலன்களையும், ஒடுக்கித் தனி அறையிலே சிறை வைத்தீர்களல்லவா?..... ஆண் சிங்கமே! நீ ஒருவனுவது அந்தத் துன்பம் எப்படியிருக்கிற தென்பதை சிறிது நேரம் அனுபவித்துப் பார்.

(சங்கிலியால் கட்டப் போகும் சமயம் வீரன் ஓடிவன் வருகிறான்).

வீரன்: இளவரசே! இளவரசே..

சங்க: யார் நீ.

வீரன்:

வீரன்: நான் கன்னிமாடத்துக் காவல்காரனுங்க. அருக்காணியம்மா இந்த ஓலையே உங்களைக் கண்டு குடுத்திட்டுவரச் சொன்னுங்க இந்தாங்க இளவரசே.

(சங்கரன் படிக்கிருன்) அருக்காணியின் குரல்.

அன்புள்ள சின்னண்ணு!

ஆருயிர்ப் பெரியண்ணனுக்கு ஆபத்தொன்று வந்திருக்கிறது. செம்பான் 'என்பவன் நம்மிடம் தங்கவள்ளமொன்றை அடைக்கலமாகக் கொடுத்தான். இரண்டு நாள் கழித்துவந்து கேட்டான். எடுத்துக் கொடுக்கும்பொழுது தங்கவள்ளம் மரவள்ளமாக மாறியிருந்தது. இது விந்தையான சம்பவம் "நான் கொடுத்த பொன் வள்ளமே வேண்டும். என்னை நீர் வஞ்சித்துவிட்டீர்" என்று மிகுதியாகப் பேசினன். அதன் எடைக்கு எடை பொன் கொடுப்பதாகச் சொன்னர். அவன் ஏற்கவில்லை வெள்ளாங்குளம் வந்து சத்தியம் செய்ய வேண்டுமென்ருன். நான் தடுத்தும் கேளாமல் ஒப்புக் கொண்ட பெரியண்ணன். அந்த வஞ்சகனேடு தனிமையில் சென்றிருக்கிருர். என்ன நேருமோ என்று அஞ்சுகிறது என் மனம். கள்ளங்கபடமற்ற பெரியண்ணனை, சூதுக்காரன் தப்பாமல் படுகுழியில் தள்ளிவிடுவான். இது பகைவரின் சதித்திட்டம் என்று எனக்குத் தோன்றுகிறது. சின்னண்ணு! பெரியண்ணனைக் காப்பாற்ற உடனே புறப்படுங்கள் புறப்படுங்கள்.

அன்புத் தங்கை அருக்காணி.

சங்க: ஆ! என்ன கொடுமை! அண்ணுவுக்கு ஆபத்தா? பொன்னுனை நெறிவளர்க்கும், கன்னுனை தமிழ் மறவன் என் அண்ணுவுக்கு ஆபத்தா. வையம் பெருமான்! நான் நேராக வெள்ளாங்குளம் செல்கிறேன். அரண்மனையில் யாரும் இல்லாததால் நீ சிறுகாற்புலியூருக்குப் போ. வீரனே! ஓடிவா!

(ஓடுகிருன்).

------0------

ஏரிக்கரை பிள்ளையார் கோவில்

(ஏரியில் குளித்து முழுகி, மாலை சந்தனமிட்டு பொன்னன் வருகிறான். பின்னால் செம்பான் வருகிறான்)

செம்பான்: பொன்னழகரே! இந்த ஏரிக்கரைப் பிள்ளையாரு சக்தியுள்ள தெய்வம். பொய்ச்சத்தியம் பண்ணினவங்களோட கொலத்தையே கருக்கிப் போடுவாரு.

பொன்: செம்பான். பிறர் சொத்தை அபகரித்துப் பெருமையோடு வாழ்கின்ற பொய்யர்களிடம் இதைச் சொல். "பொய்யாமை யன்ன புகழில்லை எய்யாமை எல்லா அறமுந்தரும்" என்ற குறள் நெறி யானறிவேன். தெய்வத்திடம் நான் அஞ்ச வேண்டியதில்லை.

செம்ப: அப்ப சரி! பிள்ளையாரை மூணுதரம் சுத்தி வாங்க "செம்பான் கொடுத்த பொன் வள்ளத்தையே திருப்பிக்கொடுத்தேன் இது சத்தியம்"னு சொல்லி குப்புற உழுந்துகும்பிட்டு கையடிச்சு கொடுங்க.. அப்பத்தான் நான் ஒத்துக்குவேன்.

பொன்: அப்படியே செய்கிறேன்.

(பொன்னன் பிள்ளையாரை மூன்றுமுறை சுற்றி கீழே விழுந்து கும்பிடுகிறான். அதுசமயம் செம்பான், மடியிலிருந்து கத்தியை எடுத்து முதுகில் குத்தப் பாய்கிறான். கள்ளமறிந்த பொன்னன் புரண்டு சென்று தப்பி எழுந்திருக்கிறான். அதேசமயம் அங்குவந்த சங்கரன் செம்பானை குத்திக் கொல்கிறான். ஐயோ என்ற அலறல்).

பொன். தம்பி சங்கரா!

சங்க: அண்ணா! (ஆரத்தழுவிக் கொள்கின்றனர்) அண்ணா! செம்பான் காளியப்பனின் கையாளாயிற்றே!

பொன்: எனக்கு அது தெரியாமல் போயிற்று. இருப்பினும் எச்சரிக்கையாகத்தான் வந்தேன். சமயத்தில் நீ வந்து காப்பாற்றினாய்.

சங்க: இல்லையண்ணா! அதற்குள் தாங்களே அவனது கத்திக்கு அகப்படாமல் புரண்டுவிட்டீர்களே.

பொன்: தம்பி. தங்கையின் சந்தேகம் பொய்ப்பித்தே இல்லையடா

சங்க: தங்கையின் ஓலைகண்டே இங்கு நான் ஓடிவந்தேன்... அண்ணா. தங்கை வெறுங் கன்னியல்ல தெய்வக்கன்னி..

(வையம்பெருமாள் வரவாகு முதலியோர் வருகின்றனர்)

வையம்: (அவசரமாக வந்து) மைத்துனரே மைத்துனரே! வேட்டு

வையம்: வரின் சதிச் செயல் பயங்கரமாக விளையாடிவிட்டது.

பொன்: என்ன மைத்துனரே!

வையம்: சத்தியம் செய்ய தாங்கள் இங்கு வந்துவிட்டீர்கள் சங்கரனும் நானும் குளித்த லையில் இருந்தோம். ஆளில்லாக் கோட்டையிலே அகப்பட்டது லாபமென்று கொள்ளையடிக்க வந்து விட்டது வேட்டுவப்படைகள். தன்னந்தியாக எதிர்த்து நின்று கொடியவர்கள் கூட்டத்தைக் கொன்றுகுவித்தான் வீரவாகுச் சாம்பன். அற்புதம் மைத்துனரே அற்புதம்.

வீரவாகு: இல்லீங்க. ஆண்டவரே! தக்க சமயத்திலெ வந்தாருங்க வையம் பெருமாளு. வெட்டிக் குவிச்சாரு வேட்டுவப் படைகளை. ஒருத்தங்கூட மிஞ்சலீங்க.

பொன்: [illegible] புலே! வில்லெடுத்து அம்பெடுத்தால் வெற்பும் தலைசாயும், வெள்ளிவேல்களை எடுத்தால் வேங்கைமிரண் டோடும். என்பதை இரண்டு வீரர்களும் மெய்ப்பித்துக் விட்டீர்கள் ஆஹா! எனது நெஞ்சுகுந்த பாராட்டுக்கள்.

சங்க: அண்ணா! சதித்திட்டத்தின் அடிப்படையே அந்தப் பொன் வள்ளமாகத்தான் இருக்கவேண்டும்.

வீரவாகு: அதை அருக்காணியம்மா கண்டு புடிச்சிட்டாங்களே

பொன்: எப்படி வீரவாகு?

வீரவாகு: அரமனை ஆசாரியக் கூப்பிட்டு காட்டினுங்களாம் பச்ச மாவிலி மரத்திலெ வள்ளம் பண்ணி, பொன்முலாம் பூசி இருக்கான். செம்பான். சித்திரை மாசத்து வெய்யில்லெ காத்தில்லாத கருவூலத்திலெவச்சா ரண்டு நாள்லே உருகி வழிஞ்சு பொன் வள்ளம் மரவள்ளம் ஆகுமாம். பெரியாண்ட வரைக் கொல்லணுமின்னே அவெ இந்த சதி பண்ணியிருக்கான் பாவிப்பய (ஓங்கி உதைக்கிறான் செம்பனை).

பொன்: தம்பி சங்கரா! சதிக்குச் சற்று நாமும் இடங்கொடுத்து விட்டோம். இனி நடப்பதைக் கருத்துடன் கவனிப்போம். வாருங்கள். போவோம்.

(எல்லோரும் செல்கின்றனர்)

திரை

## தலையூர் மாளிகை

காளியப்பனும், குள்ளனும் நின்று கொண்டிருக்கின்றனர்.

வீரன்: (ஓடிவந்து) அரசே ! அரசே !

காளி: என்ன விபரம்?

வீரன்: செம்பான் அவுங்களை, வெள்ளாங்குளத்திலே சங்கரன் கொன்னு போட்டுட்டாருங்க. சிறுகாற்புலியூரை சூறையாடப் போன நம்ப படைங்களை வீரவாகுச் சாம்பனும், வையப் பெருமாளும் வெட்டிக்குவிச்சுப் போட்டாங்க. அரசே. சேதம் ..... படுசேதமுங்க.

காளி: ஐயோ ! .....இதிலும் தோல்வி, இப்பொழுதும் தோல்வி. என் எண்ணக்கோட்டையிலே இடி விழுந்துவிட்டது. குள்ளா ! விழுந்துவிட்டது. கெட்டிக்கைமா தேவி என்னைக் கைவிட்டு விட்டாள்.

குள்ள: நான் அப்படி நெனைக்கலெ அரசே. நம்மைச் சோதனைக்கு ஆளாச்சி இதிலே கெலிப்பமான்னு பாக்கரா. எப்படியும் நாம்ப கெலிச்சே தீரணும். இனிமே என்ன ஆனாலும் சரி. எல்லாத்துக்கும் சேர்த்து ஒரே பரிகாரம் .

காளி: என்ன அது?

குள்ளன்: அந்த வேளாளப் பிள்ளைங்களை வெற்றி பெறணும்னு. நேருக்கு நேரா நின்னு பாத்திர வேண்டியதுதான். நம்மகிட்ட பலமிருக்குது படையிருக்குது. பகைவரோட தலைகளை வெட்டிக் கொண்டாந்து, காளியோட மனங்களிக்க ரத்தவேள்வியே செஞ்சுபோடுவோம்.

காளி: ஆம். நமது மானம் நிலைக்க அதுதான் சரி. குள்ளா !

குள்ள: அரசே:

காளி: வெளிர்குடிப்பபொன்னன் விரும்பினால், கொங்குச் சோழர் படை உதவி புரிவாரா?

குள்ள: அது நடக்காத காரியம் இரசே! கொங்கு நாட்டு அரசாங்கமே கொழிப்பத்திலே தவிக்குது. வடக்கே கொய்சலரோட பயமுறுத்தல். தெற்கே வீரபாண்டியர் எதிர்ப்பு. மேற்கே சேரனோட கோபம். கெழக்கே சிற்றரசர் தொல்லை. இதுக்கு மத்தியிலே தடி எடுத்தவன் தண்டல்காரன். கோலெடுத்தவன் கொண்டல்காரன்னு உள்நாட்டுக் குழப்பம் உசிரை வாங்குது. சோழன் தன்னைக் காப்பாத்திக்கறதே பெரிய

குள்ள: காரியமாச்சுங்களே.

காளி: அப்படியானால்...நமது படை எடுப்புக்கு...

குள்ள: இதுதான் தக்க சந்தர்ப்பம்.

காளி: நல்லது.பங்கமற்ற நமது கொங்கர் படைகளைத் திரட்டுங்கள் கோல், கம்பு, குத்துவாள், வெட்டுவாள், வில்லம்பு, வீச்சுவாள், பாருத்தடி, ஈட்டி அத்தனையும் சித்தமாகட்டும்.

குள்ள: இதோ இப்பவே தொடங்கறேன் இரசே.

காளி: வம்புக் கிழுத்து வசம் பார்த்து வெட்டவேண்டும் பயல்களை. அவர்களது வேளாண்மை நிலத்தில் நமது வளர்ப்புப் பன்றிகளை விரட்டுங்கள். நாசமாக்கட்டும். செய்தி கேட்டுப் பதைப் பதைத்து பன்றி வேட்டைக்கு வருவார்கள்.பகைவர்கள். நாம் எச்சரிக்கை யோடிருந்து மனித வேட்டையாடுவோம் (சிரித்து) மனிதவேட்டை ஆடுவோம்.

திரை

*-*-*-*-*-*

சிறுகாற்புலியூர் மாளிகை

பொன்ன: அருக்காணி ! நாடாளும் பொறுப்பை நான் ஏற்றபிறகு போராடும் வேலைக்கே நேரம்பற்றவில்லையே. நமது பெற்றோர்கள். கட்டிய பத்தினிக் கோவிலுக்கு, தேவதானமாக நிலம் விட்டு, ஆண்டுதோறும் திருவிழா நடைபெற ஏற்பாடு செய்தேனே. அது ஒன்றுதான் உருப்படியான காரியமாகத் தெரிகிறது.

அருக்: பெரியண்ணா! முதலில் பகைவரை அழித்து, அமைதியை உண்டாக்குங்கள். பிறகு இதுபோல் ஆயிரம் திருப்பணிகளைச் செய்யலாம்.

(சங்கரன், வையம் பெருமாள், வீரவாகு ஆகியோர் வருகின்றனர்.)

வையம்: பகைவரை அழிக்கவேண்டிய அண்ணன்மார் மறந்தாலும், அருமைத் தங்கை மறக்கமாட்டாள் போலிருக்கிறதே.

அருக்: காலை மிதித்த தயவரிரின் தலையை, எட்டிமிதிக்காமல் எப்படி அன்னுவிடுவது ?

சங்க: பலே அப்படிக் கேள் அருக்காணி.

(கன்னசி கோயில் பூசாரி வருகிறார்)

பூசாரி: அரசே ! அரசே! பன்னி ..கோயிலு, கொல்லும்.நெலம்:. போச்சுங்க, போச்சுங்க

பொன்: பூசாரியாரே பதறாமல் சொல்லும் என்ன போயிற்று? எங்கே போயிற்று?

பூசாரி: அரசே! பத்தினிக் கோயில் மானிய நெலத்திலெ பன்னிங்க கூட்டங்கூட்டமாவந்து, நெல்லுப்பயிறு கரும்பு எல்லாவற்றையும் அழிச்சு நாசமாக்கிட்டுதுங்க ஐயா! வெள்ளாமை யெல்லாம் போச்சே!

சங். இதற்கெனய்யா இவ்வளவு பதற்றம்? பன்றிக் கூட்டம் வந்தால் கல்லெடுத்து விரட்டுவது. மிஞ்சினால் வேலெடுத்துக் குத்துவது. பன்றிக்கு பயந்தா ஓடிவந்தீர்? நல்ல பூசாரி அய்யா நீர்

பூசாரி: பன்னின்னும் சாதாரணப் பன்னி இல்லீங்க மலையாட்டம் யானையாட்டம் கொம்பு, கல்லெடுத்தா உறுமுது, வேலெடுத்தா பாயுது. எட்டி நின்னா எமுசான் பதியுது. பட்டி நாயையும் குட்டியையும் கடிச்சுக் கொதறிப் போட்டுதுங்க. ஐயோ புந்தோட்டத்திலெ ஒரு செடி மிஞ்சயில்லீங்க எல்லாம் நாசமுங்க.

பொன்: சங்கரா!

சங்க: கட்டளையிடுங்கண்ணா.

பொன்னன்: வியப்பான செய்தி, வேதனைதரும் சம்பவம். பயிரை அழித்திடும் பயங்கரப் பன்றிகளை வேட்டையாடி மாய்க்க வேண்டும். இப்பொழுதே புறப்படுவோம் தம்பி.

சங்க: அண்ணா! யானைப்பால் குடிக்க வேங்கைப் புலிவேண்டும். குரும்பாட்டுப் பால் குடிக்க குள்ள நரிபோதாதோ, பன்றி வேட்டைக்கு நான் செல்கிறேன் அண்ணா?

அருக்கா: சின்னண்ணா! பூசாரி சொல்வதைக் கேட்க என் புத்தி கலங்குகிறது. பெரியண்ணா! பன்றிகளைக் கொல்லமட்டுமன்று, பகைவர்களை வெல்லவும் படைகூட்டி அனுப்பவேண்டும்.

பொன்: நல்லது அருக்காணி, அவ்வாறே செய்வோம். வையம் பெருமாள்! சங்கரனுக்குத் துணையாக நீரும். வீரவாகுவும் படைத்திரட்டிச் செல்லுங்கள்.

வையம்: கட்டளை அரசே. இப்பொழுதே புறப்படுகிறோம்.

(பணிந்து செல்கின்றனர்)

திரை

௮௮

## வீரமலைச்சாரல்

நிழற்காட்சி

(பெரும்பன்றி உறுமிக் கொண்டு வருகிறது. சங்கரன் வேலால் குத்திக் கொல்கிறான். வையம் பெருமாள், வீரவாகு முதலியோரும் பன்றிகளைக் கொல்கின்றனர். பன்றிப்படை அழிகிறது. மறைந்திருந்த காளியண்ணன், குள்ளன், மற்றும் பலர் ஆயுதங்களோடு வெளிப்படுகின்றனர்: நிழற்காட்சி முடிவு)

காளி: அடே மூடர்களே! எங்கள் புனிதமான பன்றிகளைக் கொன்ற பித்த இழிமகன் யாரடா?

சங்க: (சினம் பொங்க) அடே மிருகங்களே! எங்கள் தெய்வத் திருமண்ணில் பன்றியைத் துரத்தி, வேளாண்மையழித்த பேடிமகன் எவனடா?

காளி: சங்கரா! நீ யாரிடம் பேசுகிறாய் என்பது தெரியுமா?

சங்க: காளியப்பா வல்லவனுக்கொரு வல்லவனிருப்பது உனக்குத் தெரியுமா?

காளி: பஞ்சவர்ணக்கிளி திருடிய பாவி! அன்று என் வேங்கையைக் கொன்றாய். வெருண்டு ஓடிவிட்டாய். இன்று எனது பன்றிகளை முடித்தாய். பக்குவமாகச் சிக்கிக் கொண்டாய். போக்கிரிப் பயலே! மாபெரும் சக்தியுள்ள மனிதப் புலிகள் முன்பு மண்டியிடு. கால்பிடித்து, மன்னிப்புக் கேள். பிழைத்துப்போ!

சங்க: பலத்தைப் பரிசோதித்துப் பல்லுடைந்த காளியப்பா! சொல்லவும் வேண்டுமா உன் சக்தியை? மன்னிப்பு உன்னிடமா நான் கேட்பது? சிறுநாயைப் போய் சிங்கமா வணங்கிடும்? (சிரித்து) கொடியவனே! காலை ஒடிப்பேன் கைகளை வெட்டுவேன் தலையைத் துண்டிப்பேன். உனது முண்டத்தை எடுத்தும் பந்தாடுவேனடா முண்டமே!

காளி: ஆம். குள்ளா, சண்டா, கோவேரி, வீசுங்கடா ப வெட்டிச் சாயுங்கள், குத்திக் கொல்லுங்கள் பிணங்களை.

சங்க: வையம் பெருமாள்! வீரவாகு! பாயட்டும் நமது படைகள் மாயட்டும் பகைவர்கள்! நடக்கட்டும் சங்காரம்! நடக்கட்டும்.

(நிழற்காட்சி)

(இரு படைகளும் மோதிப் போராடும் பயங்கரம் கூச்சல், ஆரவாரம், கொலை, சாவு, முதலியன)

திருகாற்புலியூர் மாளிகை

(பொன்னர் ஆலோசனையோடு உலவுகிறான் அருக்காணி வருகிறாள்)

அருக்கா: (குமறி) பெரியண்ணா! பெரியண்ணா பஞ்சவர்ணக் கிளி பாலமுது உண்ணவில்லையே; மாடப்புரு தானாக மடிந்துவிட்டதே. மயிலும் குயிலும் இரையெடுக்கவில்லையே! என்னகாரணம்? ஏனிந்த அபசகுனம்?

பொன்: அருக்காணி அம்மணி! தைரியம் தேவைப்படும் நேரத்தில், சகுனத்தைப் பார்த்து, சங்கடப்படாதே! கன்னி தேவி நம்மைக் கைவிடமாட்டாள்!

அருக்க: நமது வெற்றிக்காகப் பத்தினி தெய்வத்தை வழிபடுவோம். வாருங்களென்று அண்ணிமாரை அழைத்தேன். மாட்டேன் என்று மறுத்துவிட்டார்களண்ணா அந்தப் பாவிகள்!

பொன்: உனது வழிபாடும் விரதமும் போதாதா அருக்காணி! அவர்கள் வேறு இதற்கு வேண்டுமா? அமைதி கொள் அருக்காணி.

(வீரனொருவன் ஓடி வருகிறான்)

வீரன்: அரசே! பொன்னரசே!

பொன்: என்ன செய்தி?

வீரன்: பன்றியை விட்டது பகைவோரட வேலங்க. அதன் பின்னாலே காளியப்பனோட வேட்டுவப் படைங்க சண்டைக்குத் தயாரா வந்திட்டாங்க. அரசே! வீரமலைச்சாரல்லே மும்முரமா சண்டை நடக்குதுங்க! ரெண்டு படையும் படபடன்னு வெட்டிக்கிட்டு, மாயுதுங்க! குள்ளன் வையம் பெருமாளைக் கொன்னுட்டானுங்க! இளவரசர் குள்ளனைக் கைவேறயாக்கி கால் வேறயாக்கிழிச்சுப் போட்டுட்டாருங்க!

பொன்: ஆ! என் வீர மைத்துனன் மடிந்துவிட்டானா?

வீரன்: ஆமாங்க அரசே! நமக்குப் படை பத்தாதுங்க கோட்டையிலே உள்ள படையெல்லாம் கொண்டான்னு இளவரசர் சொன்னாருங்க

பொன்: (கண் துடைத்து) நல்லது. கோட்டைக்குள்ளிருக்கும் நமது நிலைப் படை முழுவதையும் கொண்டு செல். குதிரை வீரர்களில் ஐந்நூறு பேரையும் அழைத்துச் செல்! இதோ நானும் புறப்பட்டுவிட்டேன்.

வீரன்: நல்லதுங்க (போகிறான்)

அருக்கா: பெரியண்ணா! போர்முனைக்குப் போகிறீர்களா?

## காட்சி - 41



பொன்: ஆம் அருக்காணி ! போய்தானே தீரவேண்டும்?

அருக்கா: அண்ணா! உங்கள் வீரத்தின் குறிக்கோளும் என் விரத வைராக்கியமும் வெற்றி பெறும் வேளை நெருங்கிவிட்டது. இதோ என் விரலறிந்து இரத்தத் திலகமிடுகிறேன். ஆரத்தி சுற்றி வழியனுப்புகிறேன்.

(சென்று ஆரத்தி எடுத்து வருகிறாள்)

பாட்டு

அருக்காணி:
அண்ணன்மார் இருபேரும் அருஞ்சமர்க் களத்தில்
ஆற்றலுடைப் பெருவாழ்வின் அறமதனைச் சொல்லுக.
எண்ணமெலாம் செயலாக்கி ஏற்றபுகழ் எய்துக.
என்னண்ணன் சின்னண்ணன் பெரியண்ணன் வெல்லுக

குன்றுடைய கோமானின் குலமதில் வந்தோம்
குற்றமதைப் போக்குவதில் வெற்றிபெற வேண்டும்
மன்றுடைய மதியுடைய மாண்புடைய வீரர்
மனிதரிலே தெய்வமென மாநிலமே போற்றும்!

(கண்ணேறு கழித்து விரலறிந்து பொட்டிட்டு வணங்குகிறாள்)

பொன்: அருமைத் தங்கை அருக்காணி! சென்று வருவேன்! பகைவரை வென்றுவருவேன் .

(செல்கிறான்)

திரை:

படுகளம்

(முன்னிரவு குறைப்பிணங்கள், ஒடிந்த படைக்கலங்கள் முக்கல், முனகல், சாவுக்குரல், சுடுகாடு போன்ற பயங்கர சூழ்நிலை. கையிலே இரத்தம் தோய்ந்த வாள்களோடு சங்கரனும், வீரவாகுவும் நிற்கின்றனர்.)

சங்க: (சோர்வுடன்) வீரவாகு, என்னையும் உன்னையும் தவிர படுகளம் எல்லோரையுமே காவு கொண்டுவிட்டது. நாம அடைந்தது; வெற்றியா? தோல்வியா? விளங்கவில்லையே எனக்கு.

வீரவாகு: சின்னாண்டவரே! வேட்டுவக்காளியப்பன் தப்பியோடி இருக்கிறன். நாம்ப உசிரோட இருக்கிறோமே! அவனைக் கருவறுக்காமெ விடலாமா?

சங்க: வீரவாகு! வெற்றி தோல்வி என்பது இறுதி முடிவு. அந்த இறுதி முடிவைப்பெறுவதற்காக நாம் ஓடவிட்டிருக்கும் இரத்த வெள்ளத்தைப் பார்! கொன்று குவித்திருக்கும் பிணக்குவியலைப் பார். அய்யோ! வீரமலைப் படுகளம் பல்லாயிரம். வீரர்களைப் பலி கொண்டுவிட்டதே.

வீரவாகு: நம்மளைத் தவிர மத்த எல்லாருமெ மடிஞ்சிட்டாங்க! ஆனு சின்னாண்டவரே! நாம்ப எப்படியும்காளியப்பனைக் கண்டுபிடிச்சாகனுங்க!

சங்க: (வருந்தி) நிற்பவன் வீரன். ஓடியவன் கோழை, இறந்தவர்கள்? இவர்களெல்லாம் இறந்தவர்களா? இல்லை..இல்லை.வீர சொர்க்கம் புகுந்தவர்கள்! வீரவாகுச் சாம்பன்! என் நாக்கு வரளுகிறது. தாங்கமுடியாத தாகம். அதோ அந்த வன்னி மரத்தினடியில் இருக்கிறேன். சிறிது குடிக்கத் தண்ணீர் கொண்டு வா!

வீரவா: அய்யோ! தாழ்ந்த குலத்தான் கையிலே தண்ணீர் குடிக்கிறது பாவம்னு சொல்லுவாங்களே சின்னாண்டவரே!

சங்க:1 பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்ற வள்ளுவரின் திருக்குறள் பிறந்த தாயகத்திலே வீரவாகு, சாதி குல வேற்றுமை கற்பித்தது பாவம். ..கற்பித்தவர்கள் மகா பாவிகளடா! ஆஹா! இந்தப் படுகளத்திலேயும், உயிர் வாழுகிறது பாரடா அந்த வேற்றுமைப் பேய்!

வீர: மன்னிக்க வேண்டும் சின்னாண்டவரே! இதோ தண்ணி கொண்டு

வீரவாகு: வர்றேனுங்க:.....!

(வேகமாகப் போகிறான் வீரவாகு. வன்னிமரத்தடியிலுள்ள மேடையில் சோர்வாக அமர்கிறான். சங்கரன். மற்றந்து மறைந்து, சங்கரனின் முதுகுப்புறமாக வந்த காளியப்பன் வில்லில் அம்பேற்றி சங்கரன் முதுகைக் குறிபார்த்து எய்கிறான் முதுகில் அம்பு பாய துள்ளி விழுகிறான். சங்கரன். சிரிக்கிறான் காளியப்பன்.)

சங்க: (அம்பை எடுத்துப் பார்த்து) ஆ...அய்யோ! மறைந்திருந்து என் முதுகில் அம்பெய்த மாபாவி யார்? ஆ. ...அந்தக் கோழை யார்.....?

காளி: கோழையல்லடா நான்! பகைவரை மாய்க்கவந்த மாவீரன் காளியப்பன். தலையூர்த் தலைவன் காளியப்பன்.

(இடைவிடாது சிரிக்கிறான்)

சங்க்: (பார்த்து) ஆம். காளியப்பனா? அடெ வஞ்சனை புரிந்த பேடிமகனே....வீரனா நீ ?

(வேகமாக வாளேந்தி வருகிறான் பொன்னன்)

பொன்: ( தம்பி (அலறி) மாபாவி காளியப்பா நேருக்கு நேர் போராடுவதை விட்டு, மறைந்திருந்து, முதுகிலே, அம்பெய்து கொல்வதா வீரம்? இதுவோ நியாயம்?

காளி: (வியந்து) ஆம்!, பொன்னனா?

பொன்: ஆமடா கோழையே! ஆமாம் இதோ உன் கயமைக்குத் தண்டனை. பெற்றுக் கொள்.

(கத்தியை வீசுகிறான் பொன்னன். வில்லால் தடுக்க முயல்கிறான் காளியப்பன். இறுதியில் பொன்னனின் வாளுக்கு இரையாகிறான். காளியப்பன்.)

காளி: (சுருண்டு விழுந்து) ஆ....ஐயோ (மடிகிறான்)

பொன்: தம்பி சங்கரா அம்பெய்தகாதகனை மாய்த்துவிட்டேனடா.

சங்க: அண்ணா! எவரது ஆற்றலுக்கும் அடிபணியாத, வெற்றி வீரனாகத் திகழ்ந்த என் முதுகில் படுகாயம் பட்டுவிட்டதே அண்ணா. முதுகுப் புண் பட்டுவிட்டதே. நான் பொல்லாத பேடியோ? புறமுதுகிட்ட கோழையோ? அருமை அண்ணா? நான் கோழையா?

பொன்: (கட்டித் தழுவி). தம்பீ. வீரனடா நீ. வீரன் மாற்றானுக்குப் பணியாத மாவீரன். உன் மீது மறைந்திருந்து அம்பெய்தானே. அவன் பேடி, கோழை.....

சங். என் பொன்னனா அண்ணா! நான் கோழை போலவா மாளவேண்டும்.

பொன்: அன்புத் தம்பி கவலைப்படாதே அம்பு பட்ட புண்ணை நான்

பொன்னன்: ஆற்றுகிறேன். குழந்தைப் பருவத்தில் சிவயோகி யார் நம்மைப் பிழைக்க வைத்த மூலிகை மருந்து எனக்குத் தெரியும். அதைக் கொண்டு வந்து உன்னைப் பிழைக்க வைப்பேனடா.

சங்: வேண்டாமண்ணா! வேண்டாம். முதுகுப் புண் பட்டதால் என் வீரவாழ்வு மாசுபட்டது. நான் தூய்மையுள்ள வீரனென்றுலில் இனி உலகில் வாழக்கூடாது ஆம் வாழக் கூடாது..

பொன். நீ இப்படியெல்லாம் பேசக்கூடாது தம்பி. நீ களங்கமற்ற வீரன் என்பதை, உலகம் நன்கு அறியும்.

சங்: இல்லையண்ணா! என்னை மன்னித்துவிடுங்கள். நான் வாழுவது கொங்கு வேளிர் குடிக்கே இழுக்குத் தேடுவதாகும். போர் முனையில் முதுகுப் புண்பட்ட மாமன்னன், நெடுஞ்சேரலாதன் வடக்கமர்ந்து உண்ணாதிருந்தன்றோ உயிர் துறந்தான்.. ஆம்.. நானும் வீரமரணம் எய்தவேண்டும். யோக நித்திரை புரிந்து என் ஆன்மாவை இறைவனின் பேரொளியில் ஒடுக்க வேண்டும். கருணைக்கூர்ந்து அனுமதியுங்கள் அண்ணா! அனுமதியுங்கள் (காலைப் பிடிக்கிறான்)

பொன்: (யோசித்து) தம்பி சங்கரா! உன் விருப்பம், யோகநெறி கற்ற ஒரு மான வீரனுக்குரிய நியாயமான விருப்பம். இதனை எப்படியடா நான் மறுப்பேன். ஐயோ! பெருங்குடியின் தன்மானக் காவலனே! வீரத்தின் இலக்கணமே! வல்லாண் மைக்காரனே. என் தம்பி உன் விருப்பம் நிறைவேறட்டும். நிறைவேற்றும். உன் விருப்பம்..

சங்: சிவோகம்....சிவோகம்... (தள்ளாடி எழுந்து சங்கரன் வீரமண்டியிட்டு கைகூட்டி யோக நித்திரையில் அமர்கிறான். "சிவோகம்" வாயில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. ஒலி நின்று உடம்பு விறைக்கிறது.)

பொன்: அந்தா! ஆண்டவன் நினைவிலே ஆவியை ஒடுக்கி அரிதுயில் கொண்டான் என் இளவல்.......தம்பி சங்கரா. ஒருதாய் வயிற்றில் சேர்ந்தே பிறந்தோம். ஒரே ஆசானிடம் கல்வி கற்றோம். ஒரு தாயின் மகளிரையே மணந்தோம். ஒரே விரதத்தைக் கைக் கொண்டோம். வாழ்விலே சேர்ந்து வாழ்ந்தோம். சாவில் மாத்திரம் என்னைப் பிரித்துவிட்டாயடா இது உனக்கு ஞாயமா தம்பி? பிறப்பிலே நான் உனக்கு அண்ணன் இறப்பிலே நீ எனக்கு அண்ணனாகிவிட்டாய்! ஒரு காம்பின் இருமலர்கள் ஒன்று உதிர்ந்து மற்றொன்று மலர்ந்திருக்க முடியுமா?

பொன்: முடியாது தம்பி. நான் உன்னைப் பிரிந்திருக்க முடியாது தம்பி.

(தன் கைத்தாமைமார்பில் கத்தியால் குத்திக் கொண்டு, தள்ளாடி எழுந்து தம்பிக்கு வலது புறத்தில் வீரமண்டியிட்டு, யோக முத்திரையில் உட்காருகிறன். சிவயோகம், சிவோகம் " என்று சொல் மெதுவாக நின்று உடல் விரைக்கிறது. வீரவாகு தண்ணீருடன் வருகிறன்)

*வீரவாகு: (பதைத்தவனுக) ஐயோ பெரியாண்டவரே! இதென்னங்க அலங்கோலம் (தண்ணீர்ச் செம்பு நழுவி விழுகிறது, சுற்று முற்றும் பார்த்தவனுக) என்ன இது! சின்னண்டவர் முதுகிலெ புண்ணு. பேடி வேட்டுவக் காளியப்பந்தான் இதைச் செய்திருப்பான். அதைப் பார்த்த பெரியாண்டவரு காளியப்பனைக் கொன்னுட்டு, தம்பியைப் பிரிஞ்சிருக்க முடியாமெ தன்னையே மாச்சிக்கிட்டு இருப்பாருன்னு தெரியுது. அய்யெய்யோ.

(அலறித் துடிக்கிறன். பிறது எழுந்து அருக்காணியம்மா அருக்காணியம்மா! என்று கூவிக் கொண்டே ஓடுகிறன்)

திரை

⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕⊕

மாலிகை

தள்ளாடியபடி வீரவாகு வருகிறான்)

வீரவாகு: அருக்காணி அம்மனி, அருக்காணி அம்மனி! (அழுதல்)

அருக்காணி: வீரவாகு! ஏன் இப்படித்தள்ளாடுகிறாய்? சண்டையில் நமக்கு வெற்றியா தோல்வியா?

வீரவாகு: இரண்டுந்தான் தாயே! வேட்டுவர் எல்லோரும் செத்துட்டாங்க நம்ம படையெல்லாம் அழிஞ்சிட்டுதுங்க. மிஞ்சியிருந்தா காளியப்பன், மறைஞ்சிருந்து முதுகிலெ அம்பு போட்டு சின்னண்டவரை.. கொன்று போட்டான். பெரியாண்வர். . காளியப்பனைக் கொன்னுட்டு அவரும்.... பெரியாண்டவரே. சின்னண்டவரே வர்ரந்தாயே நெஞ்சைப் பிடித்துக் கொண்டே கீழே சாய்கிறான். ........ (ஆவி பிரிகிறது)

அருக்கா: ஐயோ! செத்துவிட்டானே வீரவாகுச் சாம்பன். பகை முடிக்கச் சென்ற அண்ணன்மார் படுகளத்தில் மடிந்தார்கள் மடிந்தே விட்டார்கள். ஐயோ! ஆற்றல் நிறை என் அண்ணன் மாரின் அன்பு மொழியை இனிக் கேட்கமுடியாதா? அருட் பார்வையை இனிப் பார்க்க முடியாதா? ..தேவி! ஐயோ அண்ணன்மாரில்லாத சூன்ய உலகத்தில் இந்த அருக்காணிக்கு வாழ்வெதற்கு. அவர்களை மணந்து கொண்ட பூவாயிக்கும் ராமாயிக்கும்தான் இனி வாழ்வெதற்கு? அரண்மனையோடு நெருப்பிட்டுப் பொசுக்கி விடுகிறேன். அந்த அிறக்கிகளை.. பிறகு ஐயோ..இருள் கவிந்த நேரத்தில் என் அண்ணமாரைப் பார்க்க படுகளம் எப்படிச் செல்வேன்? எனக்கு வழிவகை தெரியாதே. படுகளம் எப்படிச் செல்வேன்? எனக்குற்ற துணை யாருமில்லையே, அண்ணமாரே எனக்குத் துணை யாருமில்லையே. (கைகூப்பி) கன்னகி தேவி, கொங்குச் செல்வி! சத்தியத்தை முன்வைத்து வேண்டுகிறேன். நான் பத்தினிப் பெண், கன்னியறம் காத்த புண்ணியவதி என்பது மெய்யானால் அண்ணமார் இறந்து கிடக்கும் படுகளத்திற்கு வழிகாட்டு, வழிகாட்டு.

(கன்னியோகி (பெரியகாண்டி" வருகிறாள்)

பெரிய: கன்னியோகி அருக்காணி! கவலைப்படாதே நான் வீரமலையில் தவமிருக்கும் பெரிய காண்டி. உன்னைப்போல் ஒரு கன்னியோகி உனக்கு நான் வழிகாட்டுகிறேன். வாம்மா வா!

அருக்: தேவி.....உனதருள் வாழ்க. (பெரியகாண்டியைப் பின் தொடர்ந்து அருக்காணி செல்கிறாள்)

படுகளம்

(பொன்னரும், சங்கரனும், வீரமண்டியிட்டுயோக முத்திரையில், விரைத்து நிற்கின்றனர். வானத்தில் நட்சத்திரங்கள் மின்னுகின்றன: நிலவு ஒளி சிந்துகிறது. பெரிய காண்டியும் அருக்காணியும் வருகின்றனர்:)

பெரிய: அருக்காணி! இந்த நள்ளிரவு வேளையில் வீசுகின்ற நில வொளியில் ஈ எறும்பு மொய்க்காத மாசுமருவற்ற நிலையில் அதோ, வீரமண்டியிட்டு அரிதயில் கொள்ளும் அண்ணமாரைப் பாரம்மா.

அருக்கா: சின்னண்ணா! பெரியண்ணா! உங்கள் தங்கை அருக்காணி, வந்திருக்கிறேன். பாருங்கள்ண்ணா!..பாருங்கள் ஐயோ! என்னைப் பார்க்க முடியாத மோனத்தில் அமர்ந்துவிட்டீர் களோ; ஆருயிர் அண்ணமாரே! அம்மணி! அருமைத் தங்கையே! என்றழைக்கும் அன்பு மொழி எங்கே!? அருட்பார்வை எங்கே? நடுநிலை வாடாத நாடாளும் நீதி எங்கே!? வாளிடிந்ததலும் மனம் இடியாத வல்லமை எங்கே? வளமான வீரமெங்கே? எங்கே எங்கலே? ...கடைப்பிடித்த யோக நெறி கானல் நீராயிற்று? பொங்கி நிற்கும் வீரமலையே! என் அண்ணமாரின் வீரம் கண்டு பொறுமை அடைந்தாயோ? புரித்த வேங்கைப்புலியே! என் அண்ணமார் பொன்னுடலம் தழுவ விரும் பினையோ? .....ஐயோ பலி கொண்டுவிட்டீர்களே.

(கதறுகிறாள்)

(சிவயோகியார் வருகிறார்)

சிவ: சிவோஉறம்! சச்சிதானந் தம்!.....

அருக்: சுவாமி! சுவாமி! (காலில் விழுகிறாள்) பாருங்கள் சுவாமி! பாருங்கள், பாராண்ட வீரர்களை பாருங்கள், நீங்கள் உயிர் கொடுத்த மைந்தர்களைப் பாருங்கள், புண்படாவுடம்பும், புரை படாமனமும், பொய்படா ஒழுக்கமும் பொருந்தி வாழ்ந்த என் அண்ணமாரைப் பாருங்கள். சித்ர மணிக்கூடத்திலே கொலு வீற்றிருக்கவேண்டியவர்கள், காடுவனவாசம், கானகரை குடியிருப் பாய் விட்ட காட்சியினைப் பாருங்கள்.

குன்று: மகனே! அழுது புலம்பி அண்ணமாரின் தம்பியைக் குறைக்காதே பூதவுடம்பை நீத்து புகழுடம்பு பெற்றுவிட்டார்கள். இங்கே வல்லாண்மையோடு போரிட்ட வீரவடிவங்களைப் பார்க்கிறேன். இன்னும் இவர்களுக்கு மேலாய் நிரந்தரமாய் நின்றெளிரும்

குன்று: புலியை யானை. தங்கக் கதிர்களையும் பார்க்கிறேன் மகளே.

அருக்காயி: அது எனக்குத் தெரியவில்லையே சுவாமி.

குன்றுடையான்: கண் திறந்து பார் மகளே! மனித வாழ்வின் படிக்கற்கள் மூன்று. அவற்றை ரோகி, போகி, யோகி என மூன்றாகப் பிரிப்பர். இவற்றிலே ரோகியின் வாழ்வு துன்பத்தில் முடிவது, போகியின் வாழ்வு இன்பத்திலே தொடங்கி துன்பத்திலே முடிவது, யோகியின் வாழ்வு இன்பத்திலே தொடங்கி இன்பத்திலேயே முடிவது. அந்தத் தத்துவத்தை மெய்ப்பித்தவர்கள். உன் அண்ணன்மார்கள்.

அரு: தந்தையே! இனி நான் அழமாட்டேன். அண்ணமார் பெற்று விட்ட பேரின்பவாழ்வை, என் கண்ணீரால் களங்கப் படுத்த மாட்டேன்.

சிவ: மகளே! அண்டம் முழுவதும் நிறைந்திருக்கும் பரம் பொருளின் சிறுதுளியே மனிதன். இயற்கையில் தோன்றியவன். இயற்கையிலேயே கலந்து விடுகிறான். உன் அண்ணன்மார்கள் செய்யற்கரிய செய்தனர். ராஜயோகியராகி பெறற்கரிய பெருநிலை பெற்றனர். பெருவீரம் விளைத்தனர். இறந்தும் இறவாதவராய், கரைந்தும் கரையாதவராய் நின்று பரம் பொருளோடு ஒன்றிக் கலந்துவிட்டார்கள். இதுவே தெய்வீக நெறி. இதுவே தெய்வீக இயற்கைத் தத்துவப் புனித நெறியாகும்.

(செல்லாத்தாள் தலைவிரிகோலமாக ஓடிவருகிறாள்)

செல்: பொன்னு! சங்கரா! என் மக்களே! என்னை மன்னிச்சிருங்க இந்த குலதுரோகியை மன்னிச்சிருங்க. இந்த நிலைக்கும் காரணம் நான்தான். (என்று வீரமண்டியிட்டிருக்கும் அண்ணமார்களின் பாதத்தில் தரையில் முட்டிமோதிக் கொள்கிறாள் எழுந்து) மகளே அருக்காணி! அம்மணி நீயும் இந்தப் பாவியை மன்னிச்சிரு தாயி; (சிவயோகியாரைப் பார்த்து) தெய்வமே! என்னை மன்னிச்சிருங்க (காலில் விழுந்து கட்டிக் கொள்கிறாள்)

சிவ: செல்லாத்தாள்! எழுந்திரு. பரம்பொருள் உன்னை மன்னிப்பாராக.

செல்லா: (எழுந்து) சுவாமி என் அண்ணன் எங்கிருக்கிறார்? அவரை நாம் பார்க்கணுமே

சிவ: அவர் யோக மார்க்கத்தில் ஈடுபட்டு, பேரின்ப நிலையை எட்டிக் கொண்டிருக்கிறார். அது அவரை ஆட்கொண்டுவிட்டது.

செல்: (எங்கோ பார்த்தவாறு) அன்னை! நீங்கள் அறிவுத் தெய்வம் நீங்கள் பெற்றெடுத்த பொன்னரும் சங்கரரும் என் வீரத் தெய்வங்கள் வீரத் தெய்வங்கள் (அங்கமுழுதும் தரையில் படிய வணங்குகிறான்)

அரு: சுவாமி! யாருமற்ற அனாதையாகிவிட்ட எனது நிலை? இந்தநிலை

செல்லா: மகளே! நீ அனாதையென்று சொல்லாதே (நெஞ்சில் அடித்து) இந்தப் பாவி ஒருத்தன் இருக்கேம்மா, நான் உன்னைக் காப்பாத்தறம்மா. (அழுகிறான்)

சிவ: மகளே! உனது கன்னியறவாழ்வு, இதோ இந்த வீரமலையில் நிகழட்டும். கன்னியோகி, பெரியகாண்டி உனக்குத் துணையாக இருப்பார். போம்மா!

(அண்ணம்மார்களையும், சிவயோகியரையும் வணங்கிவிட்டு பெரியகாண்டியுடன் மலைமேல் ஏறுகிறாள்)

சிவயோகி: செல்லாத்தானே!

செல்லா: சாமி.

சிவயோகி: நீ செய்த பாவத்திற்குப் பரிகாரமாக இதோ யோக சித்தியும் பெற்று ஒளிமயமாகி நிற்கும் இந்த ஒப்பற்ற தமிழ் வீரர்களுக்கு, சிலை எடுத்துத் தமிழ் நாடெங்கும் வழிபடச்செய். ஆண்டுகோறும் விழா எடுத்து வீரத்தைப் பரப்பு.

நினைப்பது தமிழ், பேசுவது தமிழ், செயல் எல்லாம் தமிழன் வகுத்த வழி. பிறகு ஏன்? சேரன், சோழன் பாண்டியன் என்ற குடிப்பகை? வேட்டுவர் வேளாளர் என்ற இனப்பகை? உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற சாதிப் பாகுபாடு? பகைமறந்து ஒன்றுபடுங்கள். நாடு வாழட்டும் "ஒன்றே குலம். ஒருவனே தேவன்" என்ற தமிழ் மொழி நின்று நிலவட்டும். சிவோகம்! சச்சிதானந்தம்!

(சிவயோகியார் செல்கிறார் மனம் மாறிய செல்லாத்தான் மௌனமாக நிற்கிறான். பம்பைப் பாட்டு ஒ

<u>பம்பைப் பாட்டு</u>

1. இறந்தும் இறவாதவராய் சிறந்தாரே அண்ணன்மார்கள்
மறைந்தும்மறையாச் சிலைகள் மாண்புடைய வீரதெய்வ
பிறந்தவர் எல்லாம் பெருமை பெறுவதன்றோ இதுபோ
பெற்றவர் வாழ்க தமிழ் பெரு வீரம் மிக வாழ்க!

2. குன்றுடையான் கதைகேட்டோர் கேட்க வகை செய்தவர்கள்
ஞாலமுள்ள செந்தமிழ்போல் குறை தீர்க நனிவாழ்க!
என்றுமிந்த வீரர்புகழ் எழிற்கலையாய் வாழியவே!
ஏற்றமிகும் நல்லறங்கள் போற்றியிந்தப் புவிவாழ்க!

சுபம்



<u>கலைமாமணி சலகை ப. கண்ணனார் அவர்களின் வாழ்க்கை குறிப்பு</u>

திரு. கண்ணனார் அவர்கள் 15.4.1913 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் மேட்டூர் வட்டத்தைச் சேர்ந்த சலகண்டபுரத்தில் திரு. பச்சையண்ணனாருக்கும், திருமதி.சிவகாமியம்மையார் அவர்களுக்கும் அருந்தவச் செல்வனாக பிறந்தார்.

இவர் பள்ளியில் பயின்ற காலத்தில் தனது தாய் மாமனிடம் முறையாக இன்றமிழசை பயின்றதுடன், புகழ் பெற்ற புலவரேரு. அ. வரதநஞ்சய்யனாரிடம் பாங்கோடு தமிழ்ப் பாடமும் கேட்டு, பண்ணோடு இசையும் தமிழும் தேர்ந்த இயல், இசை, நாடகத்தில் சிறந்த முத்தமிழ் வித்தகரானார். இவர் 1926 ஆம் ஆண்டு முதல் பெரியார் அவர்களின் பகுத்தறிவு இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு வந்துள்ளார்.

1930 ஆம் ஆண்டு திருமதி. சிவகாமி அம்மையாரை மணந்து இல்லறம் மேற்கொண்டார். இவரது இலக்கிய பணிக்கும், சீர்திருத்த கொள்கைகளுக்கும் துணைவியார் உறுதுயையாக இருந்தார். இவர்கள் ஒரு ஆண்மகனும், ஏழு பெண்மக்களும் பெற்றனர்.

இளம்வயதில் “தமிழன்” “குடியரசு” ஈரோட்டுப் “பகுத்தறிவு” “தமிழரசு” “பிரசண்ட விகடன்” “ஆனந்தபோதினி” “நகரதூதன்” போன்ற பத்திரிகைளில் பாடல்கள், கட்டுரைகள், சிறுகதைகள் ஆகியவற்றை எழுதியதுடன், தாமே “பகுத்தறிவு” என்ற திங்களிதழைத் தொடங்கி தமது சொந்த செந்தமிழ் அச்சகத்தில் அடித்து அனைத்து நூல்களையும் தனது தென்றல் நூல் பதிப்பு கழகம் என்ற பெயரில் வெளியிட்டார்.

பழகுவதற்கு இனிய நலம் வாய்ந்தவரும், கள்ளங்கபடமற்ற குழந்தையுள்ளம் படைத்தவரும், இனிப்பாகவும் கருத்தாழத்தோடும் பேசுபவருமான இவரது கலைப்பணி, பல்வேறு துறைகளிலும் பரவி நின்று இவரை எழுத்தாளர், நாடக ஆசிரியர், இசைப்புலவர், நடிகர் என்ற பல்துறைகளிலும் சிறப்புள்ளவராக விளங்கினார். இத்தகைய சிறப்புக்கள் பேரறிஞர் அண்ணா அவர்களின் பாராட்டினைப் பலமுறை பெற்றளித்திருக்கிறது.

இவர் நாடக மேடைக்கெனத் “தமிழ்வாழத் தலைக் கொடுத்தான்” “வீரவாலி” “பகைமை வென்றான்” “பாண்டிய மகுடம்” “தென்னவன் சின்னமலை” “நந்திவர்மன்” “குன்றுடையான்” போன்ற தலைசிறந்த வரலாற்று நாடகங்களை எழுதியிருப்பதுடன், திரைப்படங்களுக்கெனவும், வனொலிக்கெனவும் பல கதைகள் உரையாயடல்களை

உருவாக்கிய சிறப்பையும் பெற்றிருக்கிறார். இவரது ‘‘குன்றுடையான்’’ என்ற நாடகம் 1968 ஆம் ஆண்டு தமிழ் நாட்டுச் சங்கீத நாடக சங்கத்தின் பரிசுற்குரியதாய்த் தேர்ந்தெடுக்கப் பெற்று அன்றைய மேதகு ஆளுநர் அவர்கள் கலைமாமணி என்ற விருதனை தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின சார்பாக வழங்கினார்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு நாடகம் வரையத் தொடங்கிய இவர் அறிஞர் அண்ணா அவர்களின் கருத்துக் கலைப் பரம்பரையில் ஒருவன் என்பதிலே பெருமையடைபவர். இவரது ‘‘ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி’’ ‘‘போஜன்’’ ‘‘ஆதித்தன் கனவு’’ ‘‘பொன்முடி’’ ‘‘பாசவலை’’ போன்ற திரைப்படங்கள் வலுவான கதைக்கும், வளமான உரை நடைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குபவை.

இவரின் நாடக இலக்கியத் தொண்டினைப் பாராட்டும் வகையில் இன்றைய தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் தலைமையில் புரட்சி நடிகர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் 10.8.1963 ல் திருச்சிராப்பள்ளியில் பொன்னாடை போர்த்தினார்கள்.

எவரும் எதிர்பாராத நேரத்தில் 21.4.1971 ம் தேதி திடீரென மாரடைப்பால் இயற்கை எய்தினார். இவர் மறைந்த செய்தியைக் கேட்டவுடன் அன்றைய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் தன் அனுதாபச் செய்தியை அனுப்பினார். மாண்புமிகு அமைச்சர். க. இராசராம் அவர்கள் தமிழக அரசின் சார்பில் நேரில் வந்து இறுதி மாரியாதை செய்து பெருமைப்படுத்தினார். சலகை கண்ணனார் அவர்களின் எழுத்துக்களில் அடக்கமும், ஆழமும், நிறைவும் அமைந்திருக்கும். இவரது ஐம்பத்தெட்டு ஆண்டு வாழ்க்கையில் மிக சிறந்த பல நாடகங்களை அளித்திருப்பதுடன் தமிழ் மரபு குன்றாத பைந்தமிழ்ப் பாடல்களையும் இயற்றி தமிழுக்கு தொண்டாற்றியுள்ளார்.

கலைமாமணி சலகை ப.கண்ணனார் அவர்களால் எழுதப்பட்ட நூல்களில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்திற்கு கொடுக்கப்பட உள்ள நூல்களின் பெயர் விபரம்

1. நந்தி வர்மன்
2. குன்றுடயான் (கதையும் பாடலும்)
3. மின்னொளி
4. காதல் மணம்
5. குறள் நெறி இசையமுது (முதல் பகுதி)
6. குறள் நெறி இசையமுது (இரண்டாம் பகுதி)
7. சிந்தனைச் சித்திரம்
8. பதினாறும் பெறுக
9. பட்டவராயன்
10. பகுத்தறிவு (1951)
11. பகுத்தறிவு (1956)
12. குன்றுடையான் அண்ணமார் கதை ( கை பிரதி)